பக்கங்கள்: இருபத்தெட்டு

# உதயன்

விலை ரூபா 15.00

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 வைகாசி 9 ஞாயிற்றுக்கிழமை (23.05.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 178

# "மனிக் பாம்" முகாம் செல்ல கூட்டமைப்புக்குக் கதவடைப்பு!

## கோத்தபாய உத்தரவுப்படி அனுமதி இல்லையென தளபதி கைவிரிப்பு!!

வவுனியா,மே23

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியா 'மனிக் பாம்' முகாமில் தடுத்துவைக்கப் பட்டிருக்கும் தமிழ்அகதிகளைச் சந்திக்கவென, நேற்று அங்கு சென்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பன்னிரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கதவடைப்புச் செய்யப்பட்டது.

"பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் உத்தரவின் பிரகாரம் எவரும் முகாமுக்குச் செல்லமுடியாது" - என்று வன்னிப் படைகளின் தளபதி கைவிரித்து

## அகதி முகாம் மக்களின் உண்மை நிலைமை வெளியுலகுக்குத் தெரியாது தடுப்பதே நோக்கம்

### அரசின் கதவடைப்புக் குறித்துச் சம்பந்தன்

வவுனியா,மே23

வவுனியா முகாங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்களின் உண்மையான நிலைமைகள், பிரச்சினைகள் வெளியுலகுக்கு தெரிவதை தடுக்கும் நோக்கில் எம்மை அகதி முகாம் மக்களை சந்திக்கத் தடைவிதித்திருக்கலாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

வவுனியா 'மனிக் பாம்' முகாமிற்குச் செல்வதற்கு கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது

(28ஆம் பக்கம் பார்க்க)

## தெற்கில் தொடர்கிறது மழை; இதுவரை இருபது பேர் பலி!

கொழும்பு,மே23

தெற்கில் தொடரும் மழையால் நேற்று வரை 20பேர் பலியாகினர். ஆறுலட்சம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்கள் உட்பட 14 மாவட்டங்களில் வெள்ளம் காரணமாக 141,586 குடும்பங்களைச் சேர்ந்த 606,072 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

ஐ.நாவின் உலக உணவுத்திட்ட அதிகாரிகள் மற்றும் அரச அதிகாரிகள் மேற்கு மாகாணத்தில் பல்வேறு இடங்களுக்கும் சென்று வெள்ள நிலைமை குறித்து ஆராய்ந்தனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு சமைத்த உணவை அரசாங்கம் வழங்குகிறது. 400,000 பேருக்கு ஐ.நா. அமைப்பு உலர் உணவு களை வழங்குகிறது.

உயிரிழந்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என அனர்த்த முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது. (அ-1)

## தமிழகத்தில் உள்ள 1லட்சம் ஈழஅகதிகள் விரைவில் இங்கு மீளக்குடியமர்த்தப்படுவர்

### அமைச்சர் மில்றோய் தகவல்

கொழும்பு,மே23

இலங்கையிலிருந்து தமிழகம் சென்று நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள தமிழர்களை அழைத்து வந்து அவர்களின் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துவது தொடர்பான திட்டம் வகுக்கப்பட்டு வருகின்றது.

மீள்குடியமர்வு அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ மேற்கண்டாவாறு தெரிவித்தார்.

(28ஆம் பக்கம் பார்க்க)

## போர்க் குற்ற விசாரணை நெருக்கடி; ஐ.நா.செயலரைச் சந்திக்கின்றார் பீரிஸ்

கொழும்பு,மே23

இலங்கை மீது அடிக்கடி குற்றஞ்சாட்டப்பட்டுவரும் போர்க்குற்ற விசாரணை தொடர்பாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இன்று அல்லது நாளை ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ - மூனுடன் பேச்சு நடத்தவுள்ளார்.

இலங்கையில் கடந்த வருடம் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள்

(28ஆம் பக்கம் பார்க்க)

### தரையிறங்கியவேளை விமானம் தடுமாறி 10 கிலோ மீற்றருக்கு தூக்கி வீசப்பட்டது!

## மங்களூர் விமான விபத்தில் 160 பேர் கருகிப் பலி! 8 பேர் தப்பினர்!!

புதுடில்லி, மே23

துபாயிலிருந்து கர்நாடகா மாநிலம் நோக்கி வந்துகொண்டிருந்த 'எயர் இந்தியா' விமானம் த்ளத்தில் தரையிறங்கும் போது ஏற்பட்ட விபத்தினால் 19 குழந்தைகள் உட்பட 160 பேர் உயிரிழந்தனர். அதிர்ஷ்டவசமாக 8 பேர் மட்டுமே உயிர் தப்பினர்.

இந்த கோர விபத்துச் சம்பவம் நேற்றுக் காலை 6.30 மணியளவில் இடம்பெற்றது. விபத்துக்குறித்து மேலும்தெரியவருவதாவது:-

மங்களூர் நோக்கி வந்த 'எயர் இந்தியா' விமானம் காலநிலை சீரின்மை, போதிய வெளிச்சம் இன்மை நிலவிய வேளையில் தரையிறங்கும்போதே விபத்துக்குள்ளானது.

விமானியால் விமானத்தின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாது போகவே, நிலை தடுமாறிய விமானம் ஓடு தளத்தில் இருந்து 10 கிலோ மீற்றர் தூரம் வரை தூக்கி வீசப்பட்டது. இதனால் விமானம் தீப்பற்றி எரிந்தது.

(28ஆம் பக்கம் பார்க்க)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் நகரில் Nokia Phone ஏகவிநியோகஸ்தர்கள்




Phone Shop

Soft Logic
திறமைந்திக் 1 வருட
உத்தரவாதத்துடன்
Nokia Original Phone

திருமுருகன் கொம் நெற்
259 கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம் T.P No: 021 222 7835
46 ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி


## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் 25.05.2010 காலை 8மணிக்கு விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.
றாஜீவ், நவாலிவீதி,
ஆனைக்கோட்டை.
தொ.பே. 0212222867,0776090926

## வாடகைக்கு

பிறவுண் வீதி,1ஆம் ஒழுங்கையில் நிறுவனங்களுக்கு, ஆண்களுக்கு, Sale Reps இற்கு, களஞ்சிய வசதிகளுக்கு வீடு, அறைகள் வாடகைக்குண்டு. தொடர்பு-0779578244

## வீடு விற்பனைக்கு

யாழ்.அத்தியடி ஸ்ரான்லி வீதியில் உத்தேசமாக 3½பரப்புக் காணியும் சுற்று மதிலுடன் கூடிய வீடும் விற்பனைக் குண்டு. அண்மையில் திருத்தியமைக் கப்பட்டது. தொடர்பு-0773212227

## வீடு,காணி விற்பனைக்கு

வட்டுக்கோட்டை சங்கரத்தை சந்திக்கு சமீபமாக (200m) திருஞான சம்பந்தர் வீதியில் நன்னீர் வளங்களுடன் வீடும் காணியும் உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு -
0777043852, 0773313104

## உணவகங்களுக்கு

* மிஷின் மூலமாக மா பிசைந்து கொடுக்கப்படும்.
* கேக் கலவை செய்து வெதுப்பிக் கொடுக்கப்படும். தொடர்பு - யாழ்.-மானிப்பாய் வீதி, ஆனைக் கோட்டை (பூபதிகாட்சியறை அருகில்)
தொ.பே.0773655184

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த (1977)ஆம் ஆண்டு பிறந்த, அச்சுவினி, கிரக பாவம்11,செவ்வாய் தோஷமற்ற Dental Doctor இற்கு தகுதியான மணமகள் தேவை.
தொடர்பு-0776917784, 0772873318

## வாகனம் வாடகைக்கு உண்டு

அசோக் லேலண்ட் (ஹன்ரர்) வாடகைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்.
தொ.பே. 0775387973,
நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

## பொமறேனியன் நாய்குட்டி விற்பனைக்கு

6 மாதங்கள் நிரம்பிய பெண் பொமறேனியன் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 21/1, புகையிரத வீதி,
கொக்குவில் கிழக்கு,கொக்குவில்.

## தவறிவிட்டன

கரணவாய் கிழக்கு, கலட்டி, கரவெட்டி என்னும் முகவரியுடைய கதிரவேலு செல்வராசா என்பவரது தே.அ.அட்டை (421532184V) இராணுவ அ.அட்டை, Job IC ஆகியன நெல்லியடிக்கும், தெல்லிப்பழைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
TULSI Cable TV, 6/1,கன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம். தொ.பே. 0773144991

## திருமண சேவை

டாக்டர்கள், பொறியியலாளர்கள், MSc, B.Sc., B.Com, B.A, கணனி பட்டதாரிகள், ஆசிரியர்கள் மற்றும் தனியார்துறையினர் உட்பட உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பலரின் ஜாதகங்கள் எம்மிடம் உள்ளன.

மணமக்களை எதிர்பார்ப்போர் தங்கள் தெரிவுக்கு நேரில் சந்திக்கவும்.
த.சிவானந்தன்(பிரபல சோதிடர்)
100, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
தொ.பே.0778996281

## உடன் விற்பனைக்குண்டு

HONDA C50,JAPAN லான்சர்,2004 MODEL 1st OWNER உடன் விற்பனைக்குண்டு.
150, STANLY ROAD, JAFFNA.
Tel.0212222052- 0712214114

## திருமண சேவை

துரிதமான-சுலபமான வாழ்க்கைத் துணைத் தெரிவுக்குச் சுயதெரிவு முறையே! சுயதெரிவுமுறைபற்றிய வரன்முறையைத் தெரிந்திட திங்கள்,புதன்,வெள்ளி மாலையிலோ, சனி, ஞாயிறு நண்பகலிலோ மூத்த-புகழ்பூத்த-சுயதெரிவு முறை-முன்னோடி- தனி மனித திறவுநர்-சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப் படுத்துநர் குரும்பசிட்டியூர் மாயெழு வேல் அமுதனுடன் தொடர்புகொள்ளுக!
தொலைபேசி: 2560488, 2560694, 4873929

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1975, திருவோணம், பாவம் 32 உடைய கனடா P.R Bachelor of Engineering மணமகனுக்கு குறைந்தது A/L. படித்த மணமகள் தேவை. தீவுப்பகுதியைச் சேர்ந்த யாழ்.,கொழும்பில் வசிப்போர் விரும்பப் படுவர். தொடர்பு: 0789131905, 0114557405
anlingesh @ gmail.Com

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்துக்கும், மானிப்பாய் M.P.C.Sஇற்கும் இடையில் பிரதான வீதியில் 3½ பரப்புக் காணி விற்பனைக் குண்டு. வியாபார ஸ்தலத்துக்கு உகந்தது.
தொடர்பு - 00447904254490,
0777105609.

## தேவை

தனியார்துறை (A/L விஞ்ஞான பிரிவு) ஆசிரியர் ஒருவர் தங்குவதற்கு வாடகைக்கு அறை ஒன்று தேவை. (யாழ்.நகரத்தை அண்டியபகுதி)
தொடர்பு
0776381371

## விற்பனைக்கு

கொக்குவில் சந்திக்கும் யாழ்.மருத்துவக் கல்லூரிக்கும் இடையில் ஆடியபாதம் வீதியில் (ஸ்ரேசன் றோட்) சரஸ்வதி மில் முன் ஒழுங்கையில் 50மீற்றர் தூரத்தில் 2 ¾ பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்குள்ளது. தரகர் தேவையில்லை, நேரடியாகத் தொடர்புகொள்ளவும்.
தொலைபேசி. இல. 0777891475

## வீடு வாடகைக்கு உண்டு

இல,70, மார்ட்டீன் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைதியான சூழலில் 4 பரப்பு வெற்றுக்காணியுடன் கூடிய 5அறைகள் கொண்ட வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு.
0777275083

## CAR விற்பனைக்கு

Wolkswagon, 1300, Betel model, 8sri xxxx மிகவும் நல்ல நிலையில் உடன் விற்பனைக்குண்டு.
56, தலங்காவற் பிள்ளையார்வீதி,
திருநெல்வேலி.
0715357797


ACCA to your future in Finance & Accounting

பிரிவு II
Computer Based Education(CBE)
ஆரம்பம் : 28,30/05/2010
மேலதிக விவரங்களுடன் தொடர்புகளுக்கு:

Jaffna Technical Institute
Unit of Computer Based Education
No.46, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
E-mail: jtiedu@gmail.com
ACCA

Oriental Aquarium Multy Farm

கொழும்பு விலையில் வளர்ப்புக் கலர் மீன்கள்
அதிரடி மலிவு விற்பனை

வளர்ப்புக் கலர் மீன்கள், மீன் தொட்டி, மீன்தொட்டி உபகரணங்கள், வளர்ப்பின செல்லப் பிராணிகள் (வளர்ப்பின புறாக்கள், முயல், கினிப்க், குருவிகள்) பல விதமான பூச்சாடிகள் கண்டியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பல வர்ணப் பூக்கன்றுகள் என்பவற்றை மிக மலிவான விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.



★ வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு
றோஸ் 80/= பேபிறோஸ் 50/=

தொடர்பு: மலிரி பாம்
61,இராமநாதன் வீதி,
(நாச்சிமார் கோயில் முன் வீதி)
கலட்டி, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்கள்

### திருமதி யசோதரா புவனேசன்



யாழ்.நகர், வண்ணார்பண்ணையைப் (வாழையடி) பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யசோதரா புவனேசன் நேற்று (22.05.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - வாலாம்பிகை தம்பதியினரின் ஏகபுதல்வியும் காலஞ்சென்ற புவனேசனின் (தொழிற்சட்ட ஆலோசகரும் தொழில் நீதிமன்ற வழக்குரைஞரும்) அன்பு மனைவியும் ஊர்மிலா, ஷர்மிலா ஆகியோரின் அன்புத் தாயும் அசோக்குமார், ரதீதரன் ஆகியோரின் மாமியும் அபிநந்த், அமித்தா, ஷரணா, பிரணா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2010) ஞாயிற்றுக்கிழமை பி.ப.2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல்.03, கோணாவளை ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு.*
(98593)
தகவல்
ர.ஷர்மிலா (மகள்)
0212227877

### சுப்பிரமணியம் பரமேஸ்வரி



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பரமேஸ்வரி நேற்று (22.05.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும், சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் பவளம், நல்லம்மா ஆகியோரின் சகோதரியும் சகுந்தலாதேவி, தவமணிதேவி ஆகியோரின் அன்புத் தாயும் தங்கராசா (குஞ்சன்), காலஞ்சென்ற பாலசிங்கம் ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற றதீபன் மற்றும் பிரியாந்தினி, கவிதா, விஜயகுமார், றதீபா, தவச்செல்வன், பாலதேவி, பாலசரஸ்வதி, நிமலதாசன், பாலவசந்தன், தனகிர்த்தியா ஆகியோரின் பாட்டியும் ஆர்த்தி, ஐஸ்வர்யா, சஞ்சய், சாயிசந்தோஷ், அக்ஷயன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கேணியடி, கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*
(98611)
தகவல்
தங்கராசா
(குஞ்சன்)

### முருகன் சின்னப்பு



அச்சுவேலி தெற்கு, சிவசக்தி கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முருகன் சின்னப்பு நேற்று (22.05.2010) சனிக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகன் - நாகி தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற ராசம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பொன்னி, கனகு, செல்லையா, இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், பேபி துரைசிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/அச்சுவேலி மத்திய கல்லூரி), வேதநாயகி சிவசாமி, காந்திமலர் சிதம்பரப்பிள்ளை, விமலாதேவி மாணிக்கவாசகர்(தாதி உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அச்சுவேலி தெற்கு, முழக்கன் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'திருச்செந்தூர்',*
*அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.*
தகவல்,
பெறாமக்கள்.


DHL WORLDWIDE EXPRESS
யாழ் குடாநாட்டிலிருந்து உலக நாடுகளுக்கு DHL சேவையினைப் பெற்றுக்கொள்ள!
உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை
குறிப்பிட்ட சில நாடுகளுக்கு விசேட விலைக்கழிவு

உள்நாடு வெளிநாடுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்புப் பொருட்கள் உணவுப்பொருட்கள், உடுபுடவைகள் மற்றும் DVD பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்
குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்.

தற்பொழுது 24மணி நேர உள்நாட்டிற்கான தபால்கள் பொதிகள் சேவை

லண்டன், சுவிஸ், பிரான்ஸ், நாடுகளுக்கு 3கிலோவுக்கு குறையாத பொதிகளுக்கு1Kg 400/= ரூபா வீதமும் கனடாவிற்கான 3 கிலோவிற்கு குறையாத 1Kg பொதிகளுக்கு 500/= ரூபா வரையான விசேட சலுகை
ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகள் இடம்பெறும்

திருமுருகன் கொம் நெற்
259,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P- 2227835 (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர் முன்பாக)
46, ... (... முன்பாக)
பிரதான வீதி, நெல்லியடி (ஹற்றன் நஷனல் வங்கிக்கு அருகாமையில்)

TCN EXPRESS
2B, Nelsan Place, Colombo -06

குடாநாட்டில் முகவர்கள் தேவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி அகலிப்பு, அபிவிருத்தி என்ற போர்வையில் 'பச்சைத் தண்ணியில் பலகாரம்' சுட முயற்சியா?

சமூக மேம்பாட்டிற்கான எந்தவொரு விடயமும் வரவேற்கப்பட வேண்டியது என்பதில் யாருக்கும் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. ஆனால் அது உண்மையான- சரியாகத் திட்டமிடப்பட்ட மேம்பாடாக- இருக்க வேண்டும். அபிவிருத்தி எனும் பெயரால் எதனையும் - எப்படியும் செய்யக்கூடாது. தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வீதியகலிப்பும் இதையொத்ததுதான். சரியான திட்டமிடலின்றிய-மேம்போக்கான - இந்த அகலிப்பு பலரும் கூறுவதுபோல இயற்கையான மரபுரிமைகளையும்,



தொகுப்பு: யாதவன்

பண்பாட்டு, வரலாற்று மரபுரிமை இடங்கள், சொத்துக்களையும் அழிப்பதற்கான வாய்ப்புகளை உயர்ந்தபட்சம் கொண்டுள்ளது. ஆனால் மாற்று சிந்தனைகளை பரீசிலித்தல்- நடைமுறைப்படுத்தலால் இச்செயற்பாட்டை ஆரோக்கியமாக்க முடியுமாயினும் உள்ளூர் அதிகார வர்க்கமே அதற்கு- தமது மக்களின் தனிச்சிறப்புப் பாதுகாப்பிற்கு - எதிரிடையாகச் செயற்படுகிறது என்பதை யாரிடம் சொல்லி அழுவது? அதை விட்டுவிடுவோம். சிலராவது அதைப் பற்றி புலம்புகிறார்கள்.- கவலை கொண்டு எழுதுகிறார்கள் என்பது கொஞ்சம் தெம்பைத் தருகிறது. நான் பேச விரும்புவது இச் செயற்பாட்டுள் காணப்படும் வேறொரு தந்திரம் பற்றி ஆகும்.

'' எங்களுக்கு நிரந்தர வருமானம் ஒண்டும் இல்லை. சரியான கஷ்டத்தோடு தான் சீவித்து வருகின்றோம். எங்களுடைய வருமானத்துக்காக ஆரம்பத்தில் வீட்டுடன் சேர்ந்து கடை ஒன்றை நடத்தினோம். அண்மையில் கிராம சேவகர் எங்கள் வீட்டுக்கு வந்தார். அவர் கொண்டுவந்திருந்த கடிதத்தை எம்மிடம் காட்டினார். அதில் எமது வீட்டை 7மீற்றர் தூரத்துக்கு வீதி அகலிப்புக்காக விட்டுக்கொடுக்க சம்மதம் தெரிவிப்பதாக அக்கடிதம் அமைந்திருந்தது. ஆனால் எங்களால் அது முடியாத காரியம். கிணறு வீட்டின் பின் பக்கம் இருப்பதாலும், சமையலறை உட்பட சில கட்டுமானங்களை நாங்கள் இழக்க வேண்டிய நிலை இருந்ததாலும் அதில் கையொப்பம் வைக்கவில்லை.

இதேவேளை, அவர் கொண்டுவந்திருந்த கடிதத்தில் நஷ்டஈடு பற்றி எதுவுமே குறிப்பிடப்படவில்லை. நஷ்டஈடு தந்தாலாவது எமது வீட்டை ஓரளவுக்கு சீரமைப்பது பற்றி சிந்திக்கலாம். ''

நெல்லியடியில் பிரதான வீதி ஓரமாக அமைந்துள்ள வீட்டில் வசித்துவரும் வயதான பெண் ஒருவரின் ஆதங்கமே இது.

'' கிராமசேவகர் எம்மிடம் தந்த சம்மதக் கடிதத்தில் கையொப்பம் வைத்தால் மாத்திரமே எமது வீட்டுக்கு முன்னால் உள்ள மதிலை 7 மீற்றர் பின்நகர்த்தி கட்டுவதற்குரிய பொருள்களை தரமுடியும். இல்லாவிட்டால் எவ்வித பொருள்களையும் (மணல், சிமெந்து முதலியன) தராமல் எமது மதிலை வீதி அபிவிருத்தி அதிகாரசபை இடித்துவிடும் என்றும் சொல்கிறார்கள்''. இது இன்னொருவரின் புலம்பல்.

அசுரகதியில் பருத்தித்துறை வீதியைப் புனரமைக்கும் காரியங்கள் நடைபெற்று வருகின்றன. இவ்வாறு வீதியை விசாலமாக்கும்போது தமது காணிகளை இழக்கும் மக்களுக்கு உரிய நஷ்டஈட்டினை வழங்க வேண்டும் என்று பலர் கோரிக்கை விடுத்திருந்தனர். இவ்வாறு பாதிக்கப்படுபவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவது தொடர்பாக உரிய தரப்பினருடன் ஏற்கனவே கலந்துரையாடப்பட்டதாகவும் இது தொடர்பான முடிவு விரைவில் அறிவிக்கப்படும் எனவும் 01.05.2010 உதயன் நாளிதழ் ஊடாக யாழ். அரச அதிபர் அறிவித்திருந்தார். ஆனாலும் இதுவரை அந்த முடிவு என்னவென்று அறிவிக்கப்படவேயில்லை.

அதேவேளை அரச அதிபர் கூறியதுபோன்று நஷ்டஈடு வழங்குவதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுவதாகவும் தெரியவில்லை. மாறாக வீதி அகலிப்புக்காகத் தமது காணிகளை விட்டுக்கொடுக்கச் சம்மதிக்கும் கடிதங்களில் காணி உரிமையாளர்களிடம் கையெழுத்து வாங்கும் பணியே மும்முரமாக நடைபெறுகின்றது. இக் கடிதத்தில் நஷ்டஈடு வழங்குவது பற்றி எதுவுமே குறிப்பிடப்படவில்லை என்பது மக்களிடையே பலத்த சந்தேகத்தை உண்டு பண்ணுகிறது. பூரண சம்மதத்தோடு அபிவிருத்திப் பணிக்கு வழங்கப்படும் காணிக்கு நஷ்டஈட்டினை வழங்காமல் விடக்கூடிய சந்தர்ப்பங்கள் நிறையவே உண்டு. ஆனாலும் சட்டப்படி நஷ்டஈடு பெறுவது தொடர்பான மக்களிடம் உள்ள தெளிவின்மையை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, அவர்களுக்குரிய நஷ்டஈட்டினை வழங்காமல் பச்சைத் தண்ணியில் பலகாரம் சுட முற்படுகிறார்களோ என்றும் எண்ணத்தோன்றுகிறது.

அதாவது பொதுமக்களின் காணிகளை இவ்விதமான செயற்பாடுகளிற்காக எடுக்கும் போது கையாளப்படும் நடைமுறைகளை இங்கு செய்யாதிருப்பதும் - அவர்களது அறியாமையைப் பயன்படுத்தி எந்தவித இழப்பீடும் கொடுக்காமல் அவர்களது காணிகள்- இடங்களை கையகப்படுத்தும் செயற்பாடு குறித்துத்தான் கேள்வியெழுப்ப விரும்புகின்றேன். சி.வி.கே.சிவஞானம் அவர்கள் இது பற்றிக் கேள்வி எழுப்பி இருந்தார். முன்னாள்

**இது தான் அந்த சம்மதக்கடிதத்தின் மாதிரி**

பெயர் ....................

முகவரி....................

..........................

................./...../ 2010

பிரதம பொறியியலாளர்
வீதி அபிவிருத்தி அதிகாரசபை
யாழ்ப்பாணம்.

பிரதம செயலாளர் ,
கரவெட்டி ஊடாக

கிராம அலுவலர்
.................... ஊடாக

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதி அகலமாக்கல் நடவடிக்கைகளுக்காக
எமது காணிகளை விட்டுக்கொடுத்தல்

காணி உறுதி இல..... , சோலை வரி இல.....

மேற்படி அகலமாக்கல் நடவடிக்கைகளுக்காக வீதியின் மத்தியில் இருந்து 7 M தூரத்துக்கு வீதி விஸ்தரிப்பு மேற்கொள்வற்கு எமது பூரண சம்மதத்தை இத்தால் தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள
..........................

கிராம அலுவலரின் உறுதியுரை

மேற்படி சம்மதம் எனது முன்னிலையில் வழங்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

..........................................
கிராம அலுவலர்
ஒப்பம்

மேலொப்பமிடப்பட்டது.
....................................
பிரதேசசெயலாளர்
கரவெட்டி.

துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும் இது தொடர்பில் யாழ்.செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கேட்டதாக பத்திரிகைத்துறை நண்பர்கள் கூறினார்கள். ஆனால் இது பற்றி இன்றுவரை உறுதியாக எதுவும் செய்யப்படவில்லை. அரச அதிபர் இழப்பீட்டுப்பணம் பற்றிக் கவனம் எடுக்கப்படும் எனும் தொனிப்பட அறிக்கை விடுகிறார். வீதி அபிவிருத்தி சபையினரோ காணிகளை 'வாரி வழங்கக்' கோருகின்றனர். பாமர மக்களாகிய எங்களுக்கு இந்த மேலதிகாரிகள் கூறுவது புரியவில்லை. 'நீங்களுமா?' எனக் கேட்கத் தோன்றுகிறது. சட்டரீதியாகப் பணம் வழங்க ஏற்பாடுகள் இருக்கும்போது, ஏற்கனவே பலதையும் இழந்துகெட்ட மக்களிடம் ஏன் இலவசமாகக் கேட்க வேண்டும். பனையால் விழுந்தவனை மாடேறி மிதிப்பதுபோல ஏன் செயற்பட வேண்டும்.

1950 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்கக் காணி கொள்ளற் சட்டம், கட்டாயமாக எடுக்கப்படும் ஆதனங்கள் தொடர்பான சட்டநிலைப்பாடுகள்- செயற்பாடுகள் பற்றி விரிவாகக் கூறுகின்றது.(விலை மதிப்புத் திணைக்களத்தின் இணையப்பக்கத்தில் தமிழிற் கூட இதனைக் காணமுடியும்.) இழப்பீடு வழங்கல் தொடர்பான பிரதான சட்ட மூலம் இதுதான். இது கூறும் முக்கியமான விடயங்களைத் தொகுத்துக்கூறலாம்.

இவ்வாறு பொதுத் தேவைக்காக எடுக்கும் பொதுமக்களது ஆதனங்களை எடுப்பதன் முன்பாக எல்லாக் காணிச் சொந்தக் காரர்களுக்கும் காணி கொள்ளப்படும் நோக்கம் அறிவிக்கப்படும். அவர்களுக்கு ஆட்சேபனை



நேர்காணல், படங்கள்: ஹரிஸ்

தெரிவிக்க உரிமையும் வழங்குகிறது. மேற்படி சட்டத்தின் 07 ஆம் பிரிவின் படி ''ஒரு குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னர் உரிமை, உரித்து , அக்கறை மற்றும் எதிர்பார்க்கப்படும் இழப்பீட்டுத் தொகை தொடர்பிலான உரிமைக் கோரிக்கைகளை கோரும் அறிவித்தல் ஒன்று 7ஆம் பிரிவின் கீழ் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும்''

( அப்படியொன்று இது தொடர்பில் பிரசுரிக்கப்பட்டதா?)

இவற்றின் தொடர்ச்சியாக உரிமை, பிணக்குகள் பரிசீலிக்கப்பட்டு சந்தை விலைக்கமைய இழப்பீடு தீர்மானமாகும். (சந்தை விலைக்கணிப்பு மேலதிக விவரங்களைப் பார்க்க விலைமதிப்பு திணைக்கள வலைத்தளம்) இது மட்டுமன்றி ஒரு ஆதனத்தின் பகுதியைக் கொள்ளும் போது, கொள்ளாத மற்றைய பகுதிக்கு ஏதாவது இழப்புக்கள் ஏற்படின் அதுவும் கொடுக்கப்பட வேண்டும் என இச்சட்டம் கூறுகின்றது. மற்றும் வியாபார நிலையங்கள் முதலியன காணி- கட்டடத்திற்கு அப்பால் நிகழக்கூடிய வியாபார இழப்புக்கள் இருப்பின் அதுவும் கணிப்பதற்கான ஏற்பாடுகள் இச்சட்டத்திலுண்டு.

இதேவேளை இத்தகைய சட்டப் பிரிவுகளின் படி பாதிக்கப்படும் நபர் ஒருவர் தனக்குரிய நஷ்டஈடு கோரி வழக்குத்தொடுத்தால் அரசாங்கம் பாதிக்கப்பட்டவருக்கு உரிய நஷ்டஈட்டை வழங்கியே ஆகவேண்டும். இது போன்ற பல சம்பவங்கள் இலங்கையில் பிற பாகங்களில் நிகழ்ந்துள்ளன.

இவ்வாறெல்லாம் அரசாங்கச் சட்டமே பொதுமக்களின் இழப்புக்களை மிக நியாயமான முறையில் ஈடுசெய்வதற்கான ஏற்பாட்டுடன் இருக்கும் போது பொதுமக்கள் முன்வந்து காணிகளை விட்டுத் தாருங்கள் எனக் கேட்பதன் நோக்கம்- தேவை யாது? தமிழர்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு விற்பனைக்கு

கன்னாகம், ஐயனார் வீதியில் 5¾ பரப்பளவில் சுற்றுமதிலுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 0772936694



## 60 நாட்களில் ஆங்கிலத்தை கற்றுக் கொள்ளுங்கள்

இலகுவாக ஆங்கிலம் கற்க சிறந்த வழிகாட்டி
E.L.Iயின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்.

**BASIC / SPOKEN ENGLISH & DIPLOMA IN ENGLISH**

அடிப்படையில் இருந்தே தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுத,வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது. (வயது கட்டுப்பாடு தேவையில்லை)

60 நாட்கள் முடிவில் அங்கீகரிக்கப்பட்ட DIPLOMA சான்றிதழ் ஒன்று வழங்கப்படும்.

இலவச T.Shirt ஒன்றும் Tigo Sim English Book என்பன இலவசம்

இலவச Phone Sim

பாடநெறியில் இணையும் அனைவருக்கும் அழகிய T.SHIRT ஒன்று Phone Sim Card மற்றும் 30 Easy way English புத்தகம் ஒன்று இலவசமாக வழங்கப்படும்

மேலதிக விபரங்களுக்கு பெயர்.முகவரியை 0777-220002 க்கு SmS செய்யுங்கள்

இலங்கையில் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்

மேலதிக விபரங்களுக்கு 20/- பெறுமதியுான 2 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.

**The ENGLISH LANGUAGE INSTITUTE**
**P.O. BOX 83, KANDY. Tel: 081-561 5 561, 0777-220002**



Affiliated with JOBSNET
Ministry of Labour Relation and Manpower

19 வருட அனுபவம்

ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
May 2010 to Oct 2010
தமிழ் மொழி மூலம்

- தபால் மூலம் -

~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
~ Dip. In Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், வேருவளை மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844 / 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology. M.Sc. Psychology)
**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.05.2010



# Study in Singapore

**With industry attachment Diploma, Advanced Diploma in**

**Tourism & Hospitality Management** (12 Months)

Hurry, Admission is open for June intake!

JAFFNA TECHNICAL INSTITUTE · SRILANKA

Call: Mr.N.Geethan
0773484467
International Placements(S) (Pte) ltd, Singapore

மாபெரும் கருத்தரங்கு வெகுவிரைவில்

குறிப்பு: சிங்கப்பூரில் நடைபெறவுள்ள இக் கற்கை நெறிக்கான பதிவுகளினை இன்றிலிருந்து மேற்கொள்ள முடியும். விண்ணப்பதாரிகள் தொலைபேசி அல்லது மேலேயுள்ள முகவரிக்கு ஒரு கிழமைக்குள் கிடைக்கக் கூடியவாறு சுய விவரத்தினை அனுப்புமாறு மகிழ்வுடன் வேண்டிக்கொள்ளப்படுகின்றனர்.


## இலவச தியானப்பயிற்சி

யாழ்ப்பாணம், மே 23

சகஜயோகா நிலையம் வழங்கும் 'அகத்துள் உறைந்திருக்கும் பேருண்மையை, மன அமைதியைத் தேடி ஓர் தியானப் பயிற்சி' எனும் தலைப்பிலான இலவச தியானப் பயிற்சி எதிர்வரும் 30 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்திலும் அடுத்த மாதம் முதலாம் திகதி பிற்பகல் 3மணிக்கு கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்திலும் இடம்பெறவுள்ளது.
(201-14)

## அதிபர்களுக்கான செயலமர்வு

சுன்னாகம்,மே23

பலாபலனை அடிப்டையாகக் கொண்ட பாடசாலைச் செயற்பாடுகளைத் திட்டமிடல், கண்காணித்தல் தொடர்பாக வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான செயலமர்வு இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

1ஏபி, 1சீ வகை இரண்டு பாடசாலை அதிபர்கள் மற்றும் தர உள்ளீட்டுக்குப் பொறுப்பான ஆசிரியர் ஆகியோருக்கான செயலமர்வு நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை நடைபெறவுள்ளது.

இதேவேளை வகை மூன்று பாடசாலை அதிபர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 31 ஆம் திகதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.
(201-38)

## நீராவியடி விநாயகர் ஆலய உற்சவத்தில் சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மே 23

நீராவியடி வீரகத்தி ஆலய அலங்கார உற்சவம் கடந்த 19 ஆம் திகதி புதன் கிழமை ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது.

இந்த உற்சவத்தில் சிறப்பு அம்சமாக தமிழகத்தில் இருந்து வருகை தந்துள்ள பேராசிரியர் சிவகுமார் தினமும் மாலை 5 மணி முதல் 6 மணிவரை சிறப்புச் சொற்பொழிவுகளை நிகழ்த்தி வருகின்றார். இன்று கண்ணப்ப நாயனார் என்னும் தலைப்பிலும் தொடர்ந்து மங்கையர்கரசியார், சண்டேஸ்வர நாயனார், ஆளுடைய பிள்ளையாரும் ஆளுடைய அரசும், ஆளுடைய நம்பி, கோமான் பெருமாள் நாயனார் ஆகிய தலைப்புக்களிலும் சொற்பொழிவுகளை நிகழ்த்தவுள்ளார்.
(201-6)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
07 ✩ 07 ✩ 1936



மறைவு
23 ✩ 04 ✩ 2010

### அமரர் சின்னத்துரை அமிர்தலிங்கம்

அன்புடனே எம்மைப் பேணி அரவணைத்து
அகிலத்தில் சிறப்புடன் நாம் வாழ்ந்திடவே
அல்லும் பகலும் அயராது பாடுபட்ட அப்பாவே!
அன்பான குடும்பத் தலைவனே!
அந்தியேட்டி நினைவு நாளில் உங்கள்
ஆன்மா சாந்தி என்றும் பெற்றிடவே
ஆண்டவனை தினம் நாமும் வேண்டுகிறோம்

கடந்த 23.04.2010 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவனின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் மற்றும் தொலைபேசி தபால்கள் மூலமும் தொடர்பு கொண்டு எம்முடன் துயரைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (23.05.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

125/2, இராசாவின் தோட்டம்
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

## 31 ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்

மலர்வு
04 · 10 · 1928



உதிர்வு
23 · 04 · 2010

### அமரர் ருக்மணி சுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற தாதி, அரசாங்க வைத்தியசாலை, யாழ்ப்பாணம்)

உழைப்பு தனை உரமாக்கி
உலகு தன்னில் எமை உயர்த்திட்ட உத்தமியே!
உள்ளமதில் அன்பு வைத்து உறவினரும் ஊராரும்
ஆசன்ரி என்று அழைத்து
இன்முகத்துடன் உறவாடி
இனிமையான கதைகள் பேசிய இனியவரே!
சடுதியான உங்கள் பிரிவை
எங்களால் தாங்க முடியவில்லையே
உங்கள் ஆத்மா சாந்தியடைய
என்றென்றும் இறைவனை வேண்டுகின்றோம்.

21.05.2010 இல் நடைபெற்ற வீட்டுக்.கிருத்தியத்தில் கலந்து கொண்டவர்களுக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு இன்று (23.05.2010) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

(98332)

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ‘லைலா’ விளைவித்த சேதங்களுக்கு உரிய இழப்பீடுகள் கிடைக்குமா?

கடந்த செவ்வாய்க்கிழமை வங்கக் கடலில் உருவான தாழமுக்கம் ‘லைலா’ புயலாக உருக்கொண்டு இலங்கை, இந்தியக் கரையோரப் பிரதேசங்களை ஒரு பிடி பிடித்திருக்கிறது. இந்தியாவின் ஆந்திரா மாநிலத்தில் மிகக் கடுமையாகத் தாக்கிய இந்தப் புயல் இலங்கையில் யாழ். குடாநாட்டையும் ஒரு சில மணிநேரங்கள் உலுக்கியிருக்கிறது.

செவ்வாய் இரவு ஒன்பது மணிமுதல் நள்ளிரவு வரையும், புதன் இரவு ஏழு மணி முதல் ஒரு சில மணித்தியாலங்கள் வரையும் ‘லைலா’ப் புயல் குடாநாட்டின் பல பிரதேசங்களைத் தாக்கி விட்டு நகர்ந்திருக்கிறது. இந்தப்புயலினால் குடாநாட்டில் பெரும் சொத்தழிவுகளும், பொருள் அழிவுகளும் ஏற்பட்டுள்ளன.

சற்றும் எதிர்பாராத விதத்தில் உருவான இந்தப் புயலும் மழையும், யாழ்ப்பாணத்தின் விவசாய உற்பத்தியில் பெரும் தாக்கத்தை உண்டுபண்ணியிருக்கிறது. அத்துடன் வீட்டுக்கூரைகள், பொதுக்கட்டடங்களின் கூரைகள் என்பனவும் இதனால் முற்றாகவும், பகுதியாகவும் சேதமடைந்துள்ளன. இது வரை பெறப்பட்ட கணக்கெடுப்பின்படி ‘லைலா’ புயலினால் யாழ். மாவட்டத்தில் 514 வீடுகள் சேதமடைந்துள்ளன. இவற்றில் 25 வீடுகள் முற்றாகச் சேதமாக்கப்பட்டுள் ளன. 499 வீடுகள் பகுதியாகச் சேதமடைந்துள்ளன. வலிகாமம் தெற்கு, மேற்கு, கிழக்கு பகுதிகளிலேயே இந்தப் புயலின் தாக்கம் அதிகமாக உணரப்பட்டிருக்கிறது. அப்பகுதிகளில் பயன்தரு மரங்கள் முறிந்துவிழ்ந்ததுடன் மின் கம்பங்கள், தொலைபேசிக் கம்பங்கள் என்பவையும் சரிந்து சேதமடைந்துள்ளன.

‘லைலா’ புயலினால் இம்முறை அதிக நட்டத்தை



எதிர்கொண்டுள்ளவர்கள் வாழைச் செய்கையாளர்களே. குறிப்பாக வலிகிழக்குப் பகுதியில் கோப்பாய், நீர்வேலி, புன்னாலைக் கட்டுவன், அச்சுவேலி, உரும்பிராய், புத்தூர் ஆகிய பகுதிகளில் இம்முறை விவசாயிகளினால் பெரும் எடுப்பில் பயிரிடப்பட்ட வாழைத் தோட்டங்களையே இந்த ‘லைலா’ சின்னாபின்னமாக்கிச் சீரழித்திருக்கிறது.

வடக்குக்கும் தெற்குக்கும் இடையிலான போக்குவரத்து சுமூகமாக உள்ள இந்த வேளையில் - நாட்டில் ஏற்பட்டுள்ள ஒரு அமைதிநிலையைப் பயன்படுத்தி தமது விவசாய நடவடிக்கைகளை விஸ்தரித்து அதனால் கிடைக்கும் உற்பத்திகளை தென்னிலங்கையில் சந்தைப்படுத்தி லாபம் ஈட்டும் முயற்சியில் யாழ்ப்பாண விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த முயற்சியின் ஒரு அங்கமாக வலிகிழக்குப் பகுதியில் உள்ள பெரும்பாலான விவசாயிகள் ஏக்கர் கணக்கில் வாழைகளைப் பயிரிட்டிருந்தனர். யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகும் வாழைப்பழத்துக்கு தென்னிலங்கையில் நல்ல வரவேற்புக் கிடைக்கின்றமை அவர்கள் வாழையை அதிகளவில் பயிரிடுவதற்கு மற்றொரு காரணம்.

இவ்வாறு ஏக்கர் கணக்கில் பயிரிடப்பட்ட வாழைமரங்களை அடியோடு சாய்த்துவிட்டுச் சென்றுவிட்டது இந்த ‘லைலா’. இதனால் அப்பகுதி விவசாயிகள் பெரும் மனத்துயரிலும் வேதனையிலும் இருக்கிறார்கள். அவர்களின் முகங்களில் இப்போது இருள் குடிகொண்டிருக்கிறது. இந்த விவசாயிகளில் பெரும்பாலானவர்கள் தமது வாழைத் தோட்டங்களை கடன்களைப் பெற்றே அமைத்திருக்கிறார்கள். அந்தக் கடன்களை இனி எவ்வாறு திருப்பிச் செலுத்துவது என்ற ஏக்கம் அவர்கள் முகங்களில் தென்படுகின்றது.

குடாநாட்டின் மிக முக்கிய சந்தைகளில் ஒன்றாக உள்ள திருநெல்வேலிச் சந்தையில் தனது தோட்டத்தில் இருந்து வாழைக்குலைகளை எடுத்து வந்து சந்தைப்படுத்துபவர் வி.கந்தசாமி.


‘லைலா’ புயலினால் தனக்கு ஏற்பட்ட நிலை குறித்து அவர் பின்வருமாறு விபரித்தார்.

‘‘எனக்குத் தெரிந்த வர்த்தக நண்பர் ஒருவரிடம் 4 லட்சம் ரூபா கடன் பட்டுத் தான் புதிதாக ஒரு வாழைத் தோட்டத்தைப் போட்டேன். தோட்டம் போட்டு ஏழு மாதங்கள் தான் ஆகின்றன. தோட்டத்தில் இருந்த 110 வாழைக் குலைகளில் இப்போது 30 தான் மிச்சம். மிகுதி எல்லாத்தையும் ‘லைலா’ கொண்டுபோய் விட்டது. செவ்வாய் கிழமை இரவு கடும் காற்றடித்ததால் எனக்கு நித்திரை வரவில்லை. வாழைத்தோட்டத்தின் ஞாபகம் தான் கண்முன் வந்து கொண்டிருந்தது. எப்போது விடியும் என்று காத்திருந்து அதிகாலையிலேயே எழும்பி தோட்டத்துக்குச் சென்றேன். எனது வாழைத் தோட்டத்துக்கு எதுவும் நடந்திருக்கக்கூடாது என்று மனதுக்குள் கடவுளைப் பிரார்த்தித்த வாறு தோட்டத்துக்குச் சென்று கொண்டிருந்தேன். போகும் வழியில் இருந்த வாழைத் தோட்டங்களில் வாழைகள் மடிந்து நிலத்தைத் தொட்டுக் கொண்டிருந்தன. எனது தோட்டத்துக்கும் அவ்வாறு நேர்ந்திருக்குமோ? என்ற அங்கலாய்ப்புடன் சென்ற எனக்கு அங்கு அதிர்ச்சி காத்திருந்தது. தோட்டத்தில் இருந்த பெரும்பாலான வாழைக் குலைகள் முற்றாக முறிந்து நிலத்தில் கிடந்தன. என்ன செய்வதென்று எனக்குத் தெரியவில்லை. இதயம் வெடித்துவிடுவது போன்ற ஒரு உணர்வு எனக்குள் ஏற்பட்டது. என்ன செய்வது ஏக்கத்துடன் மீண்டும் வீடு திரும்பினேன். முறிந்த வாழைக் குலைகளை வெட்டி அவற்றை கால்நடைகளுக்குத் தீவனமாகப் பயன்படுத்துவதைத் தவிர வேறு வழி தெரிய வில்லை. இந்தத் தோட்டத்துக்காக கடன் பட்ட பணத்தைத் திருப்பிச் செலுத்தி விட வேண்டும் என்ற ஆதங்கத்தில் இருந்த எனக்கு இந்தக் கதி நேர்ந் திருக்கிறது. இவ்வளவு இழப்புக்களைச் சந்தித்துள்ள என்போன்ற விவசாயிகளுக்கு அரசு நட்டஈடு ஏதாவது தருமா? அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?’’



என்றார் அந்த விவசாயி கனத்த இதயத்துடன்.

இதே போன்று குடாநாட்டின் புகையிலைச் செய்கையாளர்களுக்கும் திடீர் மழை பெரும் சேதத்தை விளைவித்திருக்கிறது. இன்னும் ஒருசில நாள்களில் பயன்தரக்கூடிய வகையில் இருந்த புகையிலைகள் மழையில் நனைந்ததால் ஒன்றுக்கும் உதவாமல் குப்பையில் போட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக கூறுகின்றார் புத்தூரைச் சேர்ந்த விவசாயி தர்மநாதன்.



‘லைலா’ புயலினால் ஏற்பட்ட சேதங்கள் யாழ். மாவட்ட செயலகத்தில் அனர்த்த முகாமைத்துவ பிரிவினால் தற்போது திரட்டப்படுகின்றன. சகல பிரதேச செயலர் பிரிவுகளிலும் இந்தப் புயலினால் ஏற்பட்ட அழிவுகள் - சேதங்கள் என்பவற்றை அறிக்கையாகத் தயாரித்து உடன் அனுப்பி வைக்குமாறு யாழ். அரச அதிபர் சகல பிரதேச செயலர்களையும் பணித்திருக்கிறார். யாழ். அரச அதிபரின் இந்த உடனடிப் பணி வரவேற்புக்குரியதாகும். சேதங்களை மதிப்பிட்டு பாதிக்கப்பட்டோருக்கு உரிய நிவாரணங்களை வழங்குவதற்காக இந்த அறிக்கைகளை அவர் கோரியி ருப்பது பாதிக்கப்பட்ட அனைவரது மனங்களிலும் ஒரு எதிர்பார்ப்பை உண்டு பண்ணியிருக்கிறது. அதாவது தமக்கு ஏற்பட்ட இழப்புக்களுக்கு நட்டஈடு ஏதாவது பெற்றுத்தரப்படுமா? என்பதே அந்த எதிர்பார்ப்பு. விவ சாயிகள், வீடுகள் சேதமானவர்கள் உட்பட பாதிப்புக்களை எதிர் கொண்ட வர்கள் மீண்டெழுவதற்கு நட்டஈடு வழங்கப்படவேண்டியது அவசியமாகிறது.

சேதங்கள் தொடர்பான மதிப்பீட் டறிக்கைகளை வெறும் தகவலுக்காகத் தயாரிக்காமல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பயன்களைப் பெற்றுத்தரக் கூடிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும்.

சம காலத்தில் தென்னிலங் கையிலும் பெரும் வெள்ளப்பெருக்கும் மண்சரிவும் ஏற்பட்டிருக்கிறது. இதனால் லட்சக் கணக்கானோர் இடம்பெயர்ந்திருக்கிறார்கள். பலர் வீடுவாசல்களை இழந்திருக்கிறார்கள். தென்னிலங்கையில் வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரணங்களுக்காக அரசாங்கம் 8 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது. தென்னிலங்கையில் பாதிப்புக்களை சந்தித்தவர்களுக்கு நிவாரணம் வழங்க முடியுமானால் ஏன் வடபகுதியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க முடியாது? என பரதிக்கப்பட்ட மக்கள் கேள்வி எழுப்பு கின்றனர்.

இது விடயத்தில் யாழ். குடா நாட்டின் அரச இயந்திரமும் அதிக அக்கறையுடன் செயற்பட வேண்டும். முன்னர் வீசிய ‘நிஷா’ புயலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இதுவரை எந்தவிதமான இழப்பீடுகளும் வழங்கப்படவில்லை. அதே போன்று இம்முறையும் இருந்து விடாமல் பாதிக்கப்பட்ட எமது மக்க ளுக்கு உரிய நிவாரணங்கள், இழப்பீடுகள் பெற்றுக்கொடுக்கப்பட வேண் டும். குறிப்பாக அதிகம் பாதிக்கப்பட்ட வாழைச் செய்கையாளர்களுக்கு உதவிகள் கிடைக்கச் செய்யவேண்டும். இதன் மூலம் அவர்கள் இந்த புயலின் தாக்கத்தின் பாதிப்பில் இருந்து மீண்டெழுவதற்கு ஒரு வழி கிடைக்கும்.

எனவே உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் பாராமுகமாக இருந்துவிடாமல் அர்ப்பணிப்புடனும் நல்ல மனதுடனும் சேவையாற்றுவார்கள் என நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறோம். **********

-அதிரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைமகள் அழகுநிலா
## அழகுக்கலைப் பயிற்சி நிலையம்

நான்கு நாள்கள் பயிற்சிகள் இடம்பெற்ற பயிற்சியின் நிறைவில் சிறப்பு மிக்க சான்றிதழ் வழங்கப்படும். இப்பயிற்சியின்மூலம் ஒரு அழகுநிலையம் நடத்தும் திறமையைப் பெற்றுக் கொள்ளலாம். இப்பயிற்சிக்கு வயது கிடையாது. கீழ்வரும் பயிற்சிகள் அனைத்தும் செயன்முறையாகும். இந்த அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள். அனுமதிக்கு முந்துங்கள்.

பயிற்சிகள்
- ★ Facial (7வகை)
- ★ Threading
- ★ Pimple Treatment
- ★ Waxing
- ★ Hair Streching (2 வகை)
- ★ Hair Perming (2 வகை)
- ★ Hot oil massage
- ★ Hair Cutting
- ★ Hair Dye
- ★ Hair Colouring
- ★ Pedeicure manicure
- ★ கறுப்புக்காய்கள் இயந்திரம் மூலம் அகற்றப்படும்.
- ★ Bleaching
- ★ Bridal makeup (5 வகை)



பயிற்சிக் கட்டணம் 4000/-
பயிற்சி ஆரம்பம் 27.05.2010
பயிற்சி நேரம் -9 மணி - பி.ப. 4மணி வரை
தொடர்புகள் : 077 3719071, 021 4908151

கலைமகள் அழகுநிலா
390, பிரதான வீதி, பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம்.


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 11 | | 01 |
| 03 | | 06 |
| 1943 | | 2009 |



## கணபதிப்பிள்ளை மகாதேவா (மகா)

ஆழ்ந்த அன்பு தந்த வேதனையில்
மீண்டும் மீண்டும் அழுதோம் தனிமையில்
உங்கள் நினைவு தந்த வலியினில்
நினைத்திருந்தோம் உங்களையே.

கண்ணீர் ஏணியானால் – உங்கள்
ஞாபகங்கள் பாதையானால் – அப்
பாதையில் நாம் நடந்து வந்து – மீண்டும்
கொணர்ந்திடுவோம் உங்களையே

எம் இதயக் கமலத்திலே – தொடர்ந்தும்
உங்களைத் தங்க வைத்தே – எம்
வாழ்க்கைப் பாதையில் நடந்திடுவோம்
மீண்டும் உங்களைச் சந்திக்கும் வரை...

அன்புடன் நினைந்து ஆழ்ந்த இழப்பில் தவிக்கும்
உங்கள் அருமை மனைவி, மகள், தங்கை, தம்பி, உறவினர்
71, பிற்றசன் வீதி, கொழும்பு - 06

# முன்பள்ளியின் விளையாட்டு விழா

கைதடி,மே. 23

கைதடி கலைமகள் வளர்மதி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வளர் மதி சனசமூக நிலையத் தலைவர் எஸ்.கந்தசாமி தலைமையில் முன்பள்ளி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கைதடி மக்கள் நலன்பேணும் நட்புறவுக் கழகத்தின் தலைவர் ப.செல்லத்துரையும் சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி மக்கள் வங்கி உதவி முகாமையாளர் எஸ்.ஸ்ரீதரன், கைதடி கிழக்கு கிராம சேவையாளர் எஸ். சிவகுலசிங்கம், கைதடி கிழக்கு சமுர்த்தி அலுவலர் கி.சத்தியசீலன், தென்மராட்சி முன்பள்ளி இணைப்பாளர் திருமதி எஸ்.தனபாலசிங்கம் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

(201-288)


# தேவை



யாழ்ப்பாணத்தில் இயங்கும் தனியார் ஆய்வு கூடத்திற்கு O/L, A/L விஞ்ஞான பிரிவில் சித்தி பெற்ற பயிலுனர் மற்றும், அனுபவம் பெற்ற Laboratory Assistant MLT தேவை. தகமையுடையோர் பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, கிராம உத்தியோகத்தர் அத்தாட்சிப் பத்திரம் ஆகியவற்றின் photocopy உடனும், தொலைபேசி இலக்கத்துடனும் விண்ணப்பிக்கவும்.

MEDIQUICK (PVT) LTD
48/1, Dharmarama Road,
Wellawatte, Colombo - 06

# அறைகள் வாடகைக்கு

வெள்ளவத்தை, புகையிரத நிலையத்திற்கு அண்மையில் சகல வசதிகளும் அமையப் பெற்ற இடத்திலுள்ள லொட்ஜில் பல தரங்களிலான அறைகள் நாளாந்த மற்றும் மாதாந்த வாடகைக்கு விடப்படும். குறைந்த வாடகையில் நிறைந்த பயனை அடைய நாடுங்கள்.

இல. 8 புகையிரத வீதி, வெள்ளவத்தை
☎ 011 2504281

# கோல்டன் ஈகிள் பாதுகாப்பு சேவை
## வெற்றிடங்கள்

1. கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (ஆண்கள்/ பெண்கள்)
2. பாதுகாப்பு மேற்பார்வையாளர் (Security Supervisor-Night)
3. பகுதி நேர பாதுகாப்பு அதிகாரி (Visiting Security Officer)

1. கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (ஆண்கள்/ பெண்கள்)
க.பொ.த [சா/தா] பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
(i) உயரம் 5' 4"
(ii) 22 வயதிற்கு மேற்பட்டோர் [ சம்பளம் மாதமொன்றுக்கு EPF&ETF உட்பட ரூபா 11,000/= ]

2. பாதுகாப்பு மேற்பார்வையாளர் (Security Supervisor-Night)
க.பொ.த [சா/த] தரத்தில் 5 பாடங்களில் விசேடசித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
(i) உயரம் 5' 5"
(ii) 32 வயதிற்கு மேற்பட்டோர் [ சம்பளம் மாதமொன்றுக்கு EPF&ETF உட்பட ரூபா 12,500/= ]

3. பகுதிநேர பாதுகாப்பு அதிகாரி (Visiting Security Officer)
(i) பாதுகாப்புச்சேவை அத்துடன் இணைந்த சேவையில் குறைந்தது 15 வருட அனுபவம்.
(ii) உயரம் 5' 6"
(iii) 40 வயதிற்கு மேற்பட்டோர் [ சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும் ]

குறிப்பு:
(a) இளைப்பாறியபொலிஸ்/ படை உத்தியோகத்தர்கள், சாரணர், சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் அங்கத்தவர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.
(b) தடகள, கிரிக்கெட், உதைபந்தாட்டம், கராட்டி, கரப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் மற்றும் சிறந்த வீரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
மேற்கூறப்பட்ட தகைமையில் a+b உள்ளவர்களுக்கு கல்வித் தகைமையில் விலகல் அளிக்கப்படும்.
நல்ல தேகாரோக்கியமும் நல்ல கண்பார்வையும் இருத்தல் வேண்டும்.

நேர்முகப்பரீட்சை 27.05.2010 வியாழக்கிழமை அன்று காலை 10 மணிக்கு நடைபெறும். கீழ்க்குறிப்பிட்ட ஆவணங்களுடன் சமுகமளிக்கவும்.

(1) கிராம சேவகரின் நற்சான்றுப்பத்திரம் (6 மாதத்திற்குட்பட்டது)
(2) வதிவிடச் சான்றிதழ்
(3) பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
(4) கல்வித்தராதரப் பத்திரங்கள்
(5) தேசிய அடையாள அட்டை
(6) குடும்ப அட்டை

இவை அனைத்தினதும் உண்மைப்பிரதியுடன் போட்டோ பிரதியும் கொண்டு வரவும்.

337,1/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பணிப்பாளர்.

[சி/5677782]

# காணி விற்பனைக்கு

புலோலி பாடசாலைக்கு அருகாமையில் (கொடிகாமம் வீதி) வெட்டுக் கிணற்றுடன் கூடிய 4 பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு.
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
☎ 077 3975195

# TASTE OF JAFFNA
No.101, Main Street, Jaffna

## Sunday Special Lunch Buffet Menu

**Soup Corner**
Chicken & Egg Sweet Corn Soup
Or
Hot & Sour Vegetable Soup

**Salad Corner**
Tomato Raita

**Buriyani Corner**
Taste Of Jaffna Special Buriyani Rice
Chicken Fry
Chicken Curry
Sunday Egg
Brinjol Salad

**Rice & Curry Corner**
Steamed Rice
Dhal Curry
2 Vegetable Curries

**Chinese Corner**
Vegetable Fried Rice
Hot Butter Cuttle Fish
Crispy Fry Vegetable Cutlet

**Dessert Corner**
Cream Caramel
Fruit Salad With Custard Sauce
Ice Cream

இவை அனைத்தையும் உண்டு மகிழ ஒருவருக்கு ரூபா 849 மட்டுமே!

குடும்பத்துடன் 10 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு முற்றிலும் இலவசம்!

Buffet Lunch Time: 12 pm - 3 pm

For Reservations : 021 2221322 or 0777575701

TASTE OF JAFFNA No.101, Main Street, Jaffna

# பத்திரிகைத்துறையில் ஆர்வம் உள்ளோருக்கான இலவசப் பயிற்சிப் பட்டறை

- ✱ நீங்களும் பத்திரிகையாளராக விரும்புகிறீர்களா?
- ✱ ஊடகத்துறை பற்றி அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம் இருக்கிறதா?

உங்களுக்கான ஐந்து நாள் இலவச பயிற்சிப் பட்டறைக்கு இன்றே விண்ணப்பியுங்கள்!

காலம்-ஜூன் 2ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை.



**விடயங்கள்:**
- ✱ செய்தி அறிதல்
- ✱ செய்தி மூலங்கள்
- ✱ புலனாய்வுச் செய்தியிடல்
- ✱ செய்தித் தலைப்புகள்
- ✱ கட்டுரை எழுதுதல்
- ✱ செய்திக் கட்டுரைகள்
- ✱ பக்க வடிவமைப்பு
- ✱ இணையத்தளச் செய்திகள்
- ✱ ஊடகத்துறையில் தொழில்நுட்பம்
- ✱ பத்திரிகைத்துறையின் சவால்கள்
- ✱ பத்திரிகையாளர்களின் பொறுப்புகளும் கடமைகளும்

பயிற்சிப்பட்டறை முடிவில் சான்றிதழும் வழங்கப்படும்.

அனுமதிக்கு சுய விவரங்களை தொடர்புக்கான தொலைபேசி இலக்கத்துடன் அனுப்பவேண்டிய முகவரி:
(விண்ணப்பங்களை mediatechnic@gmail.comஎன்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பி வைக்கலாம்).
'பத்திரிகையாளர்களுக்கான பயிற்சிப்பட்டறை'
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுகதை சொல்லப் போறோம்

★ ஆள் ஏறாத மலையில் ஆயிரம் பூப் பூத்திருக்கும் அது என்ன?
★ எட்டத் தெரிவான். ஆனால் எட்டாத உயரம் அவன் யார்?
★ பறக்கும் நட்சத்திரம் அதுஎன்ன?
★ வெள்ளையில் கறுப்புத் தந்து விவரந்தருவான் அவன் யார்?
★ பகல் விளக்கு அது என்ன?
★ ஓசையிட்டு அழைப்பான். இரகசியம் காதுக்குள்ளே அது என்ன?

ப. கஜிர்தா, தரம் 3, மந்துவில் ஸ்ரீபாரதி வித்தி.



**விடைகள்**
01. நட்சத்திரம்
02. வானம்
03. மின்மினிப்பூச்சி.
04. பத்திரிகை.
05. சூரியன்.
06. தொலைபேசி.

# காகம் ஏன் கத்துகிறது



அந்தக் காலத்தில் எல்லாப் பறவைகளும் வெள்ளை நிறத்தில் தான் இருந்தன. ஒரு நாள் காகமும், மயிலும் ஒன்று சேர்ந்து விளையாடிக் கொண்டிருந்தன. அப்போது காட்டிலிருந்த பூக்களைக் கண்டன. காகம் மயிலுடன் "நாமும் ஏன் இது போல வர்ணம் தீட்டிக் கொள்ளக்கூடாது?" என்று கேட்டது. மயிலும் அதற்கு ஒத்துக் கொண்டது. உடனே காகம் காட்டிலிருந்த பச்சிலைகளைப் பறித்து வந்தது. மயிலின் தோகையை வர்ணம் தீட்டியது. முடிவில் "ஒரு வான வில்லைப்போல நீ அழகாயிருக்கிறாய்" என்று மயிலிடம் சொன்னது. மயில் மிகுந்த கர்வமாகி, தன் அழகை மற்றவர்களிடம் காட்டவேண்டும் என்று துடித்தது. காகமோ, தன் இறக்கைகளை அழகுபடுத்தும்படி மயிலிடம் சொன்னது. ஆத்திரம் அடைந்த மயில் கறுப்புச் சாயத்தை காகத்தின் தலையில் கொட்டிவிட்டு "உனக்கு இது போதும்" என்று சொல்லியபடி கம்பீரமாகத் தன் தோகையை விரித்துக் கொண்டு சென்றது. ஏமாந்து போன காகம் அன்றிலிருந்து கறுப்பாக உருமாறி கத்திக் கொண்டே இருந்தது. ★★★★★★★★★★★★★★★★★★

த. ரிக்ஷன், யாழ். மத்திய கல்லூரி.

# சிறுவர் கதிர்

## உங்களுக்கும் பரிசில்கள்

### விடை தெரியுமா? 57

01. மூன்றாவது 'ருவெண்ரி - 20' கிரிக்கெட் உலகக் கிண்ணத்தை வென்ற நாடு எது?
02. அண்மையில் இலங்கையில் வீசிய புயலின் பெயர் என்ன?
03. பெரிய அம்மை நோய்க்கான தடுப்பு மருந்து எப்போது முதல்முதலாகப் பயன் படுத்தப்பட்டது?
04. இப்போது இலங்கையில் ஊடக அமைச்சர் யார்?
05. ஜப்பான் நாட்டுக்கான பயணம்பற்றிய கட்டுரையை 'உதயனில்' சில வாரங்களுக்கு முன்னர் எழுதியவரின் பெயர் என்ன?

### விடை தெரியுமா?

தெரிந்தால் 30.05.2010 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

விடை தெரியுமா? - 56 இற்கான

01. கென்யா. 02. மொரட்டுவ.
03. கழுகு. 04. இங்கிலாந்து.
05. தவத்திரு போப்பையர்.

**பரிசுபெறுவோர் விவரம்**

01. **இ.யோகிதா**, தரம் - 6 E, கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தி.
02. **ஜெ.துவாரகா**, தரம் - 4 C, யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.
03. **ரா.உஷாந்தினி**, தரம் - 7 M, புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி.
04. **ம.சிவகௌரி**, கலைவாணி வீதி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.
05. **சி.நிரோஜன்**, தரம் - 5 B, கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாசாலை.

# நீங்களும் எழுதலாம்

**(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)**

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்பவேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர்:-..............................
தரம் :-..............................
பாடசாலை :-..............................
..............................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

# மாணவத் தூரிகை



ஞா.ருசாந்தினி, தரம் -9, யா/ புங்குடுதீவு சிறி சித்தி விநாயகர் ம.வி.




தி.லக்ஷா, தரம் -8 D, யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை.



ஞா.விவேந்தன், தரம் -8 A, சாவகச்சேரி இந்துக் கல்லூரி.



ஜெ.பைந்தமிழ்ச்செல்வன், தரம் -9 A, யா/குணரத்தினம் ம.வி.




ப.பிரதிபன், தரம் -5, யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்.



சி. கலைமதி, தரம் -7, யா/ பொலிகண்டி இ.த.க பாடசாலை.




ஜெ.வேணுகா, தரம் -7, யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தி.



த.சிவமயூரன், தரம் -8 E, யா/ இணுவில் மத்திய கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
22 ★ 02 ★ 1928

மறைவு
03 ★ 06 ★ 2009

## அமரர் கதிர்காமர் சானைக்குட்டி

(ஓய்வுபெற்ற ஊழியர், சிமெந்து கூட்டுத்தாபனம்)

அன்பு அப்பாவே! ஆறாத்துயரில்
நீள நினைவுகளை
நெஞ்சில் பதித்துச் சென்றுவிட்டீர்கள்
ஆண்டொன்று கழிந்தாலும்
ஆறுமோ எங்கள் மனம்.
உங்கள் கனவு நனவாக
வாழ்ந்து காட்டுவோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நி.மு: கீரிமலை வீதி,
மாவிட்டபுரம்.

குடும்பத்தினர்
சிலம்புப் புளியடி வீதி,
சங்கானை.

# தேவை

1) கணனி விரிவுரையாளர்
   - I. MS. Office
   - II. Graphic Designing
   - III. Web Designing
   - IV. Multi media
   - V. Programming

2) விரிவுரையாளர்
   Hardware & Computerize accounting

3) **Manager**

4) **Course Consulter**

5) **Receptionists**
   (1 தொடக்கம் 5 வரையான பதவிகளுக்கு அனுபவமுள்ள, அனுபவமற்றவர்கள்)

6) **English Teacher** (அனுபவமுள்ளவர்கள்)

Note: விண்ணப்பங்களை மூன்று தினங்களுக்குள் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பவும். or 29.05.2010 10.00 am to 1.00 pm நேரில் வரவும்.

**BRITISH INSTITUTE OF COMPUTER**
**and Business Studies**
**Tel No: 0776013559**
**687, Hospital Rd, Jaffna.**

# தரம் குறைந்த பீடிகளை விற்ற மூவருக்கு அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம். மே 23

சட்டவிரோதமானமுறையில் தரம் குறைந்த வகையில் தயாரிக்கப்பட்ட பீடிகளை விற்பனை செய்த மூன்று பேருக்கு யாழ்.நீதிமன்றம் தலா ஐந்தாயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் அதனைச் செலுத்தத்தவறின் ஒருமாதம் சிறைத் தண்டனை வழங்கியும் தீர்ப்பளித்தது.

யாழ்.நகர் சந்தைப்பகுதியில் பீடிகளை விற்பனை செய்து கொண்டிருந்த மூன்று பேரும் யாழ்.மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களால் யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். (50-14)

## டிப்பர் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள LB-XXXX தொடரிலக்கமுடையISUZU 2.25 Cube டிப்பர் உடன் விற்பனைக்குண்டு.

**தொடர்பு: 0779947442**

## விற்பனைக்கு

26 சிறி ---- தொடர் இலக்கமுடைய லேடன் லொறி விற்பனைக்குண்டு.

**தொடர்பு : 0773865240**

## சிறிய லொறி விற்பனைக்கு (10 அடி)

LA 7250 LB 7047 இலக்கமுடைய இரண்டு சிறிய லொறிகள் மலிவு விலையில் உடன் விற்பனைக்குண்டு.

**தொடர்பு: 0714856550, 0776560149, 0779152600**

## காணி விற்பனைக்கு

யாழ்.நகரில் பலாலி வீதி, 2ஆம் ஒழுங்கையில் ஒருபரப்பு, 3குளி (12பேர்ச்) வெற்றுக்காணி நான்கு பக்க மதில்களுடன் நியாயமான விலையில் உடன் விற்பனைக்குண்டு. விலை விவரம் நேரில்.

தொடர்பு: 33, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 0212227801

## வீடு வாடகைக்குண்டு

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் 8 அறைகளுடன் கூடிய மாடிவீடு (2700 சதுரஅடி) வாடகைக்குண்டு. அரச/அரசசார்பற்ற நிறுவனங்கள் (NGOS) விரும்பத்தக்கது. லொட்ஜ் தேவைகளுக்கு வழங்கப்படமாட்டாது.

**தொடர்பு: 021 222 7222**

## விமானப் பயணச்சீட்டு

விமானப் பயணச்சீட்டுக்கள் தற்பொழுது யாழ்ப்பாணத்தில் குறைந்த விலையில் கொள்வனவு செய்யலாம்.

**உடனடித் தொடர்பு :**
**பார்த்தி 0773768940**

(98442)

## Lap Topவிற்பனைக்குண்டு

Toshiba, 2.2 Procesor Dual Core, 4GB Ram, 260 GB Hard Drive, Built in Camera,.DVD Burner கொண்ட Lap Top விற்பனைக்குண்டு.

**தொடர்பு: 0773604049, 0776746552**

## பெண் வேலையாள்கள் தேவை

தைப்பதற்கு ஆள்கள் தேவை. (பெண்கள்) சாரி ப்ளவுஸ், பிறா அனைத்து வகையான ஆடைகள் தைக்கத்தெரிந்தவர்கள், மற்றும் வெட்டித் தைக்கத்தெரிந்தவர்கள் சமுகமளிக்கலாம்.

தொடர்பு: ஆர்.அக்லொஸ்
(வைகுந்தசாமி)
எண்-14, திருமகள் வீதி,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0776979172,
0772179305.

## சேவை

கணனி உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். மற்றும் Computer Software Installation and Antivirus updatrng செய்து கொடுக்கப்படும்.

**தொடர்பு: 0778501919, 0215002680**

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

டாசோன் (DACHSUND) நாய்க்குட்டிகள் விற்பனைக் குண்டு.

**தொடர்பு : 0771350082**

(98449)

# ஆங்கில ஆசிரியர்கள் தேவை




Informatics Institute of Technology (IIT) a subsidiary of the Informatics Group of Companies is the pioneer, in introducing British University Degrees in Information & Communication Technology to Sri Lanka.

During the last 19 years, IIT has produced over 2,000 IT & Management Graduates of Exceptional calibre.

**The ideal candidate should possess :**

- **Degree in any field with English as a subject**
- **Excellent communication skills**
- **Minimum one year experience in teaching will be an added advantage**

## தேவை !

IIT யாழ்ப்பாண கிளையானது ஆங்கில மொழி தொடர்பான செயற்திட்டத்தை(Spoken English IELTS,etc..)கற்பிக்க ஆங்கில ஆசிரியர்களை எதிர்பார்க்கின்றது

**Interested candidates should forward their CV's with two non-related referees within next 7 days to :**

**General Manager**
**Informatics Institute of Technology**
**# 57,Ramakrishna Road**
**Colombo 6.**
**E-mail:sandaruwan@iit.ac.lk**
**Web :www.iit.ac.lk**


INFORMATICS INSTITUTE OF TECHNOLOGY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளை பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் பட்டு!

நமது உடலில் உணர்வு கட்டுப்பாட்டுப் பகுதியாக இருப்பது மூளை. தண்டுவடப் பாதிப்பு, காக்காவலிப்பு நோய் மற்றும் சில பாதிப்பு இருப்பவர்களுக்கு உணர்வுகளைக் கடத்துவதில் மூளை சரியாகச் செயற்படாது. இதுபோன்ற பிரச்சினை உடையவர்களுக்குப் பட்டு இழை உதவுகிறது.

பட்டு இழைகள் மின்சாரத்தைக் கடத்தும் தன்மை கொண்டவை. இந்த பட்டு இழையை சிறிய மின்கடத்தியாக மூளையுடன் இணைத்துச் செயற்படுத்தியதில் அது தகவல்களை சிறப்பாக கடத்தியது.



அமெரிக்காவிலுள்ள இல்லினாய்ஸ் பல்கலைக்கழகம், டட்ஸ் பல்கலைக்கழகம் மற்றும் பென்சில்வேனியா பல்கலைக்கழகம் ஆகியவற்றின் ஆய்வாளர்கள் இணைந்து இந்த சோதனையில் ஈடுபட்டனர். ஆய்வின்போது பூனையை மயக்க நிலையில் வைத்து, பட்டு இழை மற்றும் பொருள்களைச் சேர்த்துச் செய்திருந்த மின்கடத்தியை அதன் மூளையின் மேற்பரப்பில் இளகச் செய்து பொருத்தியிருந்தனர். பூனையின் கண்கள் விழித்த நிலையில் இருந்தது. அது காட்சிகளைப் பதிவு செய்வது பட்டு இழை கடத்தியின் வழியாக கடத்தப்பட்டது. மூளை தகவல் கடத்துவதில் குறைபாடு உடையவர்களுக்கு பட்டு இழைக் கருவியைப் பயன்படுத்த முடியும் என்று தெரியவந்தது. இது தலைமுடியைவிட ஐந்து மடங்கு பருமனுடையது. உருகிய நிலையில் மூளையுடன் இணைந்துவிடும். நெகிழும் தன்மையுடன் உறுதியும் கொண்டது. எனவே எளிதில் பயன்படுத்த முடியும் என்று ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். ★★★★★★★★★★★★★






# முட்டை அதிகம் வேண்டாம்!

பொதுவாக அசைவ உணவுகளில் முதல் இடம்பிடிப்பது முட்டைதான். எளிதாகச் செய்ய முடிவதும், எல்லோருக்கும் பிடித்தமானதாக இருப்பதும்தான் இதற்குக் காரணம்.

ஆனால், உடல் எடை அதிகமாக இருப்பவர்கள் முட்டையை அளவோடு சாப்பிட வேண்டும் என்கின்றனர் மருத்துவர்கள். பிறந்து ஒரு வயதுக்குள்ளான குழந்தைகளுக்கும் முட்டையின் மஞ்சள் கருவை எச்சரிக்கையாகக் கொடுக்க வேண்டும் என்றும் அறிவுறுத்துகின்றனர். அதாவது, ஒரு சாதாரண கோழி முட்டையில் 80 கலோரிச் சத்து இருக்கிறது. முட்டையை எவ்வாறு சமைத்து சாப்பிட்டாலும் இந்த கலோரிச்சத்துகள் குறைவதில்லை. இதில் 60 கலோரி முட்டையின் மஞ்சள் கருவில் இருக்கிறது. 20 கலோரிதான் வெள்ளைக்கருவில் இருக்கிறது.



அதனால், உடல் பருமன் அதிகமாகக் கொண்டவர்கள் மற்றும் முதியவர்கள், படுக்கையிலேயே இருக்கும் நோயாளிகள் முட்டையின் வெள்ளைக்கருவினை மட்டுமே சாப்பிடுவது நல்லது.

முட்டையின் மஞ்சள் கருவில் கொழுப்பு அதிக அளவில் இருக்கிறது. எனவே, முட்டையின் மஞ்சள் கருவை ஜீரணிக்கவே அதிக நேரம் பிடிக்கும். இது நம் இரத்தத்தில் உள்ள கொழுப்பின் அளவை அதிகப்படுத்துவது இல்லை. இருந்தாலும், முட்டையை அளவோடு சாப்பிடுவதுதான் நல்லது என்கிறார்கள் மருத்துவர்கள்.

தினமும் 300 மில்லிகிராம் கொழுப்புச்சத்து ஒருவருக்கு தேவைப்படுகிறது. ஒரு முட்டையின் மஞ்சள் கருவில் மட்டுமே 275 மில்லிக்கிராம் கொழுப்பு இருக்கிறது. எனவே அதிக பருமனானவர்கள், ஒரு நாளைக்கு ஒரு முட்டை சாப்பிட்டால், அடுத்து அதிக கொழுப்புள்ள பொருள்களை குறைவாகச் சாப்பிடுவதோ அல்லது சாப்பிடாமல் இருப்பதோ நல்லது.

சாதாரண உடல் எடையில் இருப்பவர்கள் காலை நேர உணவாக 2 முட்டைகள் சாப்பிட்டு வந்தால் அன்றைய தினம் முழுவதும் சோர்வு இல்லாமல் இயங்கலாம் என்று கண்டறிந்து இருக்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். ஒரு நாள் முழுக்க மனிதன் இயங்குவதற்கு தேவையான சக்தியை முட்டை தருவதும் இந்த ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது.

உடல் பருமன் பிரச்சினையில் இருந்து தப்பிக்க விரும்புபவர்கள், தாங்கள் எடுத்துக்கொள்ளும் உணவின் அளவை முடிந்தவரை குறைத்து, அதற்கு பதிலாக இரு முட்டைகளை காலை உணவாக எடுத்துக்கொண்டால், அவர்களது உடல் இயங்கு திறனும் பாதிக்கப்படாது, உடல் பருமனும் குறையும் என்றும் இந்த ஆய்வை மேற்கொண்டவர்கள் தெரிவித்தனர்.

ஆனால் அதே சமயம், காலை நேர உணவாக முட்டையைச் சாப்பிடும்போது, அந்த நாள் முழுக்க கொழுப்பு நிறைந்த உணவுகளைக் குறைவாகச் சாப்பிடுவதையும் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

குழந்தைகளுக்கு முதலில் அரை வேக்காடாக வேகவைத்து அதன் வெள்ளைக் கருவை மட்டும் கொடுத்து சாப்பிடப் பழக்க வேண்டும். பின்னர் சிறிது சிறிதாக அவர்களுக்கு மஞ்சள் கருவை அளிக்க வேண்டும். வயதானவர்களுக்கு முட்டையுடன், எளிதில் ஜீரணமாகக் கூடிய உணவுகளை நிச்சயம் அளிக்க வேண்டும். ★★★★★






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## United Nations Development Programme

UNDP

UNDP is the UN's global development network, advocating for change and connecting countries to knowledge, experience and resources to help people build a better life. We are on the ground in 166 countries, working with them on their own solutions to global and national development challenges. As they develop local capacity, they draw on the people of UNDP and our wide range of partners.

UNDP's programme portfolio in Sri Lanka includes the UNDP Support to Mine Action Project. The Project supports the Government to coordinate and manage Mine/unexploded ordnance clearance and other Mine actions in the North and East of Sri Lanka. The UNDP support to Mine Action Project Offices (District Mine Action Offices) in Jaffna, Killinochchi & Vavuniya are looking for experienced and energetic candidates to fill the following vacancies.

### VACANCIES

| | |
|---|---|
| **Position 1.**<br>**Senior Quality Assurance Assistant**<br>**Duty Station Vavuniya (1 position)** | **The successful candidate should possess the following qualifications:** |
| Following an initial period of orientation, the duties and responsibilities of the Senior Quality Assurance Assistants are as follows:<br>• Assist the DMAO Mine Action Officer in all aspects of Quality Management evaluation<br>• Plan and coordinate the Quality Assurance (QA) schedule within the DMAO AOR in consultation with the UNDP Technical Advisor, the Senior Operations Assistant, the Mine Action Officer and the Mine Action agencies<br>• Provide daily management and oversight to the QA teams<br>• Monitor QA inspection reports and ensure that they are correctly entered in the database<br>• Advise and regularly update the DMAO staff on aspects of QA<br>• Conduct external QA checks on tasks to ensure that Sri Lankan National Mine Action Standards are met (International Mine Action Standards (IMAS) are to be met until National Standards are published)<br>• Inspect, monitor or evaluate technical aspects of Mine Action operations, including but not limited to, Mine Risk Education, surveys and assessments, mapping, mine and UXO clearance, landmine survivor support, accident reporting, training courses, internal QA systems, stockpile destruction and advocacy against the use of landmines<br>• Participate in DMAO Board Of Investigation into mine and UXO investigations<br>• Provide feedback to Mine Action organizations on QA philosophy in Mine Action<br>• Any other duties suggested by and in agreement with the DMAO Mine Action Officer | • An internationally recognized qualification in Humanitarian Demining<br>• International training in Quality Management in Mine Action context<br>• Successful completion of secondary education<br>• At least 4 years work experience in mine/UXO clearance, preferably at a supervisory level.<br>• Good ability to speak and write in English with fluency in the Sinhala/Tamil language(s). |
| **Position 2.**<br>**Mine Action Quality Assurance Team Medic**<br>**Duty Station Jaffna (2 positions); Killinochchi (2 positions)** | **The successful candidate should possess the following qualifications:** |
| Following an initial period of orientation, the duties and responsibilities of the Mine Action Quality Assurance Team ( QA) Medic are as follows:<br>• Carry out demining team paramedic functions whenever the QA Team carries out any form of sampling on a mine clearance site.<br>• Plan and coordinate the QA medical schedule within the District Mine Action Office ( DMAO) Area of Responsibility (AOR) in consultation with the Mine Action Officer and the mine action agencies.<br>• Monitor all medical elements in QA inspection reports and ensure that data is correctly entered in IMSMA.<br>• Advise and regularly update the DMAO staff on relevant aspects of First Field Medic Support<br>• Provide First Aid Continuation Training on a regular basis to all DMAO staff.<br>• Inspect, monitor or evaluate medical aspects of Mine Action operations, including but not limited to, Mine Risk Education, surveys and assessments, mapping, mine and UXO clearance, landmine survivor support, accident reporting, training courses, internal QA systems, stockpile destruction and advocacy against the use of landmines.<br>• Work in close collaboration with District Mine Action Office (DMAO) staff to carry out on behalf of the GA, the quality assurance and quality control (QA and QC) operations applicable to mine action surveys, mine/UXO clearance and Mine Risk Education.<br>• Conduct Post-Clearance Impact Assessments (PCIA).<br>• Perform any other duties assigned by the GA, UNDP/PMU, the MAO, NSCMA and the MNBEID. | • Successful completion of secondary education.<br>• An internationally recognized medic's qualification in Humanitarian Demining or its equivalent.<br>• At least 3 years work experience in mine/UXO clearance, preferably at a supervisory level.<br>• Good ability to speak and write in English with fluency in the Sinhala/Tamil language(s). |
| • For full terms of reference please visit the UNDP Sri Lanka website "jobs".<br>**http://www.undp.lk** | |

Candidates are invited to send an updated CV, containing details of educational & professional qualifications, work experience, the names of two non-related referees, an email address and a contact telephone number during working hours. Closing date for applications is on or before **Wednesday, 2 June 2010**. Applications should be forwarded to the Deputy Country Director (Operations) to the address given below. Candidates should compulsorily send separate applications/ e-mails for each position and duty station applied for, indicating the specific position and duty station on the top left hand corner of the envelope/s or in the subject line of the e-mail/s. Qualified female candidates are encouraged to apply. Only short-listed candidates will be contacted for an interview.

The United Nations Development Programme
202-204, Bauddhaloka Mawatha, Colombo 7
**E-mail: vacancy.lk@undp.org**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# 'மேகங்கள் மென்மேலும் இருண்டு கொண்டிருக்கின்றன'

மு.புஷ்பராஜன்

அவனது நெஞ்சம் செழுமையற்று வரண்டு கொண்டிருந்தது. மேசையில் தலையை வைத்து, இருகைகளாலும் அதைக் கோர்த்துப் படுத்திருந்தவன் நிமிர்ந்த பொழுது மூலையில் ''பிளாஸ்ரர் பரீசினால்'' செய்யப்பட்ட யேசுநாதர் சிலை அவனுக்கு; ''வருந்திச் சுமை சுமப்பவர்களே வாருங்கள் என் அண்டையில்'' என ஆறுதல் கூறுவது போல் இருந்தது. சிறிது நேரம் அதையே உற்றுப் பார்த்தவன், விரக்தியுடன் சிரித்துக் கொண்டான்.

அவனது இடது கை நோக்கிற்கு, இலக்கியப் பசிக்கு உணவூட்டிய புத்தகங்கள் ஒரு ''பக்கீஸ்'' பெட்டிக் குள் அடுக்கி வைக்கப் பட்டிருக்கின்றன. அருகே வலதுகை நோக்கிற்கு ஒரு அலுமாரி. அதற்கு அருகில் மரத்தினால் செய்யப்பட்ட ''ஸ்கிறீனில்'' அழுக்காகிய உடுப்புக்கள்; கிழிந்த சேட்டுடனும், மூட்டை முடிச்சுக்களுடனும் தோன்றும் பிச்சைக்கார னைப்போல் காட்சி யளித்துக்கொண்டிருந்தது. அதனருகேயுள்ள ''பக்கீஸ்'' பெட்டியுள் சமைக்கப்பட்ட உணவைத் தாங்கிய பானை சட்டிகள், பீங்கான்கள். இத்தனைக்கும் மேலாக அந்த அறையின் நான்கு மூலைகளிலும் தூசுகள் படர்ந்து கூடாகித் தொங்கிக் கொண்டிருந்தன. இவற்றின் மத்தியில் வெறும் தரையில், அழுக்கடைந்த தலையணை மேல் கர்ப்ப வதியாக இரு குழந்தைகள் நடுவே தூங்கும் அவன் மனைவி. இத்தனை யும் சேர்ந்ததே அவனது முழுச் சொத்து.

மீண்டும் மேசையில் தலையை வைத் துப் படுத்துக் கொண்டான். கண்களை இறுக மூடிக்கொண்டபோது அவனது வாழ்வைப் போலவே அவை இரண்டும் தோன்றின. அந்தக் கருமை யூடே சிறிது நேரம் செல்லச் செல்ல பலவித வர்ணக் கலவையின் அழகிய கோலங்கள்.

'பெரியம்மா' அவனது இதய மூலை யில் நசிந்தெழுந்த ஊமை அழுகை ஒலி.

''பெரியம்மா''

தசை வடிந்து, உருமாறித் தடுமாறும் நடையுடன் அந்த உருவத்தைக் காணும் பொழுதெல்லாம் தலை குனிந்து நடந்த நாள்கள் அவன்முன் உருவம் கொண்டன.

இன்று தோன்றும் இந்த மெலிந்த உருவம்; அன்று வெற்றிவேலு டாக்குத் தரின் டிஸ்பென்ஸரி வளவினுள் நின்ற மாமரத்து நிழலின்கீழ், மருந்துக்கு நின்ற வேளை, அருகில் இருந்த பெரியம்மாவா...

எவ்வளவு உருவ மாற்றம்,

அன்று பெரியம்மாவின் வீடு செல்வத்தால் குலுங்கியபோது அவர்களில் ஒருவனாய் சில சௌபாக்கி யங்களை..... உடுப்புக்கள், பாடசாலைப் புத்தங்கள் போன்றவை.

இன்று செல்வம் கரைந்து வறுமை குடிகொண்டபோது?

'நான்!..... நான்!!.... ?

அவர்கள் ஆதரித்துக் காப்பாற்றி யதற்குக் கைமாறு.... ?

மனதில் புதைந்த விதை வளர்ந்து பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேலாகி விட்டதே! கிளைபரப்பி நின்று வாடும் அம்மரத்தில் ஒரு கனி!

மூத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை: 150

இன்று வரை இல்லையே!

அவனது மனைவி முனகியபடி மறு புறம் சரிந்து படுத்த பொழுது அவளைப் பார்த்தான்.

''எவ்வளவு வாடிப் போய்விட்டாள்''. அவனை அறியாமலே வாய் முணு முணுத்தது. அவளது குமரிப்பருவத்துக் கோலங்கள், அந்தச் செழுமை, அந்தப் பூரிப்பு, வாழ்க்கைச் சகடம் தான் கொடூரமான வடுக்களை அவள் மீது எப்படிப் பரவ விட்டிருக்கிறது.

மீண்டும் தலையை மேசையில் முட்டி, கண்களை மூடிக்கொண்டபொழுது அதே பலவித வர்ணக் கலவைகள்.

என்னங்க... நான் இப்ப ரண்டுமாச முங்க..... நீங்க என்ன முடியாட்டி நான் ஜெற்றியில விழுந்து செந்துப் போவேனுங்க.....''

அவள் கண்ணீரால் சிலிர்த்த கண்களில், எதிர்காலத்தின் இருள் கப்பிக் கிடந்தன.

வாழ்க்கையை விரைந்து ஏற்க வேண்டிய பொறுப்பு, நிர்ப்பந்தம், இவ்வளவு சீக்கிரத்தில் வரும் என அவன் எதிர்பார்க்கவேயில்லை.

பெற்று வளர்த்த அம்மா....

அதிகாலை கடும் குளிரையும் பொருட்படுத்தாது எழுந்து தேங்காய் துருவி, மாக்கரைத்து, அந்த நெருப்புச் சட்டிக்கு முன்னால் இருந்து, வியர்வை ஒழுக ஒழுக, காலை பத்துமணிவரை அப்பம் சுட்டு வளர்த்த அம்மாவின் நம்பிக்கைகள்.......

''யேசு'' படத்தின் முன் அம்மா கொழுத்தும் மெழுதிரி மாதிரி உருகவேண்டியது தானா..... ?

''ஐயோ என்ர அம்மா! என்ர அம்மா! நானென்ன செய்ய''

ஏமாற்றி விட்டால்..... ?

சீ அதுகளும் ஏழைகள், வாழ வழியற் றுப் போய்விடும். அவள் கூறிய மாதிரியே ஜெற்றிக்குள் விழுந்து விடுவாள்.

''எங்கே போவது ?''

காலை எழுந்து ஏதாவது வாயில் கொட்டி விட்டு சுட்டெரிக்கும் வெய்யிலில் தோலைச் சுருக்கி, தன் சக்தியை தாரை வார்த்து இளமை இழந்து, மாலையில் களைத்து அலுத்து வரும் அவனது உழைப்பு....

''திருப்தியாகக்கூட உண்ண முடிய வில்லையே. இதைவிட கடற் தொழிலுக்கே திரும்பவும் போகலாம் போலயிருக்கு....''

''சீ! அந்தக் காத்தடி கடலடி பட்டு உழைக்கும் பணத்தின் பெரும் பகுதியை சம்மாட்டியே சுருட்டி எடுத்துப் போடுறான். அதைச் சினந்து எதிர்த்த பொழுதுதான்....

''இஞ்சேரும் தம்பி உமக்கு விருப்ப மில்லாட்டி என்ரதொழிலில ஏறாதையும்....''

> 1970வதுகளில் ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைத் துறையில் தம்மை இணைத்துக்கொண்ட மு.புஷ்பராஜன் யாழ்ப்பாணம், குருநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.
>
> இலக்கிய, திரைப்பட விமர்சனக் கட்டுரை, சிறுகதை மற்றும் கவிதை ஆகிய துறைகளில் இவரது ஆக்கங்கள் வெளியாகியுள்ளன.
>
> இலங்கை போக்குவரத்துச் சபையில் பேருந்து நடத்துநராகவும் பின்னர் சாலைப் பரிசோதகராகவும் தொழில்புரிந்தவர்.
>
> 'அலை' சஞ்சிகையின் முதல் 25 இதழ்கள் வரை அதன் ஆசிரியர் குழுவில் அங்கம் வகித்தவர்.
>
> 'அம்பா' மற்றும் 'மீண்டு வரும் நாட்கள்' ஆகிய தலைப்புக்களில் இவரது கவிதைத் தொகுதிகள் முறையே 1976 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் வெளிவந்தன.
>
> தற்போது லண்டனில் வாழ்ந்து வருகிறார்.
>
> 'அலை' சஞ்சிகையில் வெளியான இவரது 'மேகங்கள் மென்மேலும் இருண்டு கொண்டிருக்கின்றன' சிறுகதை இங்கு பிரசுரமாகின்றது.

என்னை நம்பி அவள் தன்னையே தந்தாள். அந்த நம்பிக்கைக்குத் துரோகமா?

சீ! மனச்சாட்சி என்றும் குத்திக் கொண்டிருக்கும்.

நம்பிக்கையில் அவள் கண்ணீரைத் துடைத்த கரங்கள் வாழ்வில் மாறிமாறி யடித்த வறுமைச் சுழலில் அலைந்து நம்பிக்கையற்றுச் சோர்ந்து போய் விட்டன.

மெதுவாக எழுந்து மேசையில் இருந்த 'யக்கை' எடுத்து அறையின் மூலையில் இருந்த தண்ணீர் வாளியில் அள்ளிக் குடித்த பின் மனைவியை உற்றுப் பார்த்தான்.

இன்னும் சில மாதங்களில் இவளுக்குப் பிரசவம்.

அதன் செலவுகள்.... ?

அடுத்து வருடப் பிறப்பு.

புதிய தேவைகள்; மனைவிக்குப் புதிய உடுப்புக்கள். அடுத்த வீடுகளில் உள்ளவர்கள் உடுத்தும் உடுப்புக்கள். பார்க்கும் படங்கள். இவைகளை நினைத்து அவன் செறிந்த பெருமூச்சுக்கள்.....

அவர்களைப் போல் இல்லாவிடினும் ஓரளவிற்காவது......

பணம்.....!

வெட்டென்றான ஆங்காரமான பதில், இன்னொரு கரவலைக்குப் போனாலும் இதே நிலைமை. சீ. இந்தக் கரவலைத் தொழிலே வேணாம். மேசன்காரருக்கு கூலிவேலை செய்வம்.

இதுவும் கரைவலைத் தொழிலைப் போலவே முடிந்து போயிற்றே!

முதலாளி!

சீ! எவ்வளவு இரக்கமற்றவனாக இருக் கிறான். வாழ்வுடன் நித்தம் போராடும் கூலி களின் உழைப்பை எவ்வளவு சுலபமாகச் சுரண்டுகின்றான்.

வீட்டுச் சொந்தக்காரரிடம் கூலிக்கு ஆறு ஏழு ரூபாய் என்று வாங்கிவிட்டு, கூலிக்கு ஐந்து ரூபாய் மட்டும் கொடுக்கிறானே.

தன் ஆதாயத்தை இழக்க அவன் விரும்ப வில்லை.

அதே போல்தானே கூலியும் தன் உழைப் பின் பெறுமதியை இழக்க விரும்பான்.

இவர்களுக்கு கூலிகள் மனிதனாவே தெரிவதில்லையா?

வேலைசெய்து களைத்த கூலி, சற்று ஓய்வுக்கு நிழலை நாடினால் திட்டுகிறானே. ஓய்வையும் வெய்யில் குளித்து எழுந்தால்தான் திருப்தியோ.... ?

ஒழுங்கான வேலை. சீமெந்து இல்லை. அது இல்லை. இது இல்லை, மாதத்துக்கு ஆறு, ஏழு நாள்களுக்கு வேலையே இல்லை.

(18 ஆம் பக்கம் பார்க்க....)

# சீரிய வாழ்க்கை நடைமுறைக்கு வழிகாட்ட அமைந்தவையே பண்டைய தமிழ்க் காப்பியங்கள்

இலக்கியக் காட்சி 42

கவியால் இயற்றப்படுவது காவியமாகும். ஒரு கவிஞன் தான் உலகத்தார்க்கு அறிவு றுத்த விரும்பும் சிறந்த கருத்துக்களைத் தன் காவியத்தின் மூலம் எடுத்துக் கூறுகின் றான். இவ்வாறு கவிஞன் தன் கருத்தைக் காவியத்தில் அமைத்துச் செல்லும் பண் பிற்குப் பாவிகம் என்று பெயர். ''பாவிகம் என்பது காப்பியப் பண்பே'' என்பது தண்டியலங்கா ரம். கம்பர் தமது காப்பியத்தின் மூல மாக வாய்மை, தந்தை சொல் போற்றல், உடன் பிறந்தாரிடத்து அன்பு, கற்பின் திண்மை, நட்பின் சிறப்பு, செய்ந்நன்றி அறிதல், ஆணவத்தின் அழிவு முதலிய உண்மைகளை நமக்குப் பல நிகழ்ச்சி களின் வாயிலாக எடுத்துக் காட்டியுள்ளார்.



தசரதன் வரலாற்றினைப் படிக்கும்போது அவன் தனது வாழ்க்கையில் வாய்மை என்ற பண்பிற்கு எடுத்துக்காட்டாக விளங்கி னான் என்பது பெறப்படுகின்றது. இராமன் காடு செல்வதற்கு மன்னன் மனம் இசைய வில்லை. ஆனால் அவன் கைகேயிக்குக் கொடுத்த வரத்தினின்றும் தவறுதல் கூடாது என்ற ஒரு குறிக்கோளினால் இராமன் கான கம் செல்வதற்கு இறுதியில் இசைந்தான். தசரதன் வாய்மையின் சிகரம் என்பதைக் கம்பர் பல இடங்களில் விளக்கியுள்ளார். தசரதன் இறந்த செய்தியைப் பரதன் மூலமாக அறிந்த இராமன் தனது தந்தை இறந்தமை குறித்து வருந்தி அவரது பலதிறப்பட்ட பண் புகளைப் பாராட்டிப் புலம்பினான்.

''நந்தா விளக்கனைய நாயகனே நானிலத்தோர்
தந்தாய் தனியறத்தின் தாயேத யாநிலையே
எந்தாய் இகல்வேந்த ரேறே யிறந்தனையே
அந்தோ இனிவாய்மைக்(கு) ஆருளரே மற்றென்றான்''

[கிளைகண்டு நீங்கு படலம் - 60]

வாலி இராமனோடு வாதுசெய்யும்போது ''வாய்மையும் மரபும் காத்து மன்னுயிர் துறந்த வள்ளல், தூயவன் மைந்தனே!'' என்று விளிக்கின்றான். இவ் அடியிலிருந்தும் தசரதன் தன் வாய்மையைக் காத்து மன்னுயிர் துறந்தவன் என்பது விளங்குகின்றது.

உடன்பிறந்தார் ஒற்றுமைக்குப் பரதன் எடுத் துக்காட்டாக விளங்குகிறான். பரதன் இராமனிடம் கொண்ட அன்பு அளவு கடந்ததாகும். சுருங்கக்கூறின் இராமனே பரதனது உயிர் எனக் கூறலாம்; கம்பரும் இவ் வாறே கூறியுள்ளார். பரதன் தன் பாட்டனாகிய கேகயநாட்டு மன்னன் விருப்பப்படி அவரது நாட்டிற்குப் புறப்படும்போது தன் தந்தையை வணங்கிப் பிறகு இராமனது திருவடிகளை வணங்கி, இராமனைத் தவிர தனக்கு வேறு உயிர் இல்லையாதலின் உயிரை விட்டு உடல் பிரிவதுபோல் மிக்க வருத்தத்தோடு இராமனைப் பிரிந்து சென்றான் எனக் கம்பர் கூறியுள்ளது ஈண்டு நோக்கத்தக்கது.

''ஏவலும் இறைஞ்சிப்போய் இராமன் சேவடிப்
பூவினைச் சென்னியிற் புனைந்து போயினான்
ஆவியங்(கு) அவனல(து) இல்லையாதலால்
ஓவலில் உயிர்பிரிந் துடல்சென் றென்னவே.''

[பரசுராமப் படலம் -43]

தன் பாட்டனார் வீட்டினின்றும் திரும்பி வந்த பரதன், தசரதன் இறந்த செய்தியினை யும் இராமன் காடு சென்றதையும் தன் தாய் மூலம் அறிந்து தன் தாயின் கொடிய செயலுக்கு அவளை வெறுக்கின்றான். பின்னர் பரதன் இராமரைக் காட்டினின்றும் நாட்டிற்கு அழைத்துவரச் சென்றான். பரதனது சேனையைக் கண்ட குகன், பரதன் இரா மருக்குத் தீமை விளைவிக்க வருகின்றான் என்று முதலில் பிறழ உணர்ந்தான். அதன்பிறகு குகன், பரதன் காட்டிற்கு வந்த காரணம் யாது என்று அவனைக் கேட்க, அதற்குப் பரதன்:

''முழுதுலகு அளித்த தந்தை முந்தையோர்
முறையி னின்றும்
வழுவினன் அதனை நீக்க மன்னனைக்
கொணர்வான் என்றான்''

[குகப்படலம் - 33]

இதைக்கேட்ட குகன் பரதனது திருவடியில் வீழ்ந்து வணங்கி,

''தாயுரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னைத்
தீவினை என்ன நீத்துச் சிந்தனை முகத்தில் தேக்கிப்
போயினை என்ற போழ்து புகழினோய் தன்மை கண்டால்
ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ தெரியின் அம்மா''

[குகப்படலம் - 35]

என்று கூறிப் பரதனது பண்பினைப் பாராட்டினான்.

சீதையின் வாயிலாகக் கற்பின் திண் மையைக் கம்பர் நமக்கு விளக்கும் முறை யினைக் காண்போம். அசோக வனத்தில் சிறையிருந்த செல்வியாகிய சீதை, அனுமன் மூலமாக இராமபிரானுக்குச் சில செய்திகள் சொல்லி அனுப்புகின்றாள். ''நான் இலங்கை யில் இறந்து விட்டாலும் அடுத்த பிறவியி லும் இராமபிரானைச் சேர்ந்து வாழும் வரத் தினை எனக்குக் கொடுக்கும்படி இராம பிரானிடம் சொல்வாயாக'' என்ற கருத்தில்

''என்டு நாளிருந்து இன்னுயிர் மாயினும்
மீண்டு வந்து பிறந்துதன் மேனியைத்
தீண்டலாவதோர் தீவினை தீர்வரம்
வேண்டி னாள்தொழு(து) என்று விளம்புவாய்.''

[சூளாமணிப் படலம் - 35]

என்று சீதை அனுமானிடம் சொல்லி அனுப் பிய செய்தியிலிருந்து கற்புடைய மகளிர் தம் கணவரை இப்பிறவியிலன்றி மறுபிறவியிலும் சேர்ந்து வாழவிரும்புவர் என்ற உண்மை புலப் படுகின்றது. இக் கருத்தினைத் திருக்குறளிலும் காணலாம். ஒரு தலைவன் தன் தலைவியை நோக்கி ''நாம் இப்பிறவியில் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிதல் கூடாது'' என்று கூற, அதைக் கேட்ட தலைவி ''என்னை அடுத்த பிறவியில் பிரிந்து விடுவீர்களோ'' எனக் கூறிக் கண்ணீர் விட்டாள் என்பது.

''இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள்.''

[புலவிநுணுக்கம் - 5]

என்ற திருக்குறளால் அறியலாம்.

தந்தைசொல் போற்றல் என்ற நீதியினை இராமன் மூலமாகவும், நட்பின் பண்பினைக் குகன் மூலமாகவும், செய்நன்றி அறிதலின் சிறப்பினைக் கும்பகர்ணன் வாயிலாகவும், பேச்சுத் திறமையினைச் சொல்லின் செல்வனாக விளங்கிய அனுமன் வாயிலாகவும், ஆணவம் கொண்டு பிறர்க்குத் தீமை செய்யும் ஒருவன் இறுதியில் அழிவான் என்பதனை இராவணன் வரலாற்றிலும் கம்பர் நமக்கு எடுத் துக் காட்டியுள்ளார். இவை போன்ற பல உண்மை களையும் நீதிகளையும் கம்பர் பல பாத்திரங் களின் வாயிலாக நமக்கு விளக்கியுள்ளார்.

அந்த வகையில், கம்பர் தமிழில் எழுதிய இராமாயண காப்பியம் உலகத்து மக்கள் தமது வாழ்வில் கடைக்கொண்டொழுக வேண்டிய சீரிய நடைமுறைகளை வலியுறுத்தும் நோக்கில் புனையப்பட்டதொரு இதிகாசமாகக் கொள்ளத் தக்கதாகும். அக் காப்பியம் வலியுறுத்தும் வாழ்க்கை நடைமுறை உலகத்து மாந்தர்க ளுக்கு என்றும் அவசியமானவையே என்பது தெளிவாவதால், எமது இன்றைய வாழ்க்கையை நாம் அவற்றுக்கு அமைவாக மேற்கொள்ள முயல் வோமானால் எமது வாழ்வில் என்றும் மகிழ்ச்சி யும் மன அமைதியும் கிட்டும் என்பதில் எவ்வித ஐயமும் கிடையாது. ★★★★★★★★★★★★★★★

நன்றி: சுந்தரச் சொல்லோவியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Microsoft**

ask for genuine Microsoft software

## உங்களது தனிப்பட்ட கணினியினது புதிய மிகச் சிறந்த நண்பரை அறிமுகப்படுத்துகின்றது!

பாதுகாவலனுக்கு ஹலோ கூறி உங்களது தனிப்பட்ட கணினியினது பிரத்தியேக மெய்ப்பாதுகாவலரான மைக்ரோசொப்டினது பாதுகாப்பு அடிப்படைகளைச் (Security Essentials) சந்தியுங்கள்.

- நீங்கள் நம்பக்கூடிய பாதுகாவலர் - உங்களுடைய தனிப்பட்ட கணினியினைத் தாக்குவதற்கு முன்னர் புதிய ஆபத்துக்களைக் கண்டுபிடித்து அதற்குரிய தீர்வினை அளிக்கின்ற உடனடிப் பாதுகாப்பு.
- பெற்றுக்கொள்வது இலகுவானது, பாவனையும் இலகுவானது - எவ்வித பதிவுசெய்வதற்கான செயற்பாடுகளோ அல்லது தனிப்பட்ட தகவல்களினது தேவைகளோ இன்றி மிகவும் விரைவாகவும், இலகுவாகவும் உள்ளிணைக்கப்படக்கூடியது.
- வருடாந்த புதுப்பித்தல் கட்டணங்கள் அற்றது - நுந்திய பாதுகாப்பு தொழில்நுட்பத்துடன் தானாகவே தரமுயர்த்தலை மேற்கொள்கின்றது.
- பணிகளிலே குறுக்கீடுகள் அற்றது - மிகவும் குறைந்த இடையூறுகளுடன் சிக்கலின்றி தன் பணியினை முன்னெடுக்கின்றது.

மைக்ரோசொப்ட் பாதுகாப்பு அடிப்படைகள் (Microsoft Security Essentials) உங்களது தனிப்பட்ட கணினியினை இலவசமாக வைரஸ்கள், உங்களுடைய கணினியிலே குறுக்கீடுகளை ஏற்படுத்தும் அம்சங்கள் மற்றும் ஏனைய ஆபத்துக்களை விளைவிக்கக்கூடிய மென்பொருள் ஆகியவற்றிலிருந்து பாதுகாக்கின்றது.

### ஏன் இன்னும் தாமதம்?

இப்போதே மைக்ரோசொப்ட் பாதுகாப்பு அடிப்படைகளை (Microsoft Security Essentials) தரவிறக்கம் செய்துகொள்ளுங்கள்! www.microsoft.com/security_essentials இற்குள் நுழையுங்கள்

மேலதிக தகவல்களுக்கு Tech One Global இல 077 3876582 இனூடாக டெரிக்கையோ அல்லது Trident Corporation இல 077 7777561 இனூடாக ஷமிலாவையோ அழையுங்கள் அல்லது நாடளாவியரீதியிலுள்ள எந்தவொரு மைக்ரோசொப்டினது மீள்விற்பனைப் பங்காளர் விற்பனைநிலையங்களுக்கும் விஜயஞ்செய்யுங்கள்.




*அசல் விண்டோஸ் பிரதிகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தகமையுடையவர்கள் என உறுதிப்படுத்தப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு எவ்வித கட்டணங்களுமின்றி மைக்ரோசொப்ட் பாதுகாப்பு அடிப்படைகள் (Microsoft Security Essentials) கிடைக்கப்பெறுகின்றன.
எவ்வித பதிவுசெய்வதற்கான செயற்பாடுகளோ அல்லது தனிப்பட்ட தகவல்களினது தேவைகளோ அற்றது. உங்களது அசல் விண்டோஸ் உள்ளிணைப்பினது தன்னியக்க முறையிலான உறுதிப்படுத்தல் மட்டுமே.

*நிபந்தனைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டவை.

Windows 7 Microsoft Security Essentials

# உதிர்ந்தாலும் உலராத ஒரு மரக்கிளைகள்



யோசப் சிமியோன்
08.06.1922
26.12.1994



மேரி திரேசா சிமியோன்
17.05.1925
06.07.1998



மேரி பிளசிடா சிமியோன்
(இதயம்)
11.07.1952
28.02.2010



சூசைப்பிள்ளை அமிர்தநாதர்
05.04.1941
17.04.2008



அல்போன்சா அமிர்தநாதர் (புனிதம்)
25.02.1949
19.05.2009

தந்தையாக, தாயாக,
தமக்கையாக, தங்கையாக
தரணியில் எம்முடன் அன்பாக
உலாவந்தீர்
தரமான வாழ்வு நாம் வாழச்சீராக
எம்மை வழிநடத்தினீர்
தவறுகள் பல நாம் புரிந்த பொழுது
தயங்காமல் எம்மைத் தண்டித்தீர்
தடைகள் பல வந்த பொழுதிலும்
தளராது எம்மைக் காத்தீர்
தந்தை இயேசுவின் அழைப்பை ஏற்று
அவர்பாதம் போய்ச்சேர்ந்தீர்
தடங்கல் இன்றி காலம் ஓடிக்கொண்டே
இருக்கிறது. ஆனாலும்
தங்களின் நினைவுகள் மனங்களில்
இறவாது வாழ்கின்றன.
தங்களை நாம் வந்தடையும்வரை எம்
நினைவில் நீங்கள் இருப்பீர்கள்.

கேணியடி,
மானிப்பாய் மேற்கு.


மனம் கலங்கினாலும் தளராத
அமலன் குடும்பம்

# முதியவர்களுக்கென்று அடிப்படையான தேவைகளும் விருப்பங்களும் பல உண்டு

ஒருவர் முதுமையடையும்போது, பாரதூரமான ஒரு நோயோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பல நோய்களோ அவருக்கு ஏற்படும்போது இந்நோய்களும், அவற்றினால் ஏற்படும் குணங்குறிகளும், நோயும், வலியும், இயலாமைகளும் ஒருவருடைய தாங்கு திறனுக்கும் அப்பால் சென்று, அவரைத் தாக்கலாம், துன்பத்தைக் கொடுக்கலாம்.

இவ்வேளைகளில் அவரது மனம் உறுதி கெட்டு, மனச்சோர்வு ஏற்படலாம். அவ்வாறு ஏற்படுகின்ற மனச்சோர்வானது, அவருக்கு ஏற்கனவே இருக்கின்ற நோய்களைச் சரியான முறையில் கையாள்வதிலும் பிரச்சினைகளை ஏற்படுத்தலாம்.

அறளை பெயர்தல் ஏற்படும் பொழுதும், பாரிச வாதம் ஏற்பட்டதன் பின்பும், பார்க்கின்சன் வருத்தத் தினால் துன்புறும் வேளையிலும், மாதவிடாய் நிறுத்



தத்தின் பின்பு ஏற்படுகின்ற ஓமோன் குறைபாடு களின்போதும், தைரொய்ட் சுரப்பி சரியாகத் தொழிற் படாத நிலைமைகளிலும், குருதிக் குழாய் நோய்கள் இருக்கின்றபொழுதும்; மாரடைப்பு வந்ததன் பின்பும், ஒருவருடைய உடலின் ஒரு பாகம் துண்டிக்கப்பட்ட பின்பும், புற்றுநோய் போன்ற உயிராபத்தை ஏற்படுத்தும் நோய்களின் தாக்கத் தினாலும் மிக அதிக அளவில் மனச்சோர்வு ஏற்படு வது அவதானிக்கப்பட்டிருக்கிறது. இவ்வேளைகளில் ஏற்படுகின்ற மனச்சோர்வை ஆரம்பத்திலேயே அடையாளங்கண்டு, அதற்குச் சரியான முறையில் சிகிச்சையளிப்பதன் மூலம், அவருடைய வாழ்க்கை யின் தரத்தை உயர்த்த முடிவதோடு, அவருக்கு ஏற் பட்டிருக்கக்கூடிய ஏனைய நோய்களை நல்ல முறை யில் முகாமைத்துவம் செய்வதற்கும் வழியமைக்கலாம்.

சிலவேளைகளில் மனிதர்கள் தங்களுக்கு ஏற்பட்ட, ஏற்படக்கூடிய நோய்களைப் பற்றியே அதிகம் சிந்தித்த வண்ணம் இருப்பார்கள். அவர்களுக்கு எல்லா வேளைகளிலும் ஏதாவது ஒரு நோய் தேவைப்படுகின்றது. உடம்பில் உள்ள ஒவ்வொரு அவயவங்களிலும், உறுப்புகளிலும், தொகுதிகளிலும் தமது கவனத்தைக் குவித்து அவற்றில் இருந்துவருகின்ற புலனுணர்வுகளை அவர்கள் முறைப்பாடாகக் கூறுவார்கள். குறிப்பாக, முதுமையடையும் பொழுது உடலின் ஒவ்வொரு பகுதியிலும் சிற்சில பிரச்சினைகள் படிப்படியாக ஏற்பட்டு உபாதைகளைக் கொடுக்கலாம். எனவே, முதியவர்களின் முறைப்பாடுகளுக்குப் பஞ்சம் இருக் காது. முறைப்பாடுகளைச் சொல்வதன் ஊடாகவும், நோய்களைப் பற்றிய தொடர் ஆராய்ச்சிகளில் ஈடு படுவதன் ஊடாகவும் வெவ்வேறு வகைப்பட்ட வைத்தியர்களோடு பரிச்சயம் கொள்வது அவர்களுக்கு அவசியமானதாக மாறிவிடுகின்றது. இவ்வாறு அளவுக் கதிகம் நோய்களைப் பற்றிச் சிந்தித்தும், முறைப்பாடு செய்துகொண்டும் இருப்பவர்களின் பின்னணியில் சிலவேளைகளில் மனச்சோர்வு இருக்கலாம்.

முதுமைப் பராயத்தில் எதிர்நோக்குகின்ற இன்னுமொரு பிரச்சினையாக நிறைவேறாத தேவைகள் அமைந்திருக்கின்றன. முதிய வயதை யடைந்தவர்களுக்கும் சில அடிப்படையான தேவை களும், விரும்பங்களும் இருக்கின்றன. அவர்கள் தாம் விரும்பிய ஓர் உணவைச் சாப்பிட ஆசைப்படலாம். தமது பிள்ளைகளின், பேரப்பிள்ளைகளின் வாழ்க்கை பற்றி, அதில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் பற்றி அறிந்து கொள்ளவும், அவைபற்றிய தமது அபிப்பிராயங் களைக் கூறவும் விரும்பலாம். யாருடனாவது மனம் விட்டுக் கதைக்க அல்லது தமது அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள விரும்பலாம். படம்பார்க்க விரும்ப லாம். புதிதாக ஏதேனும் படிக்க விரும்பலாம். கணனி பற்றியும் செல்லிடத் தொலைபேசி பற்றியும் அறிய விரும்பலாம். கோயிலுக்குப் போகவும் புராண, இதிகாசங்களைப் படிக்கவும் விரும்பலாம். 'ஐஸ் கிறீம்' சாப்பிடவும், ஐஸ்வர்யாவின் நடனம் பார்க்கவும் விரும்பலாம். இவ்வாறு முதுமைப் பராயத்தில் இருபவர்களுக்குப் பற்பல தேவைகள் இருக்கலாம். அவற்றில் பல இனி முதுமையன்டயப் போகும் இளையவர்களால் ''தேவையில்லாதவை'' எனப் புறக்கணிக்கப்படலாம். ''இப்ப எங்கை திரியிறியள். சும்மா இருங்கோவன்.'' ''நீங்கள் ஏன் உதுகளைச் செய்யிறீங்கள்.'' ''ஆக்கள் ஆரேனும் வந்தால் தேவையில்லாததைக் கதைக்காதேங்கோ'', '' உங்களுக்கு வாழைப்பழம் கூடாது. குளிராக்கிப்போடும்'', ''சும்மா தொண தொணத்துக் கொண்டிராமல் அங்காலை போங்கோ!''. இவ்வாறான பல நிலைமைகள் தேவைகளுக்கும், அவற்றின் பொருத்தப்பாடுகளுக்கும், அவை உள்வாங்கப்படுகின்ற தன்மைகளுக்கும் இடையே ஏற்படுகின்ற முரண்பாடுகளுக்கான சில உதாரணங்களாகக் கொள்ளலாம். முதுமையடைந்தவர் கள் தங்களது தேவைகளைச் சரியாக வெளிப்படுத்துவ தோடு, அவற்றை எவ்வாறு பொருத்தமாக நிறை வேற்றலாம் என்பதை, தமது தற்காலச் சந்ததியின ரோடு, உடன்பாடு கண்டு முன்செல்வது பிரச்சினை களைக் குறைக்கவல்லது, இவை சரிவராதவிடத்து, இவ்வாறான பல நிறைவேறாத தேவைகள் வாழ்விற் சலிப்பை ஏற்படுத்தி, நாளடைவில் மனச்சோர்வு நிலையையும் கொண்டு வரலாம்.

இவற்றைவிட, சாதாரணமாக எல்லோருடைய வாழ்விலும் ஏற்படும் பல சாதகமற்ற சூழல் காரணிகள் முதியவர்களுடைய மனநிலையிலும் தாக்கத்தை ஏற்படுத்தலாம். இறப்பு, பிரிவு, இடப்பெயர்வு, வீடு மாறுதல், வருத்தம், துன்பம், வாழ்வு முறைகளுக்கு இயைபாக்கம் அடையாமை போன்ற எல்லாம் முதியவர்களையும் தாக்கக்கூடியது. இவ்வாறான பிரச்சினைகளைக் குடும்பத்தில் உள்ள எல்லோரும் ஒன்று சேர்ந்து, கூட்டாக எதிர்கொள்ளும்பொழுது அவற்றால் ஏற்படுகின்ற தாக்கங்கள் குறைவாக இருக்கும். ஆயினும், இவ்வாறான பல சந்தர்ப்பங்களில் சிறுவர்களும், முதியவர்களும் ஓரங்கட்டப்பட்டு விடுவதனால், இவ்விரு பராயத்தின்ரும் இவ்வாறான சூழல் தாக்கங்களால் பாதிக்கப்படுவது கவனிக்கப்படாமல் விடப்படுகிறது.

முதுமைப் பராயத்தை இயல்பாக அடைகின்ற பல பேர், தாங்கள் வாழ்ந்த வாழ்க்கையைப் பற்றியும், அந்த வாழ்வின் தொடர்ச்சிக்குத் தங்களுடைய பங்களிப்புப் பற்றியும் ஒரு திருப்தியான மனநிலையைக் கொண்டிருப்பார்கள். அவர்கள் தங்களுடைய வாழ்க்கையின் அடுத்த பயணத்திற்கு ஓரளவுக்கிருந்தாலும் ஆயத்தமான மனநிலையில் இருப்பார்கள். என்றாலும், சிலருக்கு இவ்வாறு திருப்திப்பட முடிவதில்லை. அவர்களுடைய மனம் நிறைவேறாத பல விடயங்களைப் பற்றியே எப்போதும் அங்கலாய்த்துக் கொண்டிருக்கும். வாழ்க்கையின் பெரும்பான்மையான பகுதிகள் கழிந்துபோனாலும்,

## பராமரிப்போர் அவற்றைப் புரிந்துகொண்டு விட்டுக்கொடுத்துச் செயற்பட வேண்டும்

தாங்கள் வாழுகின்ற வாழ்க்கையின் அர்த்தம் புரியாமல் இருக்கும். இறப்பு என்பது பயம் தருகின்ற ஒன்றாக இருக்கும். இறப்பைப் பற்றிய பல சிந்தனைகள் இவர்களுக்குப் பிரச்சினை களைக் கொடுக்கலாம். மரண பயம் மனதை மிகவும் பாதிக்கக்கூடியது. அது பதகளிப்பையும் மனச்சோர்வையும் இலகுவில் ஏற்படுத்திவிடக்கூடியது. வாழ்க்கை என்பதனைத் தங்களுக்கு ஏற்றவாறு, தாம் புரிந்தவாறு ஒரு தத்துவார்த்தக் கண்ணோடு பார்ப்பவர்கள் இவ்வாறான பிரச்சினைகளுக்குள் இலகுவில் அகப்பட்டுக் கொள்ளமாட்டார்கள். அவ்வாறு எதுவும் அற்று இருப்பவர்களே இலகுவாக உளப்பிரச்சினைகளுக்கு ஆளாகிவிடுகின்றனர்.

இதுவரை மனச்சோர்வை ஏற்படுத்தக்கூடிய பல்வேறு காரணிகளைப் பற்றி ஆராய்ந்தாலும், முக்கியமாக அறிந்து கொள்ளவேண்டிய இன்னும் ஒரு விடயம் உள்ளது. அது மனச்சோர்வானது எந்தவிதமான காரணங்களும் இல்லாமலே ஏற்படக்கூடியது என்பதுதான். அது எல்லா வயதினர்க்கும் பொருந்தக்கூடியது. முதுமையிலும் அவ்வாறே. எனவே முதியவர் ஒருவருக்கு மனச்சோர்வுக்கான அறிகுறிகள் தென்படும்பொழுது, அவரைப் பராமரிப்பவர்கள் ஒரு காரணத்தைத் தேடிக் கண்டுபிடித்தோ அல்லது ஒரு காரணமும் கண்டுபிடிக்க முடியவில்லை என்றோ தேவையில்லாமல் அதிகம் கவலைப்பட்டு, குற்றவுணர்வுக்கு ஆளாகத் தேவையில்லை. மூளையில் உள்ள கலங்கள், அவற்றின் சுரப்புகளில் இயல்பாக [illegible] மனச்சோர்வை ஏற்படுத்தலாம் என்பதனை மறந்துவிடலாகாது.

மனச்சோர்வுக்கான காரணிகள் எதுவாக அல்லது எவையாக இருந்தாலும், மனச்சோர்வை வேளைக்கே அடையாளங்காணுவது முக்கியமானது. அவ்வாறு அடையாளங்காணும் சந்தர்ப்பங்களில், அந்நோய்க்கு உரியமுறையில் சிகிச்சையளிப்பது முக்கியமானது. பொதுவாக எந்த ஓர் அடிப்படைத் தகைமையுடைய வைத்தியரும் மனச்சோர்வை அடையாளங்கண்டு, சிகிச்சையளிக்கக்கூடிய திறனைப் பெற்றிருப்பார். சிக்கலான வேளைகளில் ஓர் உள நல வைத்தியர் உதவியளிப்பார்.

பெரும்பாலானவர்களில் ஏற்படுகின்ற மனச்சோர்வு நோயானது எளிதில் சிகிச்சை யளிக்கக்கூடிய ஒன்றாக அமைந்திருக்கும். தற்காலத்தில் பல்வேறுவிதமான மனச்சோர்வுக் கெதிரான மருந்துகள் உள்ளன. அவற்றின் பொருத்தப்பாடு, பக்கவிளைவுகள் என்பவற்றைக் கவனத்திலெடுத்து, வைத்தியர்கள் மருந்துகளைச் சிபாரிசு செய்வார்கள். எல்லா விதமான மருந்துகளும் 'வேலை செய்து' மனநிலையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு குறைந்தது இரண்டு வாரங்கள் வரை செல்லலாம் என்பது முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய ஒன்றாகும். எனவே மனச்சோர்வுக் கெதிரான மருந்துகளைப் பாவிப்போர், சற்றுப் பொறுமை காக்கவேண்டி வரலாம்.

**(இதய நோய் நிபுணர் வைத்தியக் கலாநிதி பூ.லக்ஷ்மன் தமது தாயாரின் நினைவாகத் தொகுத்து வெளியிட்ட 'பண் சுமந்த பாடல்' என்ற நூலில் இருந்து சென்ற வாரம் வெளியிடப்பட்ட கட்டுரை யின் இரண்டாவதும் கடைசியுமான பகுதி இது)**

மனச் சோர்வுக்கான சிகிச்சை என்பது வெறுமனே மருந்துகளோடு மட்டும் எல்லைப்படுத்தப்பட முடியாதது. சில முதியவர்களுக்கு மருந்துகளைவிட மின்வலிப்புச்.சிகிச்சையானது நல்ல பலன்களை அளிக்கிறது. உளவளத்துணை, அர்த்தம் தேடும் சிகிச்சை, எனைய உளச்சிகிச்சை முறைகள் போன்றவையும் மிகவும் உதவிசெய்கின்ற சிகிச்சை முறைகளாகக் கொள்ளலாம்.

இவற்றோடு, முக்கியமாகக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய இன்னுமொரு விடயம், மனச்சோர்வை ஏற்படுத்திய அடிப்படைக் காரணிகள் பற்றியதாகும். இந்தக் காரணிகள் தொடர்பிலும் சில இடையீடுகளைச் செய்ய வேண்டியிருக்கும். பாதிக்கப்பட்ட முதியவருக்கும், அவரது குடும்ப உறுப்பினர்கள் அல்லது பராமரிப்பாளர்களுக்கும் இடையேயான உறவுச் சிக்கல்களைச் சரி செய்தல்; தனிமையைப் போக்கக்கூடிய வழிவகைகளை ஆராய்தல்; முதியவர் ஒருவரை அவருடைய இயலாமைகளோடும் பிரயோசனமான ஒருவராக வாழக்கூடிய நிலைமையை ஏற்படுத்துதல்; முதியவர்களில் சமூகமயமாதலை அதிகரித்தல்; தற்கால வாழ்க்கைப் பண்புகளுக்கு அவர்களைப் பழக்கப்படுத்துதல், அடிப்படை வசதிகள் மற்றும் பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய மார்க்கங்களுக்கு ஆற்றுப்படுத்துதல் போன்ற பல விடயங்கள் மனச்சோர்வை நீக்குவதில் பலனளிக்கக்கூடியவை.

இந்தக் கட்டுரையில் முதியவர்களுக்கு மனச்சோர்வு எனும் நோய்நிலை ஏற்படலாம் என்பதனையும், அந்நோய் நிலையானது, அவர்களின் வாழ்க்கையினுடைய தரத்தையும், பண்பையும் பாதிக்கக்கூடியது என்பதனையும் பார்த்தோம். அதனைத் தொடர்ந்து முதியவர்களுக்கு மனத்தாக்கத்தையும், மனச்சோர்வையும் ஏற்படுத்தக்கூடிய பல்வேறு காரணிகள் ஆராயப் பட்டு அதற்குரிய சில தீர்வுமுறைகளும் முன்வைக் கப்பட்டன. இறுதியாக, மனச்சோர்வு நிலையானது சிகிச்சையளிக்கக் கூடிய ஒன்று என்பது குறிப் பிடப்பட்டு, சிகிச்சையில் பாவிக்கப்படுகின்ற பல அணுகுமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன.


முதியவர்களில் ஏற்படுகின்ற மனச்சோர்வை அடையாளங் கண்டு, பொருத்தமான சிகிச்சைகளை வழங்கி அவர்களின் வாழ்வை வளம்படுத்த இந்தக் தக வல்கள் உதவக்கூடும் என்னும் நம்பிக்கையோடு இக்கட்டுரை நிறைவு பெறுகின்றது.*

(முற்றும்)



வைத்திய கலாநிதி சா.சிவயோகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர்: உண்மைச் சம்பவங்கள் மற்றும் மக்கள் கூறிய கதைகள், அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தச் சமூக அறிவித்தல் தயாரிக்கப்பட்டுள்ளது.

கொமர்ஷல் வங்கியின்

# பொற் கடன்
# அடகுச் சேவை



அதிகூடிய தொகை
குறைந்த வட்டி

CBCMarketing

தங்க ஆபரணத்திற்கு அதிகூடிய முதல்

தங்க ஆபரணத்திற்கு எதிராக வங்கி மேலதிகப் பற்று வசதி

உயர்ந்த இரகசியத் தன்மை

பாதுகாப்பு உறுதி

குறைந்த வட்டி வீதம்

COMMERCIAL BANK

2010ம் ஆண்டு மே மாதம் 24ம் திகதி முதல் மானிப்பாய் கிளையில்
அடகுச்சேவை வசதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகஜ யோகா

வழங்கும்


ஸ்ரீ மாதாஜி நிர்மலா தேவி
சகஜ யோகாவைத் தோற்றுவித்தவர்

**"அகத்துள் உறைந்திருக்கும் பேருண்மையை, மன அமைதியை தேடி ஓர் தியானப் பயிற்சி"**

நமக்குள், ஆழ்ந்திருக்கும் குண்டலினி எனப்படும் இற்றைசக்தியினை விழிப்படையச் செய்வதன் மூலம் சகஜ யோகா ஒரு தனித்துவமான, எளிய தியான முறையினை வழங்குகிறது. இச் சக்தியானது நம் சக்கரங்கள் எனப்படும் சக்தி மையங்களை சமநிலைப்படுத்தி, அதற்கு சக்தியூட்டுகிறது. சிறுவர்கள் முதல் பெரியவர் அனைவருக்கும் பயனுடையது.



**அமைதி, அன்பு, ஆனந்தம், உண்மை**

| 28th & 29th மே 2010 | 30th மே 2010 | 1st ஜூன் 2010 |
| --- | --- | --- |
| இடம்: ராமகிருஷ்ணா மிசன் இல: 40, ராமகிருஷ்ணா வீதி, கொழும்பு-6. | இடம்: வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம். | இடம்: முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம் கைதடி தெற்கு, கைதடி. |
| நேரம்: 3.00pm-6.00pm | நேரம்: 3.00pm-6.00pm | நேரம்: 3.00pm-6.00pm |

தொடர்புக்கு : Mrs Devi ( 011-94-214 920 100 )

**இலவச தியானப் பயிற்சி!!!**





# IELTS இன்றி Spot Admission மூலம் UK இல் உயர் கல்வி

| | |
| --- | --- |
| இடம்: | 04, IBC Road, Wellawatte, Colombo 6. |
| திகதி: | 5th June 2010 |
| நேரம்: | காலை 10.00 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரை |

For appointment please contact : > 0777-761346

**VISA பெற்றுக்கொள்ள முன்னர் அல்லது அதன் பின்னர் எந்தவொரு கட்டணமும் அறவிடப்படமாட்டாது.**

**எமது சேவை முற்றிலும் இலவசம்**


**O/L உடன் குறைந்த கட்டணத்தில்!**

flex Institute
Step Towards a Bright Future

4, IBC Road, Wellawatte, Colombo 6.
Hotline: 0777-761346
Email: flexinstitute@sltnet.lk
www.flexinstitute.lk
(A Subsidiary of Flex Graphic)


# மரண அறிவித்தல்

## பொன்னுத்துரை சுப்பிரமணியம்



கட்டுவனைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சுப்பிரமணியம் 20.05.2010 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - சிதம்பரம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் இரத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகனும் விசாலாட்சியின் அன்புக் கணவரும் சுகிர்தா (கனடா), சுதர்சன் (கனடா), சுயந்தன் (அவுஸ்திரேலியா), சுமணன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் தயாளன், பிரியதர்சா ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரசன்னா, டஸ்சியா, சௌமியா ஆகியோரின் அன்புப் பேரனும் சாந்தினிதேவி, சந்திரகுமார், விஜயகுமார், பாலச்சந்திரன், உதயகுமார், சாந்தகுமார் ஆகியோரின் மைத்துனரும் அன்னம்மா, கமலாம்பிகை, நகுலாம்பிகை (ராசன் மாமி), தவராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2010) ஞாயிற்றுக்கிழமை பி.ப.ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் மேற்கு,
மானிப்பாய்.
தொ.பே. 021 490 5802, 0779232661

தகவல்:
விஜயகுமார்
(விஜயன் - மைத்துனர்).

(98445)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓராண்டு நிறைவுற்றுள்ள வேளை


பெறுமதியான பலவற்றினை போர் எம்மிடமிருந்து பிடுங்கிவிட்டது
இழந்து போன அனைத்து உயிர்களையும் நினைவு கூறுவோம்
இலங்கையரனைவரையும் சமத்துவமாகப் பேணும்
இலங்கையைக் கட்டியெழுப்புவோம்!

## අවුරුද්දක් ගත වෙලා.

වටින බොහෝ දේ යුද්ධය අපෙන් උදුරා ගත්තා.
අහිමි වුනු සියලුම ජීවිත සිහි කරමු.
සියලු ලාංකිකයන්ගේ සමානත්වයට
ගරු කරන ශ්‍රී ලංකාවක් ගොඩ නගමු.

## One year has passed

The war snatched away too much that was precious
Let us remember all those we have lost
Let us rebuild a Sri Lanka
That respects equality for all Sri Lankans



Association of War Affected Women
Centre for Policy Alternatives
INFORM
Women and Media Collective

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 114

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ■ | 4 | | 5 | 6 |
| 7 | | | | | ■ | 8 | |
| | ■ | | ■ | 9 | | | ■ |
| ■ | 10 | | 11 | | ■ | 12 | 13 |
| 14 | | | | ■ | 15 | | |
| 16 | | ■ | 17 | 18 | | ■ | |
| | ■ | 19 | | | ■ | 20 | |
| 21 | | | ■ | 22 | | | |

அனுப்புபவர் பெயர்:........................................

விலாசம்:........................................

........................................

கையொப்பம்:........................................

### இடமிருந்து வலம்

1. இதன் தலைவர் கொல்லப்பட்டதால் மத்திய கிழக்கில் பதற்றம் நிலவியது.
4. உழைத்துப் பெறு.
7. மழையை எதிர்பார்த்து வேளாண்மை செய்வதை இப்படிக் கூறுவர்.
8. மன்மதன் மனைவி.
9. வகுப்பு.
10. வசனம்.
12. எது.
14. பூச்சிகளின் முழுவுடல் நிலைக்கு முந்திய நிலை.
15. பலவற்றைக் கோர்க்க வருவது.
16. முற்கால ஆயுதங்களில் ஒன்று.
17. இராமன் மகன்.
19. இது மறப்பது நல்லதல்ல.
20. நூற்று வீதத்தை இப்படிக் கூறுவர்.
21. காற்றோடு அள்ளுண்டு வரும் தூசி.
22. நாசியில் தூசி புகுந்தால் இரு வரும்.

### மேலிருந்து கீழ்

1. அமெரிக்காவை அண்டிய தீவு.
2. ஒரு விலங்கு. இதன் தோலுக்கும் கொம்புக்கும் மதிப்புண்டு.
3. தொடுகை உணர்வு.
4. சகலதும்.
5. மகாகவி.
6. நினைவு நாள்/ இறந்த தினம்.
10. மெலிந்து, நலிந்து போதல்.
11. திருவள்ளுவர் சகோதரன்.
13. தோய்த்தல்.
14. ஒன்று சேர்ப்பு.
15. அரசு.
18. குறைவு/ சிறுமை/ அறியாமை/ பயனின்மை
19. ஆறு.
20. ஒரே அளவான.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 112 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1)முகப்பரு.(5)பாதி. (6)துரு. (7)கசிதல். (9)கும்பல். (12) புகை. (13) புராணம்.(15)வரலாறு.(17) நுகர்தல். (19)சுடு. (20) பதி. (21)கத்த. (22) விரைவு(23) மலிதல்.

**மேலிருந்து கீழ்**

(1) முதுகு. (2)கரும்பு. (3) பகல். (4) ருசி. (5) பர்ல். (8) தகராறு. (10) பகைவர்கள். (11) கும்பிடுதல் (13)புலால் (14) அநுபவி. (16) ரதம். (18) கதிரை. (19) சுத்த. (21) கலி.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 112 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷடசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** – க.நதீனா, நாராயணன் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

**2 ஆம் பரிசு** – செ.றொபேட், மண்குழி வீதி, ஊர்காவற்றுறை.

**3 ஆம் பரிசு** – செல்வி.ந.தீப்யா, தரம் - 6, யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை.

**4 ஆம் பரிசு** – செல்வி அ. சுசீலாதேவி, நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

**5 ஆம் பரிசு** – ஐ.இந்துஜா, இல.212, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

அத்துடன் பாராட்டுப்பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 114**
**நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 02 .06.2010 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.114 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 06.06.2010 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) வி.கோரிதா, தரம் - 11 A, யா/கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி.காரைநகர்.

(2) பொ.சிந்துஜா, மக்கள்வங்கி, யாழ்.பல்கலைக்கழகக் கிளை.

(3) சி.ப.கிருஷ்ணான், இல. 244/4, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

## மேகங்கள் மென் மேலும்......

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

வாழ்வின் பழுவை மேலும் அதிக மாக்கிறது.

"இதையும் விட்டிட்டு முனிசிப்பால்டியில் கூலியாகப் போய் சேருவம்."

இங்கும் எத்தனை சம்பிரதாயங்கள், எம்.எம்.சியட்ட துண்டு வாங்கி, எஞ்சினியரிட்டப்போய் கைகட்டி அது இது எண்டு சேர்ந்தால்...

ஓவசியருக்கு மாதத்தில் சம்பளம் எடுக்கும் பொழுது பத்து ரூபாய் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் ஒழுங்காகப் பேர் விழாது. இத்தனைக்கும் நாளொன்றிற்கு சம்பளம் 4.50 சதம்.

"சீ! எங்கும் எதிலுமே சுரண்டல்....!"

"இதையும் விட்டு விடுவதா? இதையும் விட்டுவிட்டா சீவியத்துக்கு என்ன செய்யறது. தொடர்ந்து இருந்தாலும் மாதச் சம்பளமாக்கு வாங்க. என்ன செய்யற, பல்லைக் கடிச்சுக் கொண்டு இருக்க வேண்டியதுதான்."

திருப்தியாகத்தான் உண்ணமுடியவில்லை. அதற்கும் மேலால் புதிய செலவுகளென்றால்....

சமூக சூழலை ஒதுக்கி சங்யாசி வாழ்வு வாழ அவனால்தான் முடிகிறதென்றால் அவளால்...

அவள்தான் தன் இயல்பைக் காட்டிக் கொள்ள விரும்பவில்லையே!

"என்னங்க நம்ம சீவியம் இப்படியே கஷ்ரமாக போகுதுங்க. நமக்கு ஒரு விடிவே வராதா....?

அவர்கள் எதிர்பார்க்கும் அந்த வால் நட்சத்திரம்....

ஓ! அவைதான் மேகங்களால் மூடிக்கிடக்கிறதே!

தலையை திருப்பியவன் எதிரே முன்வீட்டு வளவில் உள்ள தென்னை மரத்தில் இருந்து, பழுத்த ஓலையொன்று வட்டுவிட்டு கழன்று மயிரிழையில் ஆடிக்கொண்டிருந்தது, அது காற்றிற்கு அங்குமிங்கும் அலையும் பொழுது, ஓலைகள் தென்னைமரத்தில் உரசும் ஒலி கேட்டுக்கொண்டே இருந்தது.

தெருவில் ஒரு கிழவன் விறகு நிறைந்த வண்டியை இழுக்க முடியாமல் இழுத்துக் கொண்டிருந்தான். துலாவை ஒரு கையாலும், மறு கயால் வண்டியில் கட்டியிருந்த கயிற்றைப் பிடித்து, ஒரு மாட்டைப்போல், குனிந்த தலை நிமிராமல் இழுத்துக்கொண்டிருந்தான். அவன் முதுகு மட்டுமே வியர்வையில் நனைந்து காட்சியளித்தது. அதை வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டே நின்றான். வண்டி அவனைக்கடக்க, அவன் பார்வையிலிருந்து வேலி அவனை மறைத்துக்கொண்டது. ஆனால் அவன் வண்டிக்காரன் தோன்றிய இடத்தையே வெறித்து நோக்கியபடி நின்றான். பின் சற்றுத் திரும்பி மனைவியைப் பார்த்தான். அவள் மறுபுறம் புரண்டு வெறும் வாயை மென்றுகொண்டிருந்தாள்.

"என்னங்க சீ.ரி.பி.யில கொண்டக்ரருக்கு ஆக்களை எடுக்கினமாம். நீங்களும் எழுதிப்போடுங்களன்."

அந்த வால் நட்சத்திரம் மேகத்தை மீறி வருவது போன்ற பிரமை அவளுக்கு.

"ம்....ம்....போடுவம். போட்டும் என்ன செய்யிற" அதுக்கெல்லாம் பணம் வேணும்-

நம்பிக்கையற்ற ஒலி.

"எல்லாத்திலும் உங்களுக்கு நம்பிக்கையில்ல. இப்பிடியெண்டா எப்பிடி வேல கிடைக்கும். ஒவ்வொரு எம்.பி.மாருக்கு பத்துப்பேர் குடுக்கினமாம். உங்கட பெரியம்மாட அண்ணணைப் புடிச்சு எம்பியட்ட போங்க, உங்கட அண்ணன் சொன்னா எம்.பி.செய்வார்"

"உண்மைதான் எம்.பியிடம் அண்ணனுக்கு செல்வாக்கு உண்டுதான், அண்ணனிடம் போய்ப் பாப்பம்."

நேர்முகப் பரீட்சைக்கு வந்த அழைப்பைக் கண்டு அவன் மனைவிக்கு வேலையே கிடைத்த பூரிப்பு, கொழும்புக்குப் போக வேண்டி அவனது உடைகளைத் துவைத்தாள்.

மீண்டும் இன்னொரு நேர்முகப் பரீட்சை, அடுத்து வைத்தியப் பரிசோதனை.

இவற்றிற்காக ஒவ்வொரு முறையும் கொழும்பிற்குப் போகும்பொழுது அவள் போட்டிருந்த "தோடு" அடைவு கடைக்குப் போனதுடன், பக்கத்து வீடுகளில் கடனும் ஏறியது.

வைத்தியப் பரிசோதனைக்குப் பின் வேலை கிடைக்கும் என்று நம்பிக்கை அவனில் துளிர்த்தது.

அந்த வால் நட்சத்திரத்தின் ஒளி அவனுக்கும் தெரிவது போன்ற பிரமை.

வேலை கிடைத்தால்....!

வேலை கிடைத்தால்....!

"ஓவர் ரைம் செய்து நன்றாக உழைக்க வேணும். மனைவியின் அடைவு வைத்த நகைகளை மீட்க வேண்டும். அவளுக்கு நல்ல சீலை, படத்துக்கெல்லாம் கூட்டிக் கொண்டு போகவேணும்.

பிள்ளைகளை நல்லாப் படிக்க வைக்க வேணும். வருசப் பிறப்பிற்கு நல்ல சட்டைகள், மத்தாப்புப் பெட்டிகள் வாங்கிக் கொடுக்கவேணும்.

"நன்றாக உழைச்சு காசை மிச்சம் பிடிச்சு பெரியம்மாவை நல்லாக் கவனிக்கவேணும் என் நன்றிக் கடனெல்லாம் தீர்க்கவேணும்.

கனவுகள்! கற்பனைகள்!! கற்பனைகள்!!! மகிழ்ச்சித் திளைப்பில் நாள்கள் கழிவதே தெரியவில்லை.

றெயினிங்குக்கும் அழைப்பு வந்துவிட்டது.

வறுமையை மேவி மகிழ்ச்சி குலுங்கிய வேளையில் அக்கம் பக்கத்தில்....

"மற்றதுகள் கூலி வேல செய்து கொண்டு அதுக்கு இதுக்கு எண்டு எழுதி, உத்தியோகம் எடுக்குதுகள்; இதுகள்... எங்கட்டயும் இருக்குதுகளே.... அதுகளும் படிக்காததுகளா மற்றதுகளைப்போல வேலைக்கு எழுதிப் போட்டா என்ன?...

அவன் காதில் அடிபடும் அளவிற்கு நச்சரிப்பு வளர்ந்தது.

அவன் பல நாள் பட்டினியாக இருந்த பொழுது ஏனென்று கேட்காதவர்கள் இன்று ஏதோ உத்தியோகத்துக்குப் போகப் போகிறான் என்றவுடன் எத்தனை நச்சரிப்புக்கள்.

அவன் மாநகர சபையில் கூலியாக இருந்த வேளையில்; பொதுக் கக்கூசுக்கு வெள்ளை அடித்த பொழுதும், கான்களைக் கழுவி அதற்கு சிமெந்து போட்ட பொழுதும் வெட்கத்தால் அவனுடன் கதைக்காத நண்பர்கள்கூட, பொறாமையுடன் விசாரித்துப் பொருமினார்கள்.

"சீ! என்ன மனிதர், என்ன சமூகம்"

அவனை அறியாமலே மனிதர்மேல் ஒருவித வெறுப்பும் வன்மமும் வளர்ந்து கொண்டிருந்தது.

"இஞ்சேருங்க சகுந்தலா அண்டைக்கு உங்கட வேல விசயம் கதச்சுப் போட்டு இனியென்ன உங்களுக்கு நித்தம் சோறு எண்டு சொல்லுது. பாத்தீங்களா அதட மனத்த. பொறாமை புடிச்ச சனியங்கள்"

அவன் மௌனமாகச் சிரித்துக் கொண்டான்.

எல்லா ஆசைகளும் தகர்ந்து தரை மட்டமாகப் போய் விட்டனவே.

"சிங்களமாம் சிங்களம், சிங்கள இடத்தில்தான் வேலையிருக்காம். சிங்களம் தெரிய[illegible]மாம். தமிழ் பகுதியில் [illegible] இடம் வரக் கூப்பிடுகினமாம். எப்ப இடம் வாறது .எப்ப கூப்பிடுற. சீ! சீ! எல்லாமே வீண். எத்தின சிலவு எத்தின கடன். முந்தி யிருந்த கடன் போதாதென்றா இப்பவேற. இதெல்லாம் எப்ப குடுக்கிற... ஐயோ கடவுளே...

அந்த வால் நட்சத்திரத்தை மீண்டும் மேகங்கள் மறைந்துக் கொண்டன.

சிந்திக்கத் சிந்திக்க மூளையே குழம்புவது போலிருந்தது. விரல்களால் தலைமயிரை ஊடுருவிப் பிய்த்துக் கொண்டான்.

வேலியில் நின்ற காக்கை நெடுகக் கத்திக்கொண்டிருக்க, எரிச்சலுடன் அதைத் துரத்தியவன் அறைக்குள் வந்தான். அவன் மனைவி இன்னமும் தூங்கியபடியே கிடந்தாள். மெதுவாகச் சேட்டைப் போட்டுக் கொண்டு வெளியே நடந்தான்.

மாலை கசிந்த அந்த நேரத்தில் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு நடந்தவன் கடற்கரை எதிரில் வந்து நின்றான்.

கடலலைகள் அவனைப் போலவே ஆடிக்கொண்டிருந்தன. அதற்கேற்ப அங்கு கட்டப்பட்ட சிறுசிறு வள்ளங்களும் ஆடிக் கொண்டேயிருந்தன. தூரத்தே தெரியும் வரை மரங்களிடையே ஆங்காங்கு தெரியும் மின்விளக்கின் ஒளி மினுங்கிக்கொண்டிருந்தது. கடல் நீருக்கு மேல் மிகப் பதிவாகப் பறந்துகொண்டிருந்த கொக்கு ஒன்று களங்கட்டி வலைக் கம்பு ஒன்றில் குந்தித் தவமியற்றத் தொடங்கியது. மேகங்கள் இருண்டு கொண்டிருந்தமையினால், கடலலைகள் மேல் கருநீலம் தழும்பிக் கொண்டிருந்தது. காற்று சற்றுப் பலமாக வீசியதால் அவன் தலைமயிர்கள் கலைந்து முன்நெற்றியில் அலைந்துகொண்டிருந்தது.

அருகில் இருந்த கற்களைப் பொறுக்கி கடலுள் எறிந்துகொண்டிருந்தான். அவை "டிக்" என்னும் ஓசையுடன் அமிழ்ந்து கொண்டிருந்தன.

"எனக்கு ஏன் இந்தக் கஷ்டங்கள். இந்தப் பரந்த உலகில் என்னைப்போல் எத்தினை எத்தினை பேரோ? என்னுடைய துயரங்கள், ஆசை, அபிலாஷைகள் என்றும் தீர முடியாத துயரங்கள்தானா.... இதைத் தீர்ப்பதற்கு வழியே இல்லையா...."

அவனைச் சுற்றிச் சுற்றி இவை உள்ளொளியாய் எழுந்துகொண்டிருந்தன. அவன் கற்களை வீசிகொண்டே இருந்தான்.

இந்த வள்ளங்கள் அலையின் வீச்சால் ஆடிக்கொண்டுதான் இருந்தன.

அந்தக் களங்கட்டிக் கம்பில் கொக்குத் தவம் இயற்றிக்கொண்டே இருந்தது.

அவனுக்கு மேலால் மேகங்கள் மென் மேலும் இருண்டுகொண்டே இருந்தன. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடற்புண்களைக் குணமாக்கும் திறன் கொண்டது - முட்டைக்கோவா



எமக்கு வரும் நோய்களில் தொண்ணூறு சத விகிதமானவை எமது உணவுப் பழக்கத்தால் ஏற்படுபவையே. இது மருத்துவத் துறையால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஓர் அறிவியல் பூர்வமான உண்மை. உணவுப்பழக்கம், வாழ்க்கைப் பழக்கம் மற்றும் மனப் பழக்கம் என்ற மூன்றும் நம்முடைய நோய்களை நிர்ணயிக்கும் மகத்தான சக்திகளாகும். உதாரணத்துக்கு 'அல்சர்' எனப் படும் குடற்புண் நோயை எடுத்துக் கொள்வோம். இந்த 'அல்சர்' நோயைப் போக்குவதற்கு இலகுவான வழியொன்று உள்ளது. முட்டைக் கோவாவைக் காலையில் வேகவைத்து, அந்த வேக வைத்த தண்ணீரை வெறும் வயிற்றில் தொடர்ந்து குடித்து வந்தால் 'அல்சர்' நோய் குணமாகும் எனக் கூறப்படுகிறது.

கூடுமானவரை முட்டைக் கோவாவை இட்டலித் தட்டில் ஆவியிலே வேகவைத்து உண்பது நல்லது.

வைத்தியர்கள் கொடுக்கும் மருந்தைவிட, ஆறு மடங்கு கூடிய வேகத்தில் குடற்புண்களைக் குணமாக்கக்கூடிய ஆற்றல் முட்டைக் கோவாவுக்கு உள்ளது. ''குருடோனமன்'' என்கிற ஓர் அமிலம் முட்டைக் கோவாவில் உள்ளது. அது குடற்புண்களை முற்றிலுமாகக் குணப்படுத்தக்கூடிய வல்லமை கொண்டது. அத்தோடு நமது உணவின் மூலம் உடலுக்குள் சென்று விடும் நோய்த்தொற்றுக் கிருமிகளை முட்டைக் கோவா அழித்தொழிக்கும்திறன் கொண்டது. அத்தோடு நோயெதிர்ப்புச் சக்தியைத் தூண்டும் வலிமையையும் இது கொண்டுள்ளது. குறிப்பாகக் குடற்புற்றுநோய் ஏற்படாது தடுக்கும் திறனையும் முட்டைக் கோவா கொண்டுள்ளது.

இத்தகையதொரு சாதாரண இலைக்கறியைத் தொடர்ந்து நாம் உணவில் சேர்த்து வந்தால் 'அல்சர்' தொல்லையிலிருந்து விடுபட இயலும்.

பாரம்பரிய உணவுப் பழக்கம் என்று ஒன்றுண்டு. எல்லோருக்கும் எல்லா உணவு வகையும் பிடிப்பதில்லை. ஆனால் வாய்க்கு ருசியான உணவைத் தேர்ந்தெடுப்பதை விட, சத்துள்ள உணவு வகையைத் தெரிவு செய்வதால் ஆரோக்கிய வாழ்க்கைக்கு அது பெருமளவில் உதவுகிறது.

உலகில் பசியால் இறந்தவர்களை விட ருசியால் இறந்தவர்களே அதிகம் எனக் கூறப்படுவதுண்டு. எனவே எமது உடலுக்கு ஒவ்வாத உணவு வகைகளைத் தவிர்த்து சத்துள்ள உணவு வகைகளை உண்போமானால் அது எமது ஆரோக்கிய நீண்ட ஆயுளுக்கு உதவும். ** - *திரோ,வரணி.*

# வாழ்வின் ஆதாரமே நம்பிக்கை தான்



மரதன் ஓட்டப்போட்டியொன்றில் பங்குபற்றிய ஏராளமான வீரர்கள் நகரத்தின் குறிப்பிட்டதொரு தெருவழியாக ஓடிவந்து கொண்டிருந்தனர். பாதையின் இரு மருங்கிலும் நின்ற பார்வையாளர்கள் கைதட்டி வீரர்களை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தனர். கூட்டத்தோடு கூட்டமாக நின்ற எனக்கு அருகில் நின்று மரதன் ஓட்ட வீரர்களை வேடிக்கை பார்த்த கிராமத்தவர் போல் தோற்றமளித்த ஒரு வயதானவர் ''ஏன் இவர்களெல்லாம் இப்படிக் கண் மண் தெரியாமல் ஓடுகிறார்கள்'' எனக் கேட்டார், ''பெரியவரே! இது ஒரு நீண்டதூர ஓட்டப்போட்டி. இதில் முதலாவதாக எவர் ஓடி முடிக்கிறாரோ அவருக்குப் பெருந்தொகைப் பணம் பரிசாகக் கிடைக்கும்'' என நான் அவருக்கு விளக்கமளித்தேன். ''முதலாவதாக வருவபவருக்குத் தான் பரிசு வழங்கப்படுமென்றால் ஏன் மற்றவர்களெல்லாம் தேவையில்லாமல் ஓடிக் கஷ்டப்பட வேண்டும்?'' என்று அவர் தனது அடுத்த கேள்வியைப் போட்டாரே பார்க்கலாம்.

எனக்கு ஒரு கணம் அவரைப் பார்த்து அழுவதா? சிரிப்பதா என்று தோன்றவில்லை. உண்மையில் இப்படியானதொரு போட்டியில் கலந்துகொள்ளும் எவரும் அவர் போட்டியின் ஆரம்பத்தில் பின் தங்கிப் போனாலும், தான் எப்படியும் எல்லோருக்கும் முன்னால் ஓடி முடித்து பரிசைப் பெற்றுவிடுவேன் என்றதொரு நம்பிக்கையில்தான் தொடர்ந்து முயற்சிக்கிறார். முடிவு எப்படியும் அமையலாம். அவரால் சிலவேளை முதலாவதாக ஓடிமுடித்து வெற்றிபெறவும் வாய்ப்புக் கிட்டக்கூடும். எப்படியும் நான் போட்டியில் வென்று விடுவேன் என்ற நம்பிக்கையில் தான் ஒவ்வொருவரும் போட்டியில் கலந்து கொள்கிறார்கள். அந்த நம்பிக்கை தான் அவர்களை ஓட உற்சாகம் கொடுக்கிறது. பல சமயங்களில் அது பலருக்கு வெற்றி வாய்ப்பையும் கொடுத்திருக்கிறது. ஓட்டப்போட்டியில் மட்டுமென்றல்லாது பரீட்சைகளிலும் தொழில் முயற்சிகளிலும் - பொதுவாக மனித வாழ்க்கையின் வெற்றிக்கு அடிப்படையாக அமைவது நம்பிக்கை - தன்நம்பிக்கையே. நம்பிக்கை ஒவ்வொரு மனிதரிலும் உள்ளிருந்து ஊற்றெடுக்கும் உயிர்ச்சக்தி. அதனை மற்ற ஒருவரிடம் இருந்து பெற்றிட இயலாது. ஒரு முட்டையை உள்ளிருந்து ஒரு சக்தி உடைத்தால் அது ஜனனம். அதேயே வெளியிலிருந்து ஒருவர் உடைத்தால் அது மரணம். எனவே உங்கள் சிறைகளை, துயக்கத்தை, அச்சத்தை, அவநம்பிக்கையை நீங்களே உடைத்தெறியுங்கள். உங்களது திடமான நம்பிக்கை உங்களுக்கு வெற்றியை ஈட்டித்தரும். ***

- ஜோ.நிலாஜா, *யாழ்ப்பாணம்.*




# முட்டாள்களுக்கு ஒரு குட்டு



விவேகானந்தர் அதிகமாகப் பிரபலமடையாமல் இருந்த வேளையில் ஒரு சமயம் தென்னிந்தியாவில் புகையிரதத்தில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அதே புகையிரதப் பெட்டியில் பயணம் செய்து கொண்டிருந்த பிரிட்டிஷ் இராணுவ வீரர்கள் இந்தியத் துறவிகளைப் பற்றிக் கீழ்த்தரமாகத் தமக்குள் விமர்ச்சித்துக் கொண்டிருந்தனர். விவேகானந்தரோ அவற்றைச் சிறிதும் பொருட்படுத்ததாது மௌனமாக உட்கார்ந்திருந்தார்.

சேலம் புகையிரத நிலையத்தில் புகையிரதம் தரித்து நின்றவேளை புகையிரத நிலைய அதிபருடன் விவேகானந்தர் ஆங்கிலத்தில் உரையாடியதை அவதானித்த அந்த இராணுவ வீரர்கள், புகையிரதம் மீண்டும் புறப்பட்ட போது ''உங்களுக்குத்தான் ஆங்கிலம் நன்றாகத் தெரிந்திருக்கிறதே! நாங்கள் இந்தியத் துறவிகள் குறித்து கூறிய கருத்துக்களுக்கு நீங்கள் மறுப்பேதும் தெரிவிக்க முயலவில்லையே?'' என விவேகானந்தரைக் கேட்டார்கள்.

விவேகானந்தரோ இலேசான புன்முறுவலோடு ''முட்டாள்களை நான் சந்திப்பது இது முதல் தடவையல்ல'' எனக் கூறியதைக் கேட்டு, அந்த பிரிட்டிஷ் இராணுவ வீரர்கள் வெட்கித்தலை குனிந்தனர். நிறைகுடம் ஒருபோதும் தளும்பாது.********

# முன்னேற்றத்தின் மூல மந்திரம்

இதற்கு மேலும் கொஞ்சம் நன்றாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் - விருப்பம் சமையலில் இருந்து சகலதிலும் இருக்க வேண்டும். ஒரு சமயம் 'கல்கி' வாரப் பத்திரிகையில் 'பல நாடுகளில் சொற்பொழிவுகள் நிகழ்த்தி இருக்கிறீர்களே! உங்களது சொற்பொழிவுகளில் மிகச் சிறந்ததாக எதனைக் கருதுகிறீர்கள்?' என்ற கேள்விக்கு 'என்னுடைய அடுத்த பேச்சுத்தான்' எனப் பதில் அளித்திருந்தேன். நான் ஏற்கனவே நன்றாகப் பேசிவிட்டேன் எனக் கருதினால் எப்படி என்னால் பேச்சுத் துறையில் வளரமுடியும்? இன்னும் கொஞ்சம் நன்றாகப் பேச வேண்டும் என்று நினைத்தால் தானே - முயற்சித்தால் தானே பேச்சுத்துறையில் வளரமுடியும். எந்தத் துறையானாலும் இத்தகைய ஆர்வமும் முயற்சியும் தேவையே. இத்தகைய எண்ணமும் ஊக்கமும் உள்ளவர்களின் வளர்ச்சியை எவராலும் தடுத்திட முடியாது.

பிறந்த குழந்தை முதலில் கை, கால்களை அசைக்கிறது. அழுகிறது, குப்புறப் படுக்கிறது, நெஞ்சால் உந்தி முன் செல்ல முயல்கிறது, தவழுகிறது, எழுந்து உட்காருகிறது, எதையாவது பிடித்துக் கொண்டு தட்டுத்தடுமாறி எழுந்து நிற்கிறது, தத்தித்தத்தி நடக்கிறது, கொஞ்ச நாளில் ஓடுகிறது.

அந்தக்குழந்தையால் எதைச் செய்ய முடிகிறதோ அதில் அது திருப்தி அடைவதே இல்லை. தான் அடைந்த நிலைக்கு அடுத்த நிலை எதுவோ அதனை அடைவதற்கு அது ஆர்வம் காட்டுகிறது. அத்தகைய முயற்சி உடல் அளவில் ஒரு கால கட்டத்துடன் நின்று விட்டாலும், உள்ளத்து அளவில் அத்தகைய முயற்சி நிற்கவே கூடாது. 'இன்னும் கொஞ்சம் கொஞ்சம்' என்ற இலக்குடன் முன்னேற முயன்றால் முயற்சி திருவினையாக்கும். இதுவே முன்னேற்றத்தின் மூல மந்திரம்.

-சுகிசிவம்

# அம்மை நோய்க்குத் தடுப்பு மருந்து கண்டுபிடித்த எட்வேர்ட் ஜென்னர் (1749-1823)



மனிதரைப் பீடிக்கும் கொடிய தொற்று நோயான அம்மை நோய் வராமல் தடுக்கும் முறையைக் கண்டுபிடித்தவர் இங்கிலாந்தின் ஒருசிற்றூரில் பிறந்த எட்வேர்ட் ஜென்னர் என்பவராவார். பாதிரியார் ஒருவரின் மகனான ஜென்னர், தமது பள்ளிப்படிப்பின் பின் மருத்துவக் கல்வி பயின்று வைத்தியர் ஒருவரின் கீழ் பயிற்சியும் பெற்ற பின்னர் 1770 துகளில் தமது சொந்த ஊரில் மருத்துவச் சேவை செய்து வந்தார்.

அந்தக் காலகட்டத்தில் உலகின் பல பாகங்களிலும் அம்மைநோய்த் தாக்கம் காரணமாகப் பலர் உயிரிழந்து வந்தனர். ஜென்னரது சொந்த ஊரில் மாடு வளர்ப்போர் அதிகமாக வாழ்ந்து வந்தனர். அவர்கள் மாட்டம்மை (COW POX) நோயினால் அடிக்கடி பாதிக்கப்பட்டாலும் உயிராபத்திலிருந்து பிழைத்துக் கொண்டனர். அத்தோடு அம்மை நோயால் பாதிக்கப்பட்டோர் போன்று அவர்கள் உடம்பில் தழும்புகள் ஏற்படவில்லை. மாட்டம்மை நோய் கண்டு குணமானோருக்கு அம்மை நோய் வராது என்ற நம்பிக்கை அவ்வூர் மக்கள் மத்தியில் நிலவிவந்தது.

அதனை அடிப்படையாகக் கொண்டு ஜென்னர் மேற்கொண்ட ஆராய்ச்சிகளின் பயனாக உயிராபத்தை விளைவிக்கவல்ல அம்மை நோய்க்கான தடுப்பு முறையை அவரால் கண்டுபிடிக்க முடிந்தது. இன்று உலகில் அம்மைநோய் முற்று முழுதாக ஒழிக்கப்பட்டு விட்டது என்று கூறும் அளவுக்கானதொரு நிலைமை உருவாகக் காரணமாய் அமைந்தது எட்வேர்ட் ஜென்னரால் அறிமுகப் படுத்தப்பட்ட அம்மை நோய்த் தடுப்பு முறையே ஆகும்.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்மேல் நடக்கும் சாகச வீடியோக் காட்சி

யூடியூப்பில் வெளியாகியிருக்கும் இளைஞர்களின் சாகச வீடியோ காட்சி ஒன்று இணையவாசிகள் மத்தியில் நம்ப முடியாத உணர்வை ஏற்படுத்தி, பிரமிப்பில் ஆழ்த்தியுள்ளது.

நீர்மேல் நடப்பது என்று பெயர் சூட்டப்பட்டுள்ள இந்த வீடியோ காட்சி யூடியூப்பில் புதிதாக முடிசூட்டப்பட்டுள்ளது. வீடியோ பகிர்வு தளமான யூடியூப் இணையவாசிகள் மத்தியில் பிரபலமாக இருக்கிறது. வீடியோ காட்சிகளை பதிவேற்றவும், மற்றவர்கள் பதிவேற்றிய வீடியோ காட்சிகளைப் பார்க்கவும் யூடியூப் உதவுகிறது.

கூகுல் நிறுவனத்தால் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் வாங்கப்பட்ட யூடியூப் வீடியோ பதிவுத்தளங்களில் பிரபலமானதாக வும், முன்னணித்தளமாகவும் விளங்குகிறது. யூடியூப்பில் இடம்பெறும் வீடியோ கோப்புகளில் அலுப்பூட்டும் காட்சிகள் அதிகம் என்றாலும் அவற்றுக்கு மத்தியில் புன்னகைக்க வைக்கக்கூடியதும், பிரமிப்பில் ஆழ்த்தக்கூடியதுமான காட்சிகள் அவ்வப்போது இணையவாசிகளைக் கவர்ந்து உலகம் முழுவதும் பிரபலமாகி விடுவது உண்டு.

அந்தவகையில் இப்போது யூடியூப்பில் இளைஞர்களின் சாகச வீடியோ காட்சி ஒன்று பிரபலமாகி இருக்கிறது. பார்ப்பவர்களையெல்லாம் வியப் பில் ஆழ்த்தியுள்ள அந்த வீடியோக் காட்சியானது இதுவரை பல்லாயிரக் கணக்கானோரால் பகிரப்பட்டு, இலட்சக்கணக்கானோரால் இரசிக்கப் பட்டுள்ளது. மூன்று இளைஞர்கள் தண்ணீர் மேல் வேகமாக நடந்து செல்லும் காட்சியை அந்த வீடியோ சித்திரிக்கிறது. இதுவரை யாரும் பார்த்தறியாத செயற்கரிய செயல் எனும் வர்ணனையோடு அல்ப் கார்ட்னர் மற்றும் அவரது நண்பர்கள் இந்த வீடியோக் காட்சியைப் பதிவேற்றியுள்ளனர். போர்த்துக்கல் நாட்டில் உள்ள ஏரி ஒன்றில் தண்ணீர் மீது இந்த 3 இளைஞர்களும் மின்னல் வேகத்தில் நடந்து செல்லும் காட்சி உண்மையிலேயே வியப்பில் ஆழ்த்தக்கூடியதாக இருக்கிறது.

முதல் பார்வைக்குப் பிரமிப்பை உண்டாக்கும் இந்தக் காட்சி உண்மை யிலேயே நிகழ்த்தப்பட்டதா அல்லது ஏதாவது ஏமாற்று வேலையா என்னும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் காட்னர் மற்றும் அவரது நண்பர் கள் இந்த காட்சிக்கு பின்னே எந்த ஏமாற்று வேலையும் கிடையாது. இது முழுக்க முழுக்க சாகசம் என்று உற்சாகமாகக் கூறுகின்றனர்.

இப்படி தண்ணீர் மேல் நடக்கும் நம்ப முடியாத செயலை ஒரு புதிய விளையாட்டு என்று வர்ணிக்கும் கார்ட்னர் இந்த விளையாட்டிற்கு 'நீர்மலையேறுதல்' என்று புதியதோர் பெயரையும் சூட்டியுள்ளார். நீர்மேல் நடப்பது சாத்தியமில்லாதது போல் தோன்றினாலும் உண்மையில் தண்ணீர் புகாத காலணியை அணிந்து கொண்டால் தண்ணீர் மேல் நடக்கலாம் என்றார் அவர். இத்தகைய காலணி அணிந்து கொண்டு தண்ணீர் மேல் கால் வைத்ததும் நிற்காமல் மின்னல் வேகத்தில் ஓடுவது போல நடந்து கொண்டே இருக்க வேண்டும் என்று அவர் மேலும் கூறுகிறார். தையல் இயந்திரத்தின் செயற்பாட்டைப் போல கால்கள் படுவேகமாக நடக்கும் போது இது எளிதில் சாத்தியம் என்கிறார் அவர். இப்படி போர்த்துக்கல் ஏரியில் அவர்கள் 10 அடிகளை வைத்து நடந்து காட்டியிருக்கின்றனர். உண்மையோ பொய்யோ தெரியாது. ஆனால் இந்த சாகச விளையாட்டு இணையத்தளத்தில் ஆச்சர்ய அலைகளைப் பரப்பி வருகிறது. *****

# மன அழுத்தத்தைக் குறைப்பதற்கான உடற்பயிற்சிகள்

பரபரப்பான இறுக்கமான சூழலில் சுழன்று கொண்டிருக்கிறது உலகம். எல்லாத் துறையிலும் எல்லாப் பணிகளிலும் அனைவரும் ஒருவிதமான மன இறுக்கத்துடனேயே சுழன்று கொண்டிருக்கிறார்கள்.



மனிதனுக்கு வரும் நோய்களில் அதிகமான நோய்கள் அழுத்தமான சூழல் காரணமாக வருவதாகச் சமீபத்திய ஆராய்ச்சிகள் குறிப்பிடுகின்றன. இதுவே மன அழுத்தத்தைக் குறைப்பதற்கான தேவையை நமக்கு எடுத்துக் கூறுகிறது.

இந்த மன அழுத்தத்தைக் குறைக்க சில வகையான உடற்பயிற்சிகளை மேற்கொள் ளலாம். இருக்கையில் அமர்ந்தவாறே இந்த உடற்பயிற்சியை செய்யலாம்.

1. தலையை இடதுபக்கமாகச் சாய்த்து இடதுபக்க காது தோற்பட்டையில் படும் படி சாய்த்து நன்றாக அழுத்தத்தைக் கொடுக்கவும். வலது கையை தலையில் சிறிது அழுத்துவதன் மூலம் அழுத்தத்தைக் கொடுக்கலாம்.

2. இதே போன்று சமநிலையான, இறுக்கமற்ற நிலையில் தலையை வலது பக்கமாகச் சாய்த்து வலதுபக்க காது தோற்பட்டையில் படும்படி சாய்த்து நன்றாக அழுத்தத்தை கொடுக்கவும்.

3. ஒரு நிலையில் இருந்து கொண்டு கண்களை இமைக்காது இடமிருந்து வலதுபக்கமாகத் தலையைச் சுழற்றவும், இவ்வாறே ஒரு நிலையில் இருந்து கொண்டு கண்களை இமைக்காது வலதுபக்கமிருந்து இடது பக்கமாக தலையைச் சுழற்றவும்.

4. இடது கையை மடித்து நெஞ்சுப்பகுதிக்கு மேலாக வலதுபக்கத் தோற்பட்டையில் படும்படி செய்து அழுத்தத்தைக் கொடுக்கவும்.

5. வலது கையை மடித்து நெஞ்சுப்பகுதிக்கு மேலாக இடதுபக்க தோற்பட்டையில் படும்படி செய்து அழுத்தத்தைக் கொடுக்கவும்.

6. இருக்கையில் அமர்ந்தவாறே குனிந்து உங்களது பாதங்களைக் தொடவும்.

7. இருக்கையில் அமர்ந்தவாறே கைகளை முன்நோக்கி நீட்டி இருகைகளையும் ஒன்று சேர்த்து பாதங்களைத் தொட முயற்சித்து அழுத்தத்தைக் கொடுக்கவும்.

8. வலதுகையை நீட்டி தூக்கிப் பெருவிரல் மற்றும் நடுவிரல்களுக்கு மாறி மாறி அழுத்தத்தை கொடுக்கவும், இதேபோல் இடது கைக்கும் செய்யவும்.

இந்த பயிற்சிகளை நீங்கள் வாரத்தில் 3 தொடக்கம் 4 தடவைகள் செய்யலாம். மேலும் 15 தொடக்கம் 30 செக்கன்கள் வரை இந்தப் பயிற்சிகளைச் செய்து வந்தால் மன அழுத்தம் குறையும். ★★★★★




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரினால் சிதைவடைந்த கிளிநொச்சி மகாவித்தியாலயம் சகல வளங்களும் குன்றிய நிலையிலும் கல்விப் போதனையில்

நிர்மூலமான சூழலில் சிதைவடைந்த கட்டடங்களின் நடுவில் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது கிளிநொச்சி மகா வித்தியாலயம். எல்லாவற்றையும் இழந்த பொழுதும் இழக்க முடியாத கல்விக்காய் ஏங்கும் பிள்ளைகளால் இந்தப் பாடசாலை மீண்டும் பொலிவு பெற்று வருகின்றது. தேவைகளும் பிரச்சினைகளும் என்று நாளாந்தம் பல்வேறு நெருக்கடிகளுடன் மனத்தால் சிதைவுகள் காயங்களை உடைய் பிள்ளைகளுடன் தனது அடுத்த பயணத்தை தொடங்கியிருக்கின்றது இந்தப்பாட சாலை. இந்தப் பாடசாலையின் அதிபர் பங்கயற்செல்வன், ஆசிரியை சுரமஞ்சரி, பாலேந்திரன், மாணவன் வேலு நிக்ஷன் ஆகியோருடன் உதயனுக்காக நிகழ்த்திய உரையாடல் இங்கு பிரசுரமாகிறது.

**கேள்வி:** நாலாம் கட்ட யுத்தத்தின் முன்பான உங்கள் பாடசாலையின் அடைவும் தற்போதைய நிலையும் எப்படி இருக்கிறது?

**பதில்:** எங்களுடைய பாடசாலையைப் பொறுத்தவரையில் 80 ஆண்டு வரலாற்றைக் கொண்டது. 80 வருடங்களைக் கொண்ட இந்த வரலாற்றில் சாதனைகளும் பெறு பேறுகளும் என்று வளர்ச்சியான நிலையிலேயே போய்க்கொண்டிருந்தது. இடப்பெயர்வுக்கு முன்னரான காலம் பொற்காலம் என்று நாங்கள் கருதுகிறோம். கிளி நொச்சி மகா வித்தியாலயம் ஒரு தடவை அல்ல பல தடவைகள் இடப்பெயர்வைச் சந்தித்திருக்கிறது. கிளிநொச்சி நகரின் மத்தியில் இந்தப் பாடசாலை இருப்பதன் காரணமாக கிளிநொச்சி எந்த சந்தர்ப்பத்தில்போருக்கு முகம் கொடுக்கிறதோ அப்பொழுதெல்லாம் இந்தப் பாடசாலை இடம்பெயருகின்ற ஒரு நிலைமைக்கு தள்ளப்பட்டது. ஒவ்வொரு தடவையும் நாங்கள் இடம்பெயர்ந்து போய் மீண்டும் இந்த வளாகத்திற்கு திரும்ப வரும் பொழுது வெறும் கற்குவியல்களாக இருந்து பின்னர் கட்டி எழுப்பப்புட்ட வரலாறாக இருக்கின்றது.



எங்கள் பாடசாலையில் நாங்கள் இடம்பெயருவதற்கு முற்பட்ட காலம் பெறு பேறுகளிலும் சரி சாதனைகளிலும் சரி பௌதிக வளங்களிலும் சரி நாங்கள் மிக உன்னதமாக இருந்த காலமாக இருந்தது. கா.பொ.த உயர்தர வகுப்புக்களில் மாணவர்கள் சாதாரணமாக 3 ஏ பெறுபெறு எடுக்கின்ற நிலைமையும் கா.பொ.த சாதாரண தரத்திலே மாணவர்கள் சாதாரணமாக 10 ஏ பெறுபேறு எடுக்கின்ற நிலைமையும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையிலே 25 முதல் 30 வரையான மாணவர்கள் சித்தி எய்துகின்ற நிலைமையும் எங்கள் பாடசாலையில் இருந்தது.

எங்களது பாடசாலையில் இலகுவான சூழ்நிலையில் மாணவர்கள் பெறுபேற்றைப் பெறுகின்ற அளவுக்கு நிலைமைகள் சாதகமாய் இருந்தன. அப்படி ஒரு நிலையை ஆசிரியர்களும் மாணவர்களும் எங்களுடைய சமூகத்தவரும் தோற்றுவித்திருந்தனர். கல்வியுடன் மட்டுமன்றி கல்வியுடன் இணைந்த புறநிகழ்வுகளிலும் எங்களது பாடசாலை அகில இலங்கை ரீதியாக சாதனைகளைப் படைத்து நின்றது. கடந்த இடப்பெயர்வின் முன்னர். தமிழ்த் தினப் போட்டிகளாயினும் சரி, விளையாட்டுப் போட்டிகளாயினும் சரி நாடளாவிய

பாடசாலை வளாகம் இப்படி இருக்கும் என்று நாங்கள் கனவிலும் நினைக்க முடி யாத அளவுக்கு உருக்குலைந்து போயிருந்தது.

முதல் முதல் கட்டப்பட்டிருந்த 2 மாடி கட்டடம் சுக்குநூறாக்கப்பட்டு அழிக்கப்பட்டிருந்தது. எந்தக் கட்டடங்களுக்குமே கூரைகள் இருக்கவில்லை. ஆரம்பப் பிரிவு கட்டடங்களில் ஒரு கட்டடம்கூட இல்லாத நிலையில் அழிந்து போயிருந்தன. பாடசாலை வளாகத்தில் கால் வைக்க முடியாதளவுக்கு யுத்தத்தால் மிக பாதிப்படைந்து போயிருந்தது. இப்பொழுது பாடசாலை தொடங்கி நான்கு மாதங்கள் ஆகின்றன. இதற்குள் பாடசாலைக்குள் நடமாடக் கூடியளவிற்கு சூழலை உருவாக்கியிருக்கிறோம். மாணவர்களுடைய எண்ணிக்கையுடன் ஒப்படுகின்ற பொழுது கட்டடங்கள் போதாத நிலையில் இருக்கின்றன. 50 வீத கட்டட வசதிகூட இல்லாத நிலையில் உள்ளது.

**கேள்வி:** போரினால் உங்கள் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் என்ன தாக்கங்களை எதிர்கொண்டுள்

**பதில்:** இந்தப் பாடசாலையைப் பொறுத்தவரையில் தேவைகளைத்தான் பட்டியல் படுத்தக்கூடிய நிலையில் உள்ளன. நிறைவுகள் என்று பார்க்கும்பொழுது அதன் பட்டியல் மிகச் சிறியதாக உள்ளது. பௌதிக ரீதியான தேவைகளில் வகுப்பறைக் கட்டடங்கள் 50 வீதமான தேவையைக்கூட எட்டவில்லை. இரண்டு கட்டடங்கள் மட்டும் கூரை போடப்பட்டுள்ளது. அதில் ஒன்பது வகுப்பறைகள் இருக்கின்றன. ஒரு மண்டபம் இருக்கின்றது. அந்த மண்டபத்தில் நான்கு வகுப்பறைகள் வைக்க கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஏறத்தாழ 35 வகுப்பறைகள் தேவையான சூழ்நிலையில் 13 வகுப்பறைகள் மட்டுமே இருக்கின்றன. அதிபர் அலுவலகத்தை நான் கூரையில்லாத ஒரு அலுவலகத்திலே தான் வைத்திருக்கிறேன். மழை பெய்தால் மழைநீர் முழுவதும் அலுவலகத்துக்குள் வரும். மாணவர்கள் படிக்கக்கூடிய வகுப்பறையை வீணாக்கக் கூடாது என்ற படியினால்தான் அந்த அலுவலகத்தை கூரையில்லாத மண்டபத்தில் வைத்திருக்கிறேன்.

கட்டடங்கள் நிறையத் தேவைப்படுகின்றன. திருத்தக்கூடிய கட்டடங்களை திருத்த எங்களிடம் நிதி இல்லை. 'யுனிசெப்' நிறுவனத்தின் நிதி உதவியுடன் யுனொப்ஸ் நிறுவனம் அமைத்து தந்த நான்கு கட்டடங்கள் வெறும் அத்திவாரத்துடனும் கம்பிகளுடனும் காட்சி தருகின்றன. இவற்றை சம்பந்தப்பட்டவர்கள் செய்து தரவேண்டும். தளபாடங்கள்

வகுப்புக்களை நடத்துகிறோம். இப்படி பல பிரச்சினைகளை எதிர்நோக்கியவர்களாக மாணவர்கள் இருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு மகிழ்வு ஊட்டுகிற கவர்ச்சி கரமான கல்வியை வழங்குவதில் இடநெருக்கடி பெரும் பிரச்சினையாக இருக்கின்றது.

முன்பு நாங்கள் பெற்றோர்களின் உதவியுடன் ஆரம்ப கல்வி மாணவர்களுக்கு அடைக்கப்பட்ட வகுப்பறை ஒன்றை அமைத்



## இயல்பு நிலைக்கு மீள்வதற்கு வெளிநாடுகளில் உள்ள பழைய மாணவரின் ஆதரவை நாடுகின்றார் அதிபர்

ளார்கள்? ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் வகுப்பறைச் செயற்பாடுகள் எப்படி உள்ளன? அது தொடர்பான ஆய்வுகள் எதையாவது செய்திருக்கிறீர்களா?

**பதில்:** பாடசாலையின் மாணவர்கள் ஆசிரியர்கள், இறந்துபோனது பாதிக்கப்பட்டது என்ற பார்க்கிறபொழுது நாங்கள் அதிளவு பாதிப்பிற்கு உள்ளாக்கியிருக்கிறோம். மூன்று ஆசிரியர்களும் இரண்டு பணியாளர்களும் இறந்திருக்கிறார்கள். இரண்டு ஆசிரியர்கள் தமது துணைகளை இழந்ததோடு, நான்கு ஆசிரியர்கள் தமது குழந்தைகளை இழந்திருக்கிறார்கள். நாங்கள் எடுத்த கணக்கெடுப்பின் அடிப்படையில் ஏறத்தாழ 60இற்கு மேற்பட்ட மாணவர்கள் போரில் இறந்து போயிருக்கிறார்கள். இது எங்களுக்கு மிக வேதனை தருகின்ற விடயமாகும். கண்பார்வை இழந்த மாணவர்களும் கால் ஒன்றை இழந்த மாணவனும் இருக்கிறார். அதைவிட பலர் காயங்களுடன் இருக்கின்றார்கள்.

ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் மிக நீண்ட காலமாக போருக்கு முகம் கொடுத்ததால் எறிகணை ஷெல், பங்கர் வாழ்க்கை விமானக் குண்டு வீச்சின் பாதிப்பில் கூடுதலாக அவர்கள் பாதிக்கப்பட்ட தன் காரணமாக இயல்பான கல்வியை அவர்கள் வழங்குவதிலும் மாணவர்கள் அதை பெற்றுக்கொள்வதிலும் இடர்களை நாங்கள் எதிர்கொள்கின்றோம். ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பாதிப்புகளுக்கு உள்ளானதை நாங்கள் வகுப்பறைகளில் பார்க்க

## தம்மை இருள்மயமாக்கியுள்ள மாணவருக்கு நெகிழ்ச்சித் தன்மையான போதனைமுறை தேவைப்படுகிறது

ரீதியிலான எல்லாப் போட்டிகளிலுமே எங்களது பாடசாலை தனக்கென தனியான அடையாளங்களைப் பதித்து நின்றகாலம்.

மாணவர்கள் ஏறத்தாழ 2400இற்கு மேற்பட்டவர்களும் 74 வரையிலான ஆசிரியர்களும் இடப்பெயர்வின் முன்னர் கல்வி கல்விக்காக இணைந்திருந்தனர். ஆனால் இடப்பெயர்வு எங்கள் பாடசாலையின் சகல நிலைமைகளிலும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. 2008ஆம் ஆண்டு இரண்டாம் தவணையுடன் எங்கள் பாடசாலை இடம்பெயர்ந்தது. 2008 மூன்றாம் தவணையைத் தர்மபுரம் மகாவித்தியாலயத்தில் மாலை நேரப் பாடசாலையாக இயக்கினோம்.

### 2009 ஜனவரியில் செயற்பாடுகள் முழுமையாக இழந்தது

2009 ஜனவரி தர்மபுரம் மாகா வித்தியாலயத்தில் வைத்து தனித்துவமாக இயக்குவதற்கு முடிவெடுத்தோம். ஆனால் அப்படி இயங்க முடியவில்லை. அன்று முதல் இடம்பெயர்ந்த எமது பாடசாலை தன் செயற்பாடுகளை முழுமையாக இழந் தது. பின்னர் நாங்கள் இடம்பெயர்ந்து இடம் பெயர்ந்து முகாங்களுக்கு சென்று மீண்டும் 2010 ஜனவரி மாதம் எங்களது பாடசாலைக்கு திரும்பிய பொழுது எங்களது

கூடியதாக உள்ளது. அது கடும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஆசிரியர்கள் மாணவர்களின் வீடுக்ள் பாதிக்கப்பட்டிருக்கின்ற சூழலில் ஆசிரியர்கள் இன்னும் நிரந்தரமாக கிளிநொச்சிக்கு திரும்பவில்லை. 30 வீதமான ஆசிரியர்கள் மட்டும் தமது சொந்த இடத்தில் குடியேற வந்திருக்கிறார்கள். ஏனைய ஆசிரியர்கள் வவுனியாவில் இருந்தும் யாழ்ப்பாணத்தில் இருந்தும் நாளாந்தம் வந்து செல்கின்றார்கள். அவர்களிடம் முழுமையான செயற்பாடுகளை நாங்கள் எதிர்பார்க்க முடியாத சூழ்நிலை இருக்கின்றது.

ஆனால் ஆசிரியர்களதும் மாணவர்களதும் தளராத மனம் மாணவர்களுடைய கல்வியை வளம்படுத்தும் என்று நான் நினைக்கின்றேன். முன்பு இந்த ஆசிரியர்கள்தான் எங்கள் பாடசாலையின் உச்ச கட்ட வளர்ச்சிக்கு காரணமாக இருந்தவர்கள். ஆனால் ஆசிரியர்கள் போரின் தாக்கத்திற்கு உற்பட்டதன் காரணமாக அவர்களிடம் இருந்து முழுமையான செயற்பாட்டை எதிர்பார்க்க முடியாமல் உள்ளது.

**கேள்வி:** இன்றைய சூழலில் பாடசாலையில் என்ன தேவைகள் நிறைவேற்றப்படாமல் உள்ளன?

பெரும் பற்றாக்குறையாக உள்ளன. எங்களுடைய தளபாடங்களை தர்மபுரம் மகா வித்தியாலயத்தில் கொண்டுபோய் வைத்தோம் அங்கு முழுமையான தளபாடங்கள் இருப்பதாக அவதானிக்க முடியவில்லை. அத்தோடு பொருத்தமற்ற தளபாடங்களில் மாணவர்கள் இருக்கின்ற நிலைமையும் காணப்படுகின்றது.

**கேள்வி:** மீண்டும் பாடசாலையைக் கட்டி எழுப்புவதில் முக்கியமாக யாருடைய பங்கை எதிர்பார்க்கிறீர்கள்?

**பதில்:** கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற ஆயிரம் ஆயிரம் மாணவர்கள் உலகம் எங்கும் வியாபித்து இருக்கின்றார்கள். அவர்களிடம் உதவுகின்ற வசதி வாய்ப்புக்கள் இருக்கின்றன. அவர்கள் கல்வி கற்ற இந்தப் பாடசாலையை அவர்கள் நினைக்க வேண்டும் என்று விரும்புகின்றேன். அவர்களால் முடிந்த உதவிகளை செய்து இந்தப் பாடசாலையை கட்டி எழுப்ப உதவவேண்டும் என்று நான் விரும்புகின்றேன்.

தங்கள் கடினமான உழைப்பால் பெறும் நிதியில் சிறுதொகையை இந்தப் பாடசாலையின் அபிவிருத்திக்கு வழங்கினால் பொரும் உதவியாக இருக்கும். அவர்கள் இதற்காக சிறுசிறு குழுக்களாகச் சங்கங்களாக இயங்கி இந்த சிறிய சிறிய உதவியை செய்யலாம் என நான் எதிர்பார்க்கிறேன். இது இந்தப்பாடசாலையை பாரிய அளவில் வளர்க்க உதவும் என்று நம்புகிறேன். எமது பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் இன்று மிக நலிவடைந்து போயிருப்பதால் புலம்பெயர்ந்த எமது பாடசாலையின் பிள்ளைகளிடமும் உறவுகளிடமும் உதவிகளை எதிர்பார்கிறேன்.

**கேள்வி:** போரின் பிறகு வகுப்பறையில் சந்திக்கின்ற மாணவர்களின் மன நிலை மற்றும் கல்வி நிலை எப்படி இருக்கின்றது. முன்னேற்றகரமான சூழலை உருவாக்க முடிகிறதா?

**சுரமஞ்சரி பதில் :** இந்தப்பாடசாலையில் நான் ஒரு ஆரம்பப்பிரிவு ஆசிரியராக இருக்கின்றேன். சில விடயங்களை மறக்க வேண்டும். சில விடயங்கள் மறக்க முடியாதவை. சில இன்பமான காரியங்கள், மகிழ்ச்சிகரமான விடயங்கள், கவர்ச்சிகரமானவற்றை நினைவுக்கு கொண்டு வர வேண்டியுள்ளது. ஆரம்பகாலத்தில் மாணவர்கள் மிக விரும்பும் ஒரு சூழலில் தான் கல்வி கற்றுவந்தார்கள். தற்போது போரினால் நாங்கள் மிகுந்த பாதிப்புக்களை எங்களுக்குள்ளே தாங்கிக் கொண்டிருக்கின் றோம். ஆரம்ப பிரிவைச் சேர்ந்த இந்த சிறுவயது மாணவர்கள் மாறுபட்ட சூழலில் இருந்து வருகின்றார்கள்.

தாய் தந்தையரை, சகோதரர்களை இழந்திருக்கிறார்கள். பழைய மாணவர்களாக இவர்களைப் பார்த்து கற்பிக்க முடியாதுள்ளது. தவிர அவர்களுக்கு இயல்பாக கல்வி கற்கக் கூடிய இடவசதிகள் மிகப் பற்றாக் குறையாக உள்ளன. 4 வகுப்புக்கள் இருக்க வேண்டிய மண்டபத்தில் 8

திருந்தோம். அந்த வகுப்பறையில் இரண்டு மாதங்கள் மட்டுமே கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட்டோம். மிக மகிழ்வுகரமாகக் கல்வி கற்பித்தோம். அவ்வளவு சொத்துக்களும் அழிக்கப்பட்ட நிலையிலே மீள இங்கு வந்திருக்கிறோம்.

மாணவர்கள் தங்கள் வலிகளை வெளியில் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் தம்மை இருட்டுமயமாக்கி சோகத்தில் இருப்பதை காண்கின்றோம். அவர்களுக்கு ஒரு நெகிழ்ச்சித் தன்மையான கல்வி கற்பிக்கும் முறைதான் தேவைப்படுகின்றது. அதற்குரிய வளங்கள் எங்களுக்கு தேவைப்படுகின்றன. அவர்களுக்கு ஒரு சிறுவர் விளையாட்டு பூங்கா இருந்தால் அவர்கள் சோகங்களை மறக்கும் நிமிடங்களை உருவாக்க முடியும். ஆனால் பல விடயங்களுக்கு விடை காண முடியாமல் எங்கள் நாளாந்த செயற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

*பாடசாலை வளாகத்தில் ஒற்றைக் காலை இழந்துபோன வேலு நிஷான் என்ற மாணவன் ஊன்று கோல்களின் உதவியுடன் வகுப்பறைக்கு சென்று கொண்டிருந்தான். எட்டாம் வகுப்பல் படிக்கும் நிஷான் மிக வேகமாக பேசுகின்றான். அவனிடம் ஏதோ ஒரு ஆர்வமும் துடிப்பும் இருக்கிறது. தான் காலை இழந்து போன சம்பவத்தை விவரிக்கும் பொழுது அவனது முகத்தில் அதிர்ச்சியும் வலியும் தெரிகின்றன.*

**கேள்வி:** உங்கள் கல்வி நடவடிக்கை எப்படி போய்க்கொண்டிருக்கிறது? பாடசாலைக்கு வருவதில் ஏதும் சிரமங்கள் நேர்கின்றனவா?

**வேலு நிஷான் பதில்:** என்னை அம்மா அல்லது அப்பாதான் பாடசாலைக்கு கொண்டு வந்து விடுகின்றார்கள். முதலில் பல துன்பங்களுக்கு முகம் கொடுத்துத் தான் பாடசாலைக்கு வந்தேன். பின்னர் அன்பளிப்பாக எனக்கு ஒரு சைக்கிள் தரப் பட்டது. அதில்தான் என்னை ஏற்றி வந்து விடுகின்றார்கள். இப்பொழுது ஓரளவு பிரச்சினையில்லாது நான் படித்துக் கொண் டிருக்கிறேன்.

நேர்காணல்:
தீபச்செல்வன்

ஆமியிடம் சரணடைய வந்த வேளையில் அந்த இடங்களில் மிதிவெடி இருக்கின்றது என்பதால் திரும்பச் சென்ற வேளையில் எங்களை தடுத்து இராணுவம் எறிந்த ஷெல்லினால் நான் காயப்பட்டேன். எனது கால் அங்கு சிதைவடைந்தது. அந்த இடத்திலேயே எனது அண்ணா இறந்து போனான். அம்மாவுக்கு முகம் முழுவதும் காயம். அக்காவுக்கு உடல் எங்கும் காயம்.

பின்னர் நான் கடலால்தான் கொண்டு வரப்பட்டேன். மன்னார், குருநாகல், வவுனியா என்று பல வைத்தியசாலைகளில் எனக்கு சிகிச்சைகள் நடந்தன. பின்னர் காயம் ஆறியதும் முகாமுக்கு என்னை அனுப்பினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் பின்வரும் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எமது சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்தை அலுவலக வேலைநாள்களில் ரூபா 10 செலுத்திப் பெற்றுப் பூர்த்தி செய்து 05.06.2010ஆம் திகதி பிற்பகல் 1 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக 'பொது முகாமையாளர், யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்' என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் மூலமாகவோ நேரடியாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

1. பதவி : காவலாளி (தற்காலிகம்)
சம்பளம் : கடமையாற்றும் நாளொன்றுக்கு ரூபா 300 மொத்த வேதனமாக வழங்கப்படும்.

தகைமைகள் :

அ) கூட்டுறவுச் சங்க ஊழியர் 17 ஆம் சம்பளத் திட்ட பதவியொன்றில் ஒரு வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) 5ஆம் வகுப்பு கல்விச் சான்றிதழும் நல்ல தேகாரோக்கியத்துடன் இருத்தலும்.

பொது நிபந்தனைகள்:

1. வயது : 05.06.2010 ஆம் திகதி 18 வயதுக்குக் குறையாதவர்களாகவும் 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
2. கல்வித் தகைமைகள், அனுபவம், வயது, வதிவிடத்தை உறுதிப்படுத்துதல், நற்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
3. நியமனத்தின்போது சுற்றுநிருபத்திற்கமைவான ரொக்கப்பிணை செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ -து),
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.

## EDWARD MAKES RED OINTMENT

### றெட் ஒயின்மென்ற்

நீர்ச்சிரங்கு, புண், புரை, பருக்கள், பித்த வெடிப்பு, கட்டு, படுவன், அக்கி, கிரந்தி அவியல், தலை அவியல், சிரங்கு, சொறி, படுக்கைப் புண், தீச்சுட்ட புண், வெட்டுக்காயம், உரோஞ்சல், வட்டக்கடி, அரைக்கடி சகலதையும் குணமாக்க வல்லது.

றெட் ஒயின்மென்ற் எனக் கேட்டு வாங்குங்கள்
எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்

வைத்திய கலாநிதி: கபிரியேல் எட்வேட் (L.A.M.P. R.I.M.P)
வைத்திய கலாநிதி : திருமதி யஸ்ரின் யூட் எட்ணா (B.S.M.S)
சித்த ஆயுள்வேத சுதேச மருந்துகள் உற்பத்தி நிலையம்
63, குருசோ வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
021 222 8171
edwardmakes@hotmail.com

வசீகரத் தோற்றத்திற்கு!

## சந்தனாலேப




(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல்பூச்சுமருந்து)

எடுப்பான கம்பீர தோற்றத்தைத்தரும்.

'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சகல பார்மசிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்).
MANUFACTURED BY: SANJEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250.

## ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி பொன்னுச்சாமி
அன்னலட்சுமி

மண்ணில்
09★03★1950

விண்ணில்
03★06★2009

பாரிலே நாம் பதறி அழுதிட
பரலோகம் சென்று
ஆண்டு ஒன்று ஆனதுவே - அம்மா
ஆறவில்லை உம் நினைவு
ஆற்றத்தான் வந்திடுவீர்

பெரியமாவடி, சாவகச்சேரி. குடும்பத்தினர். (99438)

## காணி விற்பனைக்குண்டு

சப்பச்சி மாவடி, சாவகச்சேரியில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0776648732

## தவறிவிட்டன

வவுனியா பஸ்நிலையத்தில் பின்வருவோரின் தேசிய அ.அட்டைகள் தவறிவிட்டன. முத்துலிங்கம் இராசலட்சுமி (496900081V), முத்துலிங்கம் பத்மலிங்கம் (730330219V), செல்வராசா செல்வராஜினி (805105011V) கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். தொ.பே : 0779263122, 0776357744.

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

சுன்னாகம், மே 23

யுனிசெவ் நிறுவன அனுசரணையுடன் வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர்களுக்கான கல்வி மற்றும் வழிகாட்டல் தொடர்பான மூன்று நாள் செயலமர்வு நாளை திங்கட்கிழமை தொடக்கம் மூன்று தினங்களுக்கு மானிப்பாய் ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியராகப் பொறுப்பேற்றவர்களை இச் செயலமர்வில் பங்குபற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (201-38)

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்,
இல.19, முருகேசர் லேன், நல்லூர்.

## வீடு விற்பனைக்கு

மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோயிலுக்கும் சுதுமலை அம்மன் கோயிலுக்கும் இடையில் மானிப்பாய் Bank of Ceylon இல் இருந்து 600 மீற்றர் தூரத்திலும் 6 பரப்புக் காணியில் இரண்டு கிணற்றுடன் ஐந்து அறைகள் கொண்ட சகல வசதியுடன் கொங்றீட்கல் வீடு, பதினைந்து தென்னை வருமானத்துடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0779920635 (98573)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தில் 1970.09.04 ஆம் திகதி பிறந்த, அத்த நட்சத்திரம் 4 ஆம் கால், உதயத்து செவ்வாய், கிரகபாவம் மொத்தம் 72, செவ்வாய் 32 மணமகன் லண்டனில் உள்ளார். பிரஜா உரிமை (P.R) பெற்றுள்ளார், சைவ போசனம் உடையவர். இவருக்கு தகுந்த பெண்ணைத் தந்தை தேடுகிறார்.
தொடர்புகளுக்கு: 0213214432 (98401)

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் மெமோறியல் வீதியில் மெமோறியல் பாடசாலைக்கும் எலிம் சிறுவர் இல்லத்திற்கும் இடைப்பட்ட இடத்தில் 7.5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: எஸ்.கே. உதயசூரியர் மெமோறியல் பாடசாலை வீதி, மானிப்பாய்.
T.P: 222 2546 (99445)

## பரிசுத்த ஆவிக்கு ஜெபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட் கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே, என்வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணைவரான உமக்கு இச்சிறிய ஜெபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகிறேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்கு பெற வேண்டுகின்றேன்.

உங்கள் தேவை எவ்வளவு கடினமாய் இருப்பினும் அடுத்தடுத்த 3 நாட்களுக்கு இச் செபத்தை உங்கள் தேவையைக் கேளாமல் சொல்லிவரின் உங்கள் தேவை நிறைவேறும். இச்செபத்தைப் பிரசுரிப்பதாக வாக்குப் பண்ணவும்.

ஓ! பரிசுத்த ஆவியே ! உமக்கு நன்றி.

## வீடு வாடகைக்குத் தேவை

சிறிய குடும்பம் ஒன்றிற்கு யாழ்.நகரில் இருந்து 5 கிலோ மீற்றர் சுற்றாடலில் வீடு அல்லது அனெக்ஸ் தேவை.
தொடர்பு:- 0776180675 (98563)

## தவறிவிட்டது

கிருஷ்ணர் கோயிலடி, கோப்பாய் வடக்கு, கோப்பாய் என்னும் முகவரியுடைய கணேசன் சந்திரமலரின் தேசிய அ.அ. (526983122X) கடவுச்சீட்டு என்பன பேர்சுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (98564)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 28 வயதுடைய, செவ்வாய் தோஷ மற்ற, கிரகபாவம் இல்லாத (O) பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியைக்கு உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ பெற்றோர் தகுதியான வரனைத் தேடுகிறார்கள். நட்சத்திரம் பூராடம்
விளம்பர இல: 4025 சே/பா - உதயன்
email narayanan 2010 @ hotmail.Com

## வீடு விற்பனைக்கு

பருத்தித்துறை நகரசபை எல்லைக்குள் தும்பளை எல்லை ஒழுங்கையில் தும்பளை பிரதான வீதியிலிருந்து நூறு மீற்றருக்குள் நல்ல சூழலில் 2¾ பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0718798026, 077453636 (98565)

## வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி

யாழ்ப்பாணம், மே 23

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைந்த பசார் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி வழங்கப்பட்டு வருகின்றது.

எதிர்வரும் புதன் கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற் பகல் 1 மணிவரை சிறாம்பியடி ஒழுங்கை, 5ஆம் குறுக்குத் தெரு ஆகிய இடங்களில் வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. (201)



மாவை கொல்லங்கலட்டி கேணிக்கரை
அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்

### பெரு விழாத் திருமுகம்

18.05.2010 அன்று துவஜாரோகணத்துடன் ஆரம்பமாகி,
24.05.2010 திங்கள் மாலை 7ஆம் திருவிழா மகாபிஷேகம்
25.05.2010 செவ்வாய்க்கிழமை சப்பரத் திருவிழா
26.05.2010 புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு தேர்த்திருவிழா
27.05.2010 வியாழக்கிழமை மு.ப.10 மணிக்கு தீர்த்த உற்சவம்
28.05.2010 வெள்ளிக்கிழமை பிராயசித்த அபிஷேகமும்,
ஸ்ரீ வைரவர் மடையும் நடைபெறும்.

அத்துடன் தடை முகாமிலிருந்து துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் வாகனங்கள், பஸ் வண்டிகள் சகலதும் வருவதற்கு முன் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

ஸ்ரீலஸ்ரீ சு.சிவஷண்முகானந்தக் குருக்கள்
(அறங்காவலர்).

உ
சிவமயம்

## குருப்பட்டாபிஷேக வாழ்த்து



சைவக்குருமணிகள் பயிற்சிக் கல்லூரியில் குருகுலக் கல்வியைப் பெற்று இன்றைய தினம் (23.05.2010) குருப்பட்டாபிஷேகம் பெறும்

சிரஞ்சீவி மு.தயாபரன் ஐயா
(கண்ணன் ஐயா)

அவர்கள் ஸ்ரீ பர்வதவர்த்தனி சமேத நடராஜா இராமலிங்கேஸ்வரப் பெருமானின் திருவருள் துணை கொண்டு சிறந்த குருவாக விளங்கி குருத்துவ சேவையை ஆற்றிவர எம்பெருமான் அருள்புரிய வேண்டுமென பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

திரு.திருமதி சு.சற்குணேஸ்வரன் ஐயா குடும்பம்,
திரு.திருமதி சு. முத்துச்சாமி ஐயர் குடும்பம்
(சித்தப்பாமார்)

ஆவரங்கால், புத்தூர். (98551)

## லண்டனில் உயர் கல்வியுடன் கூடிய வேலை வாய்ப்பு

லண்டனில் உயர்கல்வியுடன் கூடிய வேலைவாய்ப்பு July/ Sep. intake
சேவைகள்: A Rate Colleges Universities
உடனடி அனுமதி பெற்றுக் கொடுத்தல், விண்ணப்பங்கள் நிரப்பிக் கொடுத்தல், ஆவணங்கள் தயார் செய்தல் Financial Sponsorship ஏற்பாடு செய்தல் மற்றும் இலவச வழிகாட்டல் Reapply முதலியன.
தொடர்பு: 0113042949, 0779218444

## 18ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
19 ✱ 12 ✱ 1942



மறைவு
11 ✱ 06 ✱ 1992

அமரர் மாணிக்கம் தங்கவடிவேல்
(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் P.W.D)
திதி: 28.05.2010 ஏகாதசி

அன்பின் ஒளிவிளக்காய் எங்கள் குடும்பத்தின் நிகரற்ற தலைவனாய் எமக்கெல்லாம் நல்வழி காட்டிய எங்கள் அன்புத் தெய்வமே அப்பா - நீங்கள் மீளாத்துயில் கொண்டு பதினெண் ஆண்டுகள் ஆனாலும் எம்மைவிட்டு அகலவில்லை உங்கள் நினைவுகள்.

தங்கத்தாமரை, அல்வாய். பிரிவால் துயருறும்: குடும்பத்தினர். (97520)



## ARRUL GLOBAL EXPRESS



### INTERNATIONAL COURIER & CARGO SERVICES

- வெளிநாடுகளுக்கான தபால்கள், பொதிகள் மற்றும் ஆவணங்கள் 48 – 72 மணித்தியாலங்களில் ஒப்படைக்கப்படும்.
- இலங்கையின் சகல பாகங்களுக்குமான கடிதங்கள் பொதிகள் என்பன 24 மணித்தியாலயத்தில் ஒப்படைக்கப்படும்.
- 05 Kg, 10Kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு 30 % விஷேட சலுகை.
- Flask, Gas Cooker, Iron Box, Search Light, Hot Box, என்பன அன்பளிப்பாக வழங்கப்படும்.

குறிப்பு :- நண்பகல் 12.00 மணிக்கு முன்பதாக ஒப்படைப்பதன் மூலம் விரைவு சேவையை உறுதிப்படுத்தவும்.

இல 1, [illegible] T.P:- 021 222 6113 Email :- arrulgex@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் அற்ற சூழலில் கண்ணகி அம்மனுக்கு வற்றாப்பளையில் பொங்கல்விழா

நாளை (24.05.2010) திங்கட்கிழமை வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் விழாஇடம்பெறுகின்றது. அதனை யொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.

வன்னிப் பிரதேசத்தில் கண்ணகி அம்மனுக்கு பல வழிபாட்டுத் தலங்கள் உள்ளன. முள்ளியவளை வற்றாப்பளை, சிலாவத்தை கற்கிடங்கு, பனையாண்டான், அரியாமடு, கொக்குழாய், குமுழமுனை உட்பட வன்னிக்கிராங்கள் பலவற்றிலும் கண்ணகி அம்மனுக்குரிய வழிபாட்டிடங்கள் அமைந்திருப்பதைக் காணலாம். ஆண்டு தோறும் வைகாசித் திங்களிலே இங்கெல்லாம் கண்ணகி அம்மனுக்குச் சிறப்பான பொங்கல் விழா நடைபெறுகின்றன. முள்ளியவளையிலும், வற்றாப்பளையிலும் நடைபெறுகின்ற பொங்கல் வழிபாடு ஏனைய இடங்களில் இல்லாத பல சிறப்புகளைக் கொண்டு விளங்குகின்றது. முள்ளியவளையிலே கண்ணகி அம்மனுக்கு கடல் நீரில் விளங் கேற்றி ஒரு [illegible] ர காலமாக நடைபெறுகின்ற சிறப்பான வழிபாட்டு மரபுகளை இலங்கையின் வேறு எப்பகுதியிலுமே காண முடிவதில்லை.



முள்ளியவளையில் இரண்டு வாரங்களாக நடைபெறுகின்ற விழா வின் நிகழ்வுகள், வற்றாப்பளையில் ஏழு நாள்கள் நடைபெறுகின்றன. வன்னிப் பிரதேசத்தவர்கள் அனைவரையும் ஒன்றுகூட்டி பிரதேசப் பெருவிழாவாகவே நடைபெறும் இவ்விழாவிற்கு இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் பெருந்தொகையான மக்கள் ஆண்டுதோறும் வந்து கூடுவர். சித்திரை முடிந்து சோழகக் காற்று வீச ஆரம்பிக்க வன்னிப்பிரதேச மக்கள் பொங்கல் நெருங்கிவந்து விட்டது என்ற புத்துணர்ச்சியோடும், புதுப் பொலிவோடும் தம்மைத் தயார்படுத்திக் கொள்வார்கள். இதனால் வன்னிப் பிரதேசம் புதுப்பொலிவு பெறும்.

வைகாசித் திங்கள் மூன்று வாரங்களாக நடைபெறுகின்ற பொங்கல் நிகழ்ச்சிகள் முதல் இரண்டு வாரங்களும் முள்ளியவளை காட்டாவிநாயகர் கோயிலில் வெகு சிறப்பாக நடைபெறுகின்றன. வைகாசித் திங்களில் விசாக நட்சத்திரம் கூடிய பூரணையில் வருகின்ற வாரத்தில் திங்கட்கிழமை வற்றாப்பளையில் இறுதியாக ஒருநாள் நிகழ்ச்சி நடைபெறுகின்றது.
பொங்கல் விழாவில் இது மூன்றாவது திங்கட்கிழமையாக அமைகின்றது.

பொங்கல் விழாவின் ஆரம்ப நிகழ்ச்சி முதலாவது திங்கட்கிழமை முள்ளியவளையில் இடம்பெறுகின்ற பாக்குத் தெண்டலுடனும் ஆரம்பமாகின்றது.

பொங்கல் கடமைகளைச் செய்வதற்காகத் தெரிவு செய்யப்பட்டவர்களில் ஒருவர் அதிகாலையில் புறப்பட்டு முள்ளியவளை,புதுக்குடியிருப்பு, கேப்பாபுலவு, வற்றாப்பளை, கழுக்கேணி, குமுழமுனை, சிலாவத்தை ஆகிய ஏழுகிராமங்களிலிருந்தும் பூசைக்குரிய மங்களப் பொருள்களைச் சேகரித்து வருவார். இவ்வாறு சேகரிக்கப்பட்ட பொருள்களை மஞ்சள் துணிகளில் கட்டி கோயிலில் உள்ள வேப்பமரம் ஒன்றில் தொங்கவிடுவார் கள். இந்நிகழ்ச்சியே பாக்குத் தெண்டல் எனப்படும்.

இரண்டாவது திங்கட்கிழமை மாலை வேளையில் முள்ளியவளையிலிருந்து சுமார் ஏழு மைல் தொலைவில் உள்ள கடற்கரைக் கிராமமான சிலாவத்தை தீர்த்தக் கரைக்குச் சென்று கடல் நீரை அள்ளி வருவதே தீர்த்தம் எடுத்தல் நிகழ்ச்சியாகும். இரவு வேளை தீப்பந்தங்களின் வெளிச்சத்துடன் பறை மேளங்கள் முழங்க கண்ணகி புனித தீர்த்தம் ஊர்வலமாக எடுத்து வரப்படும்போது வழியெங்கும் மக்கள் நிறைகுடங்கள் வைத்து அம்மன் அருள் வேண்டி வழிபடுவார்கள்.

இவ்வாறு கொண்டுவரப்பட்ட புதிய தீர்த்தம் காட்டாவிநாயகர் கோயிலிலுள்ள கண்ணகி அம்மனுக்குரிய மண்டபத்தில் வைக்கப்படும். இதனைத் தொடர்ந்து புனித தீர்த்தத்தில் கண்ணகிக்கு விளக்கேற்றி விசேட வழிபாடுகள் நடைபெறும். சடங்கு ஆசாரங்களுடன் நடைபெறுகின்ற தூளி பிடித்தல், கச்சு நேர்தல், வளந்து நேர்தல் முதலிய வழிபாட்டு முறைகளைப் பெருந்திரளான மக்கள் கூடி நின்று பக்தி பூர்வமாகக் கண்டுகளிப்பர்.

தீர்த்தம் எடுத்த நாளிலிருந்து பொங்கல் முடிந்து பத்து ஞானி பொங்கல் முடியும் வரை இப்பகுதி மக்கள் காட்டுக்குள் போவதில்லை. மரணச் சடங்குகளின் போது மேளம் அடிப்பதில்லை. உரலில் உலக்கை பயன்படுத்தி எதனையும் குற்றுவதில்லை. வெளியூர்களுக்குப் போவதுமில்லை. இது இப்பகுதி மக்களுக்கு ஒரு கட்டுப்பாடாக இருந்து வருகின்றது.
இத்தகைய சடங்கு ரீதியான வழிபாட்டு முறைகளைத் தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை இரவு பொங்கல் நிகழ்ச்சி நடைபெறும். காலை முதல் இரவிரவாக அடியார்கள் காவடி, கரகம், பாற்செம்பு முதலியவற்றைச் சுமந்து ஆடியும், பாடியும் தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றிக் கொள்ளும் ஓர் ஊர்த்திருவிழாவாகவே பொங்கல் நிகழ்வு நடைபெறும். இதுவே முள்ளியவளையில் நடைபெறுகின்ற இறுதி நிகழ்வாகும்.

இதனைத் தொடர்ந்து மறுநாள், அதாவது மூன்றாவது திங்கட்கிழமை அதிகாலை வேளையில் முள்ளியவளையில் கண்ணகியின் பூசைக்குப் பயன்படுத்திய எஞ்சிய புனித தீர்த்தத்தையும் வேறு பூசைப் பொருள்களையும் எடுத்துக் கொண்டு வற்றாப்பளைக்கு செல்லும் பூசைக் குழுவினர் அங்கு இறுதிப் பொங்கல் நிகழ்வை நடத்துவார்கள். வற்றாப்பளையில் நந்திக் கடற்கரையில் பெருமரங்கள் சூழ்ந்த சோலை வெளியில் கண்ணகியின் ஊர் விழாவைக்காண இலங்கையில் பல்வேறு பாகங்களிலிருந்தும் பெருந்திரளான மக்கள் வந்து கூடுவார்கள். இவ்வாறாக அம்மன் இங்கு 10ஆம் இடமாகக் குடியேறியதாக ஐதீகம்.

அம்மன் 10வது இடமாக இங்கு வந்து எழுந்தருளியதால் இப்பகுதி [illegible] தாம்பளை என அழைக்கலாயினர். காலப் போக்கில் இது மருவி வற்றாப்பளை என மாறியது என்பது வரலாறு.



திங்கட்கிழமை இரவு பொங்கல் முடிந்ததும் மறுநாள் செவ்வாய்க்கிழமை வற்றாப்பளையிலிருந்து கதிர்காம யாத்திரீகர்கள் கூட்டம் கரையோரமாகத் தமது பயணத்தைத் தொடர்வார்கள். செல்வச் சந்நிதி முருகன் கோயிலிருந்து கதிர்காமம் நோக்கி புறப்படும் யாத்திரீகர்கள். பொங்கல் தினத்தில் இவர்களோடு இணைந்து தமது பயணத்தை ஆரம்பிப்பார்கள்.

இந்தப் பொங்கல் விழாவில் இரண்டு விதமான அம்சங்கள் காணப்படுகின்றன.

பாக்குத்தெண்டியது தொடக்கம் தீர்த்தம் ஏடுப்பது வரையிலான முதலொரு வார காலமும் கண்ணகி தொடர்பாக கலை நிகழ்வுகள் நிகழ்த்தப்படுகின்றன.

கரகம், கும்மி, கோலாட்டம், வசந்தன் ஆட்டம் முதலிய வெவ்வேறு கலை நிகழ்வுகள் பிரதேசமெங்கும் பரவலாக நடத்தப்படுகின்றன. இதனால் வன்னிப் பிரதேசம் பொங்கல் விழாவிற்குரிய புதுப்

## முள்ளியவளை காட்டாவிநாயகர் ஆலயத்தில் பத்தினி தெய்வத்துக்கு உப்புநீரில் விளக்கேற்றும் அதிசயம்

பொலிவைப் பெற்றுத் திகழும்.

இக்கலை நிகழ்வுகளின் உச்சக்கட்டமாக கண்ணகி வரலாறு கூறும் கோபல் கூத்து வட்டக்கலரியில் நடத்திக் காட்டப்படுகின்றது. முள்ளியவளை, காட்டார் விநாயகர் கோயில் முன்றலில் விடிய விடிய ஆடப்படுகின்ற இக் கூத்து நிகழ்ச்சி ஒரு பெரும் விழாவாகவே அமைந்து விடுகின்றது. அயல் கிராம மக்கள் யாவரும் நடந்தும் வண்டில்களிலும் வந்து இந்த நிகழ்ச்சியைக் கண்டு களிப்பார்கள். இது இவ்வூரின் பழமை போற்றப்படுகின்ற பண்பை எடுத்துக்காட்டுகின்றது.

கண்ணகியின் புனித தீர்த்தம் முள்ளியவளைக்கு எடுத்து வரப்பட்டதும் ஊர் அமைதி அடைந்து வழிபாடு சடங்காசாரங்களுடன் நிகழ்த்தப்படுகின்றது. முதல் வாரத்தில் கூத்தாகக் காட்டப்பட்ட கண்ணகியின் வரலாறு இங்கு கதைப்பாடலாக படிக்கப்பட்டு கண்ணகியின் பூசை அமைதியுடன் நடைபெறுகின்றது.

ஊர் மூத்தநயினார் என்று பரராஜசேகர மன்னனால் பராமரிக்கப்பட்டதும், போர்த்துக்கேயப் படையினருக்குக் கந்தனைக் காட்டாமல் மறைத்ததால் காட்டா விநாயகர் என அழைக்கப்பட்டு சிறப்புடன் விளங்கி வருகின்றதுமான முள்ளியவளை காட்டாவிநாயகர் கோயிலில் கண்ணகிக்கு கடல் நீரில் விளக்கேற்றி வன்னிப் பிரதேசமெங்கும் ஒன்று கூடி நிற்க ஊர்ப் பெருவிழா நடைபெறுகின்றது.********

வே.ம.இந்திரநாதன்.

## திடம் தரும் தூய ஆவி

இன்று தூய ஆவியார் திருவிழா. இயேசுவின் உயிர்ப்பின் ஐம்பதாம் நாள். இயேசுவின் விண்ணேற்பு அடைந்த பத்தாம் நாள் தூய ஆவியார் சீடர்மேல் இறங்கியது இவ்விழாவில் நினைவு கூரப்படுகின்றது. இயேசுவின் உயிர்ப்பைக் கண்டு அனுபவித்த சீடர்கள் ஆச்சரியத்தாலும், நம்பிக்கையாலும் நிறைந்திருந்தனர். ஆயினும் அச்சம் அவர்களை ஆட்கொண்டிருந்தது. ஆகவே அவர்கள் யெருசலேமில் ஒரு மாடி அறையில் ஒன்று கூடி இறை வேண்டலில் நிலைத்திருந்தனர். இந்த வேளையில் தான் அவர்கள் மீது தூய ஆவியார் அக்கினி நாக்குகள் வடிவில் இறங்கினார் என்று திருத்தூதர் பணிநூல் கூறுகின்றது. இவ்வாறு தூய ஆவியாரின் திருப்பொழிவைப் பெற்ற சீடர்கள் திடம்பெற்றனர். அதுவரை அவர்களைப் பீடித்திருந்த அச்ச உணர்வு நீங்கப்பெற்று இயேசுவின் நெருப்புத் துண்டங்களாக அவரது ஆட்சிக்குச் சாட்சி பகரப் புறப்பட்டனர். இவர்களது இந்த சாட்சிய வாழ்வில் எவ்வளவோ சவால்கள் ஏற்பட்ட போதிலும் இவர்கள் துணிந்து நின்றனர். குறிப்பாக முதல் மூன்று நூற்றாண்டுகளிலும் அவர்களுக்கு எதிரான துன்புறுத்தல்கள் யூதர்களிடமிருந்தும் உரோமையர்களிடமிருந்தும் அதிகமாக இருந்தன. கிறிஸ்துவுக்கு சான்று பகரும் காரணத்தால் விலங்குகளுக்கு உணவாகப் போடப்படுவது போன்ற பல்வேறு சித்திரவதை, கொலைகளை எதிர்கொள்ள நேர்ந்த போதிலும் அவர்கள் தளரவில்லை. துன்பத்திற்கு மத்தியிலும் உண்மைக்குச் சான்று பகரும் இத்தளரா உறுதி தூய ஆவியாரின் திருக் கொடையேயாகும்.




இன்று அச்சம் சூழ்ந்த மக்களாக நாங்கள் வாழ்கின்றோம். உண்மைக்குச் சான்று பகர்வது என்பது மிகவும் ஆபத்தான ஒரு விடயமாக எமது மண்ணில் மாறிவிட்டது. கைகட்டி, வாய் பொத்தி, அஞ்சி, ஒடுங்கி இருப்பதே உயிர் வாழ்வதற்காக வழியென்பது உறுதி செய்யப்பட்டுவிட்டது. இத்தகைய நிலையில் தூய ஆவியாரின் திருப்பொழிவு எமக்கும் அதிகம் தேவைப்படுகின்றது. அன்று அஞ்சியிருந்த சீடர்கள் தூய ஆவியாரின் பொழிவோடு அச்சம் தவிர்த்து வீரத்தோடு புறப்பட்டது போல் இன்றும் உண்மைக்கான பணியில் ஈடுபட நாங்கள் அனைவரும் அழைக்கப்படுகின்றோம்.

தூய ஆவியாரின் திருப்பொழிவு எம் அனைவரையும் திடப்படுத்துவதாக!

அருட்பணி ம.வி.இ. இரவிச்சந்திரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ZOA REFUGEE CARE

## VACANCY NOTICE

ZOA Refugee Care is an international organization working in Sri Lanka since 1995 and continues to be a field-based rehabilitation organisation. Its mission is to support refugees, internally displaced people, returnees and other Sri Lankans affected by conflict or natural disaster in their transition from conflict to peace, from insecurity to stability, from relief to development and from dependence to self-reliance. ZOA Refugee Care reaches out to people regardless of their race, sex, religion or social background based on its Christian identity and values. The organization is active in the sectors of Shelter & Infrastructure, Water & Sanitation, Livelihood, Community Enhancement and Education. ZOA implements projects directly and with partners.

### Finance Officer (Jaffna)

**Main Responsibilities:**

- The Finance Officer is overall responsible for all finance matters under the direction of the Admin Coordinator.
- He/she will focus on all finance matters of the Office and reports overall to the Finance Officer in Colombo.
- Collects all necessary underlying documents of all payments and files them in an orderly manner.
- Attends to all banking duties, which includes the preparation of bank statements and reconciliation monthly.
- Checks the accounts of the local partners monthly.
- Assists colleagues by providing financial information and budget analysis for monitoring and implementation.
- Trains new staff in ZOA financial processes, procedures and/or systems if requested by the Admin Coordinator.

**Minimum qualifications required:**

- Passed in GCE A/L as a minimum educational qualification. Commerce stream is desirable.
- Able to read, speak and write in Tamil and English.
- Computer literate to use Microsoft Office packages and (after some training) the ZOA Information System.
- Must have strong organizational skills and must be very methodical and highly accurate in his/her way of working.
- Must have at least two years of experience in the similar capacity.
- Must be pro active in sharing information..
- Must be able to cope with stress and able to meet deadlines.

**Equally qualified female candidates are particularly encouraged to apply**
**ZOA offers a competitive package comparable with International NGO Standards.**

Please send in your applications with complete bio-data and the names and contact numbers of two non related referees on or before 31st May 2010 to jaffna@zoasrilanka.org or by mail to the below given address. (Indicate the position on the top left hand corner of the envelope or in the subject line of the e-mail) Only short listed candidates will be notified.

Administrative Assistant,
ZOA Refuge Care,
127/1Temple Road, Jaffna. Tel. 0212228561
E Mail : jaffna@zoasrilanka.org



# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
28 ★ 02 ★ 1956

மறைவு
18 ★ 04 ★ 2010

## அமரர் இராமநாதன் புஸ்பயோகேந்திரன்

(உரிமையாளர் வெங்கடேஸ்வரா, பொருளாளர் இணுவில் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் கொழும்புக்கிளை)

எமது குடும்ப ஒளி விளக்காகத் திகழ்ந்து (18-4-2010) ஞாயிறு அன்று இறைவனடி சேர்ந்த திரு. இராமநாதன் புஸ்பயோகேந்திரன் அவர்களின் பிரிவால் துயருற்ற எமக்குப் பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும், நேரிலும், தொலைபேசி, தபால், தந்தி மூலமும், மலர் வளையம் வைத்து அனுதாபம் தெரிவித்தும் அன்னாரின் இறுதிக் கிரியைகளிலும் மற்றும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் கலந்து கொண்டவர்களுக்கும் இன்று நடைபெறும் நினைவஞ்சலி பிரார்த்தனையிலும் தொடர்ந்து மதியபோசன நிகழ்விலும் பங்குபற்றியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம் : மனைவி, பிள்ளைகள், தாய், சகோதரர்கள், சகோதரிகள்
தகவல் : இ. சங்கரநாதன் (சர்வா) T.P. : 0777 555391


# வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம்
# பாடசாலை வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்-2010

"இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு" உலக வங்கியிடமிருந்து கல்வி அபி விருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கென செலவுக்கான மானியத்தினை நிர்மாண வேலை ஒப்பந்தத்திற்கான கொடுப்பனவுளுக்காகப் பெற்றுள்ளது. அந்நிதி ஒதுக்கீட்டிலிருந்து பின்வரும் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளரி னால் இக்ராட் (ICTAD) இல் பதிவு செய்து பதிவுச்சான்றிதழ் வைத்திருப்பவர்களிடம் இருந்தும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன. கீழே தரப்பட்ட அட்டவணைப்படி வேலைகளுக்கான கேள்வி வைப்புப் பணத்தை வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரின் கணக்கில் வைப்புச்செய்து அல்லது வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தில் நேரடியாகச் செலுத்தி படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

1. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி: 24.05.2010 முதல் 02.06.2010 நண்பகல் 12 மணிவரை
2. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி: 03.06.2010 மு.ப.10 மணிவரை
3. கேள்வி திறக்கப்படும் திகதி: 03.06.2010 மு.ப. 10.30 மணி (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
4. கீழ் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் விண்ணப்பிக்கலாம்.
5. கேள்வியினை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு. சரியாக நிரப்பப்படாத தெளிவற்ற கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
6. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன்ஒப்பந்தக்காரர் தமது இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தை, பாடசாலைகள் வேலைகள் பொறியியலாளர், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம் அவர்களிடம் சமர்ப்பித்து சிபார்சுக் கடிதத்தினைப் பெறுதல் வேண்டும்.
7. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்து மூலப்பிரதியும், எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப் படிவமும், கையொப்பமும், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும் கேள்விப்பத்திர இணைப்பிரதியினையும் தனித்தனி இரு கடித உறைகளில் இட்டு கடித உறையின் இடப்புற மேற்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையிலிட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தக்காரரின் முத்திரை இடப்பட்டு மருதனார்மடத்திலுள்ள வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் இடல்வேண்டும்.
8. கேள்விப்பத்திரங்களின் பெறுமதி சேர்வரி (Vat) 12% சேர்க்கப்பட்ட கேள்வித்தொகை, பெறுமதி சேர்வரி (Vat) 12% சேர்க்கப்படாத கேள்வித்தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடல் வேண்டும். எனினும் இவ் நிபந்தனையும் மீளளிக்கப்படும் வைப்புப்பணம், மீளளிக்கப்படாத வைப்புப்பணம் என்பனவும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது.
9. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் தெரிவு செய்யப்படும் திகதியிலிருந்து 03 மாத காலத்துக்குள் அனைத்து வேலைகளையும் பூர்த்தி செய்து கையளிக்க வேண்டும். எதுவித காலதாமதங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களை பாடசாலை வேலைகள் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

| இல. | விவரம் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | திட்டம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் | இக்ராட் இல. |
|---|---|---|---|---|---|
| 1. | யா/பிளவத்தை அ.மி.த.க.பா. வகுப்பறைக் கட்டடத் திருத்தம் (மீள் கேள்வி அறிவித்தல்) | 500.00 | ESDP | 2,500.00 | M9/C10 |
| 2. | யா/மாதகல் விக்னேஸ்வரா வித்தி. வகுப்பறைக் கட்டடத் திருத்தம் | 500.00 | ESDP | 3,500.00 | M9/C10 |

பாடசாலை வேலைப் பகுதி,
வலிகாமம் வலயம்.
(சி/567904)
ப.விக்னேஸ்வரன்,
வலயக் கல்விப் பணிப்பாளர்.


# STUDY IN INDIA

இந்தியாவில் உயர் கல்வியைத் தொடர்ந்து
பட்டதாரியாக (Graduate) வாய்ப்பு

Garden City College Affiliated to Bangalore University
SSM College of Engineering affiliated to Anna Engineering University

- B.E. Information Technology,
- B.E. Computer Science,
- B.E. Electronics and Communication,
- B.E. Mechanical Engineering,

Entry Requirements : :A/L Passes in Chemistry, Physics & Maths + O/L Pass In English

- B.Sc. (Genetics),
- B.Sc. (Biotechnology),
- B.Sc. (Microbiology),
- B.Sc. Physiotherapy
- B.Sc. Nursing

Entry Requirements : :A/L Passes in Chemistry, Physics & Biology + O/L Pass In English

- B.Sc. (Fashion & Apparel Design),
- B.A. (Journalism),
- BHM. (Bachelor of Hotel Management),
- BCA. (Bachelor of Computer Applicants),
- BBM. / BBA
- B.Com (Computers)

Entry Requirements : :A/L Passes in any TWO Subjects + O/L Pass In English

எமது நிறுவனத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட நூற்றுக்கு அதிகமான மாணவர்கள் தற்பொழுது இந்தியாவில் கல்வியயில்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் தொடர்புகளுக்கு:
Tel: (தமிழில்): 0777 767818/ 0779004194
**Scholars Information Center (Sic)**
இல.734, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## மறைக்கப்படும் சோகங்களும் அவலங்களும்

எதனையும் தூர இருந்து பார்க்கும் போது முழுமையான வடிவம் கண்ணுக்குத் தெரியாது. அரைகுறையான தோற்றமே தெரியும். அதனை வைத்துக் கொண்டே நாம் சம்பந்தப்பட்ட பொருளை அல்லது சம்பவத்தை சிறிது ஊகம் அல்லது கற்பனை கலந்து மனதில் பதிக்கிறோம். அந்த அரைகுறை வடிவத்தைக் கருத்தில் எடுத்து, மற்றவர்களுக்கும் சொல்கிறோம்.

அதனாலேயே, கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரித்து அறிவதே மெய் என்ற பழமொழியைக் கூறிப் போந்தனர் எம் முன்னோர்.

வன்னிப் போரின் போது தமது உயிர்களைக் காப்பாற்றும் ஒரே நோக்கத்துடன் இடம் பெயர்ந்து, அரசாங்கம் நடத்திய அகதி முகாம்களிலிருந்து விடுபட்டு, இப்போது தமது சொந்த இடங்களுக்குச் சென்று மீளக்குடியமர்ந்த எமது உறவுகளின் வாழ்க்கை நிலை எந்தளவு பரிதாபத்துக்கு உரியது, கேட்கவே மனதை உலுக்கு வது, துன்பியலை உருவாக்குவது என்பது இப் போது தான் முழுமையாகத் தெரியவருகிறது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பன்னிரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் வன்னியில் மீளக் குடியேறிய மக்களை நேரில் சென்று சந்தித்த போது, அவர்களின் ''அர்க்கெட்ட'' வாழ்வின் உண்மை வடிவம் தெரியவந்திருக்கிறது. அவர்கள் கண்டு, கேட்ட செய்திகள் நிலைப்பாடுகளை ஊடகங்கள் கூறியதால் அவர்களின் உறவுகளும் அறியக் கூடியதாக உள்ளது.

போரினாலும் சரி, இடப்பெயர்வினாலும் சரி, அரசின் பம்மாத்தான மீள்குடியேற்றத்தினாலும் சரி பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் உண்மை நிலை வெளியே எவருக்கும் தெரியாத இரகசியமாக, அந்தரங்க விவகாரமாக அரசாங்கத்தினால் பேணப்பட்டுவந்தது. அவர்கள் மூலமாக உண்மை நிலை தெரியவந்துவிட்டால், இவ்விடயங்கள் குறித்த தமது மனிதாபிமானமற்ற செயற்பாடுகள் அம்பலமாகிவிடும் என்ற அச்சம் அரசுக்கு.

இப்போதும் கூட ''மனிக் பாம்'' முகாம் என்ற அகதிகள் சிறைக் கூடத்தைப் பார்ப்பதற்கு, அங்கு தங்க வைக்கப்பட்டுள்ள இடம்பெயர்ந்தோரைச் சந்திப்பதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தேவை.

மீள்குடியேற்றப் பகுதிகளுக்கும் அரசின் அனுமதி இல்லாது ஊடகவியலாளர்களோ, வெளிநாட்டு ராஜதந்திரிகளோ, மனிதநேய தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளோ செல்லமுடியாது!

இத்தகைய ஒரு பின்னணியில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழு அங்கு விஜயம் செய்திருப்பது பெறுமதியான, பயனுள்ள ஒன்றாகும்.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு நேற்றுமுன் தினம் வெள்ளிக்கிழமை கூட்டமைப்பின் குழு சென்றபோது, எத்தனை குறைபாடுகள், வசதியீனங்களுடன் தமிழ் மக்கள் அங்கு மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர் என்ற ' பொய்மை' நிலை தெரிய வந்துள்ளது.

மனித வாழ்வில் அனுபவிக்கத் தகாத வெறுமைகள், இல்லாமைகள், சோகங்களுடன் தமது எதிர்காலம் என்னவாகப்போகிறதோ என்ற ஏக்கத்துடன், ஏகாந்த நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள் எமது மக்கள் அவர்களின் பிரச்சினைகள், தேவைகள் எவை என்பது அவர்களைத் தவிர வேறு எவருக்கும் தெரியாத நிலை. அவற்றைத் தாமே தமக்குள் புதைத்து கிடைத்தற்கரிய மானிட வாழ்க்கையை தொலைக்கத் தூண்டும் மறைமுக முயற்சியா இது?

இத்தனை வெறுமைகள், இயலாமைகள், துன்ப துயரங்கள், விரக்திகளின் மத்தியில் மனிதர்கள், குடும்பங்கள் எப்படி வாழ முடியும் என்ற கேள்விக்குப் பதில் என்ன?

இவற்றை எல்லாம் துலாம்பரமாக்கும் வகையில் தேசியக் கூட்டமைப்பினரின் அறிக்கை விஸ்தாரமாகவும் காத்திரமானதாகவும் அமையவேண்டும். அப்போதுதான் தமிழ் மக்களை இரண்டாந்தரப் பிரசைகளாக அரசாங்கம் நடத்துகிறது என்பதற்கு அப்பாலும் அவர்களை மனிதப்பிறவிகள் என்ற அந்தஸ்தில் தானும் வைத்திருக்கவில்லை என்பது சர்வதேசத் துக்கும் தெரியவரும்.

மீள்குடியேற்றப்பட்ட தமிழர்களின் தயையற்ற வாழ்க்கை நிலை விவரம், அரசாங்கத்தின் ஒழுங்கு செய்யப்பட்ட வெளிநாட்டவர் மற்றும் ஊடக வியலாளரின் விஜயங்களினால் மறைக் கப்பட்டன என்பதும் தெரியவரும்.

# 4 மில்லியன் பெறுமதியான வாழைகள் குடாநாட்டில் ''லைலா''வால் சேதம்

யாழ்ப்பாணம், மே 23

யாழ்.குடாநாட்டில் கடந்த சில நாள்களாக வீசிய ''லைலா''புயல் காரணமாக நான்கு மில்லியன் ரூபா பெறுமதியான வாழை மரங்கள் சேதமடைந்துள்ளதாக யாழ்.செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

கடந்த சில நாள்களாக வீசிய கடும் காற்று காரணமாக குடாநாட்டின் பல பகுதி களிலும் பயிர்கள் மற்றும் பயன் தரும் மரங்கள் பலவும் பாதிப்படைந்துள்ளதாகவும் எனினும் வாழை மரங்களே அதிகளவில் சேதமடைந்துள்ளதாகவும் கோப்பாய் பகுதியிலேயே அதிகளவான மரங்கள் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சேதமடைந்த வாழை மரங்களில் பெரும்பாலானவை குலையுடனேயே முறிந்து விழுந்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதனால் வாழைப்பழங்களின் விலைகள் வீழ்ச்சி அடைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-16)

## 'உள்ளம் பெருங்கோயில்' நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம்,மே23

திருமதி கோகிலா மகேந்திரனின் 'உள்ளம் பெருங்கோயில்' நூல் அறிமுகவிழா இன்று(23.05.2010) ஞாயிற்றுக்கிழமை 9மணிக்கு மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அதிபர் திருமதி சிவமலர் சுந்தர பாரதி தலைமையில் இடம்பெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினர்களாக வலிகாம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தம்பதியினர் கலந்துகொள்வர்.

வெளியீட்டுரையை வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் நிகழ்த்துவார். முதற் பிரதியை இராமநாதன் கல்லூரி அதிபர் ஆனந்தி சிவஞானசுந்தரம் பெற்றுக் கொள்வார்.

ஆய்வுரையைப் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஓய்வுபெற்ற அதிபர் கவிஞர் சோ.பத்மநாதன் நிகழ்த்துவார். திருமதி பகீரதி கணேசதுரையின் நெறியாள்கையில் உருவான கலை நிகழ்வுகளும் இங்கு இடம் பெறும். (50-55)

## உலக அன்னையர் தின நிகழ்வு

நவாலி, மே 23

நவாலி ஊன்றுகோல் அறப்பணியகம் நடத்தும் உலக அன்னையர் தினம் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணியளவில் நவாலி முருகானந்தா சனசமூக நிலைய மண்டபத்தில் சி.விஜயகுலசிங்கம் தலைமையில் நடைபெறும். (க)

## மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தின் தொடர்புக் கோபுரத்தை வீழ்த்தியது 'லைலா'!

யாழ்ப்பாணம், மே 23

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு வீசிய 'லைலா' புயல் காற்றினால் யாழ். மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தின் 100 அடி உயரமான தொலைத் தொடர்புக்கோபுரம் முறிந்து விழுந்தது.

யாழ்.மாவட்டத்தில் நடைபெறும் மிதிவெடியகற்றும் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்காக இந்தத் தொலைத்தொடர்புக் கோபுரம் அங்கு அமைக்கப்பட்டிருந்தது.

இந்தக் கோபுரமே லைலா புயல் காற்றினால் முறிந்து விழுந்தது. முறிந்து விழுந்த தொலைத் தொடர்புக் கோபுரத்தை சீரமைக்கும் பணியில் மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை -

யாழ்.செயலக வளாகத்தில் நின்ற மரங்களின் கிளைகளும் இந்தப் புயல் காற்றினால் முறிந்துவிழுந்தன. (50-9-288)

## அரியாலைப் பகுதியில் மீள்குடியமரவுள்ள மக்களின் தேவைகள் குறித்து முன்கூட்டியே திட்டமிடுவதற்கு முடிவு

நல்லூர், மே 23

அரியாலையின் சில பகுதிகளில் மக்கள் மீளக் குடியேற அனுமதிக்கப் படவுள்ளனர். எனவே இந்தப் பகுதி மக்களின் தேவைகள் குறித்து முன்கூட்டியே திட்டமிட்டு அதை நடைமுறைப் படுத்த எண்ணியுள்ளோம் என நல்லூர் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன் தெரிவித்தார்.

அரியாலை இல. ஜே/89, ஜே/90 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த ஆறு கிராமங்களில் இருந்து இடம் பெயர்ந்து வேறு பகுதிகளில் வசிக்கும் மக்களை மீள்குடியேற்றம் செய்வது தொடர்பாக அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை குறிப்பிட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்களுடனான கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடல் குறித்து உதவித்திட்டமிடல் பணிப்பாளர் சுரேந்திரநாதன் மேலும் கூறியவை வருமாறு:

இந்தப் பகுதிகளில் மீளக்குடியேறும்போது அந்த மக்களின் வாழ்வாதாரத் தேவைகள், அபிவிருத்திகள் குறித்த ஒழுங்குமுறைகள் தேவை. மக்களின் பங்களிப்புடன் நடைமுறைப் படுத்தப்படாத திட்டங்கள் முழுமையடையா. இந்தப் பகுதிகளின் தேவைகளை நிறைவேற்ற அரச சார்பற்ற நிறுவனங்கள் பல முன்வந்துள்ளன. மிகவும் முக்கிய தேவைகளில் உள்ள சுகாதாரம், குடிதண்ணீர், வீதிகள் குறித்தும் ஏனைய வசதிகள் குறித்தும் மக்கள் எடுத்துக் கூறினர். அவை தொடர்பாக நிறுவனங்களின் உதவிகள் பெறக் கூடியதாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மக்களின் பங்களிப்புடன் செயற்படுத்தக் கூடியதாகவும் இது இருக்க வேண்டும் - என்றார்.

'சோஆ' நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் யூட் வோல்டன் கருத்துக்கூறுகையில்,

போதிய அளவு நிதி இன்மையால் சோஆ நிறுவனமும் சரி இதர நிறுவனங்களும் சரி தனித்து தேவைகளை நிறைவேற்றி உதவ வாய்ப்புக்கள் இல்லை. அனைத்து நிறுவனங்களுடனும் இணைந்துதான் இவற்றைச் செய்ய முடியும் - என்றார்.

இரு பிரிவுகளையும் சேர்ந்த 300க்கும் அதிகமான மக்கள் இதில் கலந்துகொண்டு தங்கள் பகுதியின் தேவைகளை எடுத்துக் கூறினார்கள். (50-111)

## உள்ளூர் உற்பத்திகளின் கண்காட்சி யாழ்.மத்திய கல்லூரியில் அடுத்த வாரம்

### பஸில் ராஜபக்ஷ திறந்து வைப்பார்

நல்லூர்,மே23

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் உள்ளூர் உற்பத்திகளின் கண்காட்சியும் விற்பனையும் எதிர்வரும் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெறும்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில்ராஜபக்ஷ கண்காட்சியைத் திறந்துவைப்பார்.

30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை மூன்று தினங்கள் நடைபெறவுள்ள இக்கண்காட்சியில் விவசாயம், கால்நடை, மீன்வளம், பனை தென்னைவள அபிவிருத்தி, தொழிற்றுறை, சமூகசேவைகள், ஆயுர்வேதம், சித்த வைத்தியம், நன்நடத்தை, விஞ்ஞான தொழில்நுட்பம் ஆகிய துறைகளுடன் தனியார் துறையும் கிராம அபிவிருத்தித் திணைக்களத்துடன் இணைந்து தமது உற்பத்திகளைக் காட்சிப்படுத்தவுள்ளன.

தினமும் காலை 9 மணிமுதல் மாலை 6 மணிவரை பொதுமக்கள் காட்சியைப் பார்வையிடமுடியும் என யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி அ.ந.ஜெயராஜன் தெரிவித்தார். (50-111-288)

## இலங்கை கிரிக்கெட் சபையின் மத்தியஸ்தர் பயிற்சி நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே23

இலங்கை கிரிக்கெட் சபையின் மத்தியஸ்தர் குழுவின் ஏற்பாட்டிலும் யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் ஒழுங்கமைப்பிலும் கிரிக்கெட் மத்தியஸ்தர் பயிற்சி நாளை திங்கட்கிழமை முதல் 26 ஆம் திகதி புதன்கிழமை வரை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிக்களை வழங்குவதற்காக சர்வதேச மத்தியஸ்தர் குழாமில் அங்கத்தவர்களாகவுள்ள இலங்கை மத்தியஸ்தர்களான குமார் தர்மசேன, விஜயவர்த்தன, ரன்மோர் ஆகியோர் யாழ். வரவுள்ளனர்.

அண்மையில் நடந்த கிரிக்கெட் மத்தியஸ்தர் பரீட்சையில் சித்தியடைந்த 27 மத்தியஸ்தர்களும் இப்பயிற்சிக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இப்பயிற்சிகளில் முழுமையாக பங்குபற்றுபவர்களே இலங்கை கிரிக்கெட் மத்தியஸ்தர் குழாமில் உள்வாங்கப்படுவர்.

இப்பயிற்சிகளை வழங்குவதற்கு உதவியாக கிரிக்கெட் போட்டிகள் யாழ். மாவட்ட பாடசாலைகளில் கிரிக்கெட் சங்கத்தின் அனுமதியுடன் ஒழுங்கு படுத் தப்பட்டுள்ளன. இப்போட்டிகள் சென்.பற் றிக்ஸ், யாழ்.சென்றல், யாழ்ப்பாணக் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரிகளில் நடைபெறும்.

இப்பயிற்சியின் ஆரம்ப நிகழ்வும் விளக்கக் கூட்டமும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.45 மணிக்கு சென். பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெறும். இந்நிகழ்வுக்கு இறுதியாக நடைபெற்ற மத்தியஸ்தர்கள் பயிற்சியில் சித்தியடைந்த 27 பேரும் அழைக் கப்பட் டுள்ளனர். (50)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 10 | 24.05.2010 |
| | திங்கட்கிழமை |
| திதி | : ஏகாதசி |
| | மு.ப.10.03 வரை |
| நட்சத்திரம் | : அத்தம் |
| | பி.ப 2.14 வரை |
| சுபநேரம் | : 11.52 - 01.22 |
| ராகுகாலம் | : 07.22 - 08.52 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துகின்றோம்

மட்டக்களப்பு பெரிய கல்லாறு அருள்தரு கடல் நாச்சி தாயாரின் மகா கும்பாபிஷேகத்தை கடந்த (19.05.2010) புதன்கிழமை வெகு சிறப்பாகவும் பக்தியோடும் நடத்தி வைத்த சபரிமலை குருசுவாமி சபரீசகான விநோதன் உரும்பிராய் தாணு வாசுதேவகுருக்கள் அவர்களையும் சக உதவி குருமார்களையும் ஊர் பொதுமக்களும் பரிபாலன சபையினரும் மனமார வாழ்த்தி நிற்கின்றோம்.

தலைவர்
வண்ணக்கர் க.ரேபின்பராசா.

[98577]



நீர்வேலியில், MAY 27th திகதி BBS இன் புதிய பாலர்பாடசாலை ஆரம்பம்.

8 Anniversary

சர்வதேச தரத்திலான ஆங்கிலத்துடன் தமிழிலும்

பாலர் பாடசாலை

Play Group 2-3 Years | Montessori 3-4 Years
Pre School 4-5 Years

கற்பித்தல் முறை:
- சர்வதேசத்தில் அங்கீகரிக்கப்பட்ட Dr.Maria Montessori & Canadian Early Learning Method
- ஆங்கில மொழியில் சர்வதேச தரத்திற்கேற்ப பாடத்திட்டம்
- அங்கீகரிக்கப்பட்ட ஆங்கிலப் பாடநெறிகள்

விரைவில்....! உடுப்பிட்டியிலும்.

வேறு கிளைகளில் புதிய தவணைக்கான மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் உள்ளன.

விசேட பாலர் நிகழ்ச்சிகள்
English Concert, முத்தமிழ் விழா, ஒளிவிழா, பட்டமளிப்பு விழா, மாணவர் சித்திரம், கைவேலை, கண்காட்சி, Sports Meet.

Contact : 021 2225796, 0776646357.

BRITISH BUSINESS SCHOOL

| | |
|---|---|
| நீர்வேலி: | 4th கட்டை, நீர்வேலி வடக்கு, நீர்வேலி. |
| பிரதான வளாகம்: | 140, கோவில் வீதி, யாழ்ப்பாணம். 021-2225796 |
| சாவகச்சேரி: | 11, தாமோதரம்பிள்ளை வீதி, சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலைக்கு மிக அருகாமையில் |
| கோப்பாய் : | பருத்தித்துறை வீதி, கோப்பாய் மத்தி (எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில்). |
| மானிப்பாய்: | 252, ஆலடிச் சந்தி, யாழ் வீதி, மானிப்பாய். |
| சுன்னாகம் : | கே.கே.எஸ் வீதி, மல்லாகம், Lakshmi Cottage ( Near the New Court). |
| புலோலி: | ஸ்ரீ பத்மநாதன் இல்லம், மந்திகை. |


## செயலமர்வு

வலிகாமம் கல்வி வலய விசேட கல்வி அலகின் செயலமர்வு எதிர்வரும் 27ஆம் திகதி வியாழக்கிழமை இராமநாதன் கல்லூரி விசேட கல்வி அலகில் நடைபெறவுள்ளது.

இதில் விசேட கல்விக்குப் பொறுப்பான ஆசிரியர்களைக் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (201-38)

## காரைநகரில் கடை உடைத்து திருட்டு

காரைநகர் பழைய கண்டியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்று இரவு வேளையில் உடைக்கப்பட்டு பல ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

கடந்த வாரம் இடம்பெற்ற இந்த திருட்டுச் சம்பவத்தில் குறித்த வர்த்தக நிலையத்துக்குள் ஓடு பிரித்து இறங்கிய திருடர்கள் அங்கிருந்த பால்மா வகைகள், கிற்காட், அழகு சாதனப் பொருள்கள் உட்பட பல ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களை திருடிச் சென்றுள்ளனர். இது தொடர்பாக வர்த்தக நிலைய உரிமையாளர் அப்பிரதேச கிராம சேவையாளரிடம் முறைப்பாடு செய்துள்ளார். (50-250)


யூனியன் வங்கியின் தங்க நகை அடகுச் சேவை

உங்கள் உடனடித் தேவைக்கு அதிகூடிய பணத் தொகை.....

எங்களை நாடுங்கள்

24 கரட் தங்கப் பவுணுக்கு ரூபா.27000

22 கரட் தங்கப் பவுணுக்கு ரூபா 26000

மாதாந்த வட்டி வீதம் 1.1 %

அடகுக்கடனை பகுதி பகுதியாகத் திருப்பி செலுத்துதல், புதுப்பித்தல், மீளப்பெறக்கூடிய வசதி

அத்துடன்.....

சிறுவர் சேமிப்புக் கணக்கிற்கு 10% உயர் வட்டி வீதமும் அன்பளிப்புக்களும்

62/17, ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021 222 4567-8

130-132, புகையிரத வீதி, சுன்னாகம்.
தொ.பே.இல. 021 2240930-1

(இ/567916)



CAT Certified Accounting Technician

பிரிவு II - 29.05.2010, 05.06.2010, 06.06.2010



அடிப்படை தகுதிகளை எதிர்பார்ப்பவர்கள் / G.C.E. (O/L) பரீட்சை எடுத்தவர்கள் / 16 வயதிற்கு மேற்பட்டவர்கள் → CAT → ACCA → MBA; CAT → MSER → Degree B.Sc (Hons) UK; ACCA → Degree B.Sc (Hons) UK

Jaffna Technical Institute
Unit of CAT
No.46, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
E-mail: itiedu@gmail.com

CAT



COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250

மாணவர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் கணனி ஆர்வலர்களுக்குமான அனைத்து தொழில்சார் கணனிக்கற்கை நெறிகள் ஆரம்பமாகின்றன....

| | | |
|---|---|---|
| PROFESSIONAL DIPLOMA IN MICROSOFT OFFICE 3 Months 3,500/= | DIPLOMA IN PRINTING TECHNOLOGY & DESK TOP PUBLISHING 4 Months ~~22,500/=~~ 4,500/= | DIPLOMA IN SERVER TECHNOLOGY & WEB PAGE DESIGNING 3 Months ~~22,500/=~~ 4,500/= |
| DIPLOMA IN GRAPHIC DESIGNING & ADVERDISEMENT MARKETING 4 Months ~~22,500/=~~ 4,500/= | DIPLOMA IN HARDWARE ENGINEERING & NET WORKING 3 Months ~~20,000/=~~ 4,000/= | DIPLMA IN AUTO CAD & ARCETECTURE DESIGNING 3 Months ~~22,500/=~~ 4,500/= |
| DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING & E-COMMERCE 3 Months ~~22,500/=~~ 4,500/= | DIPLOMA IN COMPUTER SCIENCE & PROGRAMMING 4 Months ~~22,500/=~~ 4,500/= | HONOURS DIPLOMA IN INFORMATION TECHNOLOGY 4 Months ~~32,500/=~~ 6,500/= |

50% Off Advance Courses

DIPLOMA IN FILM TECHNOLOGY & VIDEO EDITING ~~10,000/=~~ 5,000/=
DIPLOMA IN STUDIO TECHNOLOGY & MULTI MEDIA ~~9,500/=~~ 4,750/=

புதிய பிரிவுகள் ஆரம்பம்

100% செய்முறைப் பயிற்சி
தவணை முறையில் பாடநெறிக்கட்டணம்

Batch i :- 25.05.2010 10am or 3pm
Batch ii :- 26.05.2010 10am or 3pm
Batch iii :- 29.05.2010 10am or 3pm
Batch iv :- 30.05.2010 10am or 3pm

ஒவ்வொரு மாணவர்மீதும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.

1 Week Course
Diploma in Video Editing
Diploma in Hrdware Engineering
Diploma in Graphic Designing

Every Monday To Friday
Srart At 9Am To 2Pm


## மரண அறிவித்தல்

### திருமதி மருதனாச்சிப்பிள்ளை இராசதுரை



சுழிபுரத்தை பிறப்பிடமாகவும், சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மருதனாச்சிப்பிள்ளை இராசதுரை 15.05.2010 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர் - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராசதுரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நாகம்மா, மகேஸ்வரி (அதிபர்,இலுப்பைக்குளம் தமிழ் வித்தியாலயம்), அம்பலவாணர் (கணக்காளர், லண்டன்) மற்றும் இராசரட்ணம் (தேவன்- இளைப்பாறிய விலைமதிப்பீட் டுப் பரிசோதகர்), புனிதவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் புஸ்பராணி (முகாமையாளர், கிராமிய வங்கி, மானி/ப.தெ.வ. அ.கூ.சங்கம்), சறோஜினிதேவி, புஸ்பமலர் (பிரதி அதிபர், மானிப்பாய் சென். ஆன்ஸ் றோ.க.த.க. பாடசாலை), நந்தினி தேவி (ஆசிரியை, ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாசாலை), காலஞ்சென்ற விமலலோஜினி (ஆசிரியை, மானிப்பாய் மகளிர் கல்லூரி) மற்றும் விமலாம்பிகை (பிரான்ஸ்), ஜெயமுகானந்தன் (பிரதித்திட்டமிடல் பணிப்பாளர், மீள்குடியமர்த்துகை அமைச்சு), காலஞ்சென்ற ஜெயசிவானந்தன் (சித்தமருத்துவ பீட மாணவன்) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற வரதராஜன் மற்றும் ஜெயராசா (பிரான்ஸ்), பேரின்பநாயகம் (மேற்பார்வையாளர்,சங்கானை அரசினர் வைத்தியசாலை), தியாகராசா, தர்மகுலசிங்கம் (சமுர்த்தி உத்தியோகத்தர்,தெல்லிப்பழை), சந்திரகாசன் (பிரான்ஸ்),கதிர்மகள் (ஆசிரியை, கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியும் சிந்துஜா (ஆசிரியை, ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாசாலை),ரம்ஜா,றஜீவன் (3 ஆம் வருட மருத்துவபீட மாணவன், யாழ்.பல்கலைக்கழகம்),வேதிகா (கொமர்ஷல் வங்கி, நெல்லியடி), சகானா, சிவானுஜன், மஹிஷிஜா, செந்தூரன், கஜிஷியா,பவதாரணி, பவானுஜன், விமலலோஜன், சுவேதா, ஜெயசிறி (போதகர், அசெம்பிளி ஒவ்கோட், மானிப்பாய்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

எச்சாட்டி,சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

(98418)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோ. சைக்கிள் மோதி குடும்பப்பெண் படுகாயம்

சாவகச்சேரிச் சந்தைக்கு சைக்கிளில் சென்றுகொண்டிருந்த குடும்பப் பெண் ஏ-9 வீதியில் வந்த மோட்டார் சைக்கிள் மோதிப் படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை சங்கத்தானையில் இடம்பெற்றது. சங்கத்தானையைச் சேர்ந்த சுதாகரன் கலாநிதி (வயது-34) என்ற பெண்ணே விபத்தில் காயமடைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (50-207)


## 60 ஆவது ஆண்டில்

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு,

எமது ராஜு ஸ்ரோர்ஸ் ஸ்தாபனம் இன்று 60ஆம் ஆண்டில் கால்பதிக்கும் ஒரு பொன்னான நாள் என்பதனை இனிதே அறியத்தருகின்றோம்.

தவிர்க்க முடியாத காரணத்தால் எமது ஸ்தாபனம் எந்தவித கொண்டாட்டமும் கொண்டாடவில்லை என தெரிவித்துக்கொள்கிறோம்.

ராஜு ஸ்ரோர்ஸ்,
67, 69 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P. 222-5224


## கண்ணீர் அஞ்சலி



எமது கழக உறுப்பினர் த.ரகுராஜ் (U.K.) அவர்களின் அம்மம்மாவும் எமது கழக நலன்விரும்பிகளான திருமதி புவனராணி தர்மரட்ணம், செ.ஜெகதீஸ்வரன் (ஜெக்கா) அவர்களின் பாசமிகு தாயாரும், கழக ஆலோசகர் திரு.K. தர்மரட்ணம் அவர்களின் அன்பு மாமியாருமாகிய

அன்னப்பிள்ளை செல்லையா [தர்மர், இராசா மில் - கொக்குவில்]

அவர்களின் மறைவையிட்டு எமது கழக சமூகம் ஆழ்ந்த துயர்கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, அவரது பிரிவினால் துயறுற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(சி/567914)

சம்பியன் லேன்,
கொக்குவில்.

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகம்,
வளர்மதி நிறைவாழ்வகம்.

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னப்பிள்ளை செல்லையா



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட கொக்குவில் (ராஜா அரிசி ஆலை உரிமையாளர்) காலஞ்சென்ற K.P.செல்லையா (தருமன்) அவர்களின் அன்பு மனைவி அன்னப்பிள்ளை 18.05.2010 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் புவனம், விக்னராஜா, கமலா, ரஞ்சிதம், லீலா, சாந்தா, லலிதா, செல்வரட்ணம், பத்மினி, கேதீஸ்வரன், ஜெகதீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் தர்மரட்ணம், கிருஷ்ணமூர்த்தி, சந்தான சிவயோகராஜா, ராஜேஸ்வரி, நிமியா, சாந்தினி, காலஞ்சென்றவர்களான நல்லையா, தெட்சணாமூர்த்தி, பத்மநாதன், சத்தியமூர்த்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் ரகுராஜ் - புனிதா, ஜெயராஜ், நிமல்ராஜ் - பிரியா, லேக்கா - செழியன், கஜேந்திரன் - நந்தினி, தமீந்திரன், அனுஷா - சிவபாலன், கிரிஜா - ஷாம்ராஜ், ஷகிலா - ஜீவகுமார், பிரதீப் - சோனியா, பவித்திரன், லஷ்மன் - தர்ஷனா, சுஜாதா - ஷாகீர், கங்கா - நந்தசுதன், ஷங்கர், ஷக்தி, ஷங்கீதா - மகேன், சரீரா, உத்தமி - அனுஜன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் றக்ஷன், ஆர்த்தி, ஜெகாஷ், ஜெரமி, ஈசன், நிமலன், ஷ்யாம், ஆதவன், கவி, அக்ஷயன், மக்ஷத், ஷத்தீப், துவாரகன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் நேற்று சனிக்கிழமை காலை 22.05.2010 காலை 8 மணியிலிருந்து பி.ப. 6 மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. இன்று காலை 23.05.2010 பூதவுடல் இறுதிக்கிரியைகளுக்காக காலை 8 மணிமுதல் வைக்கப்பட்டு 2 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

20, 6/4, Perera Lane, (சி/567917) தகவல்:
Wellawatte. T.P. 2362436 குடும்பத்தினர்.

## தசாஹ கிருஹயக்ஞ அழைப்பிதழ்

நிகழும் விகிர்தி வருடம் வைகாசித் திங்கள் முதலாம் நாள் 15.05.2010 சனிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

திருமதி சச்சிதானந்தேஸ்வரக் குருக்கள் இராஜராஜேஸ்வரி அம்மா

அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

| | |
|---|---|
| வைகாசி 10 ஆம் நாள் 24.05.2010 திங்கட்கிழமை | மு.ப. 10.30 மணிக்கு தசாகம். |
| வைகாசி 11 ஆம் நாள் 25.05.2010 செவ்வாய்க்கிழமை | ஏகோதிஷ்டம், மாசியம். |
| வைகாசி 12 ஆம் நாள் 26.05.2010 புதன்கிழமை | சபிண்டிகரணம். |
| வைகாசி 14 ஆம் நாள் 28.05.2010 வெள்ளிக்கிழமை | மு.ப. 10 மணிக்கு கிருஹயக்ஞம், சமாராதனை (மதியபோசனம்) |

இவ் வைபவங்களில் தவறாது பங்குபற்றுவதுடன் வெள்ளிக்கிழமை 28.05.2010 சமாராதனை நிகழ்விலும் (மதியபோசனம்) கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

வெள்ளெருவைப்பிள்ளையார் கோயிலடி,
கோப்பாய். (98594)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


## வீடு / காணி விற்பனைக்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் 33, அராலி வீதியிலுள்ள 3 பரப்பு 0.4 குழி காணியில் அமைந்துள்ள வீடு தற்போதைய நிலையில் உடன் விற்பனைக்குண்டு. விரும்புவோர் நேரில் சென்று பார்வையிட்டு தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
இல : 011 2733614



## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ, அவிட்டம் முதலாம் பாதம், தனியார் வங்கி ஒன்றில் உதவி முகாமையாளர் ஆக கடமை புரியும் 79 ஆம் ஆண்டு பிறந்த செவ்வாய்க் குற்றமில்லாத சூரியன், செவ்., ஒரே வீட்டில் அமைந்த 44 கிரக பாவமுடைய மணமகனுக்கு அழகான பட்டதாரி மணமகள் தேவை.

தொடர்பு: 0770610943



## ஹோட்டல்கள்/உணவு விடுதிகள்



★சமைத்த உணவுகளை சூடாகவும் சுகாதாரமுறையிலும் பழுதடையாமல் வைத்திருக்கும் கண்ணாடிப்பெட்டி

★றொட்டி, அப்பம் ஆகியவற்றை சுத்தமான முறையில் தயாரிப்பதற்குத் தேவையான மேசைகள்

★உணவகங்களில் சூடான நீர், குளிர்ந்த நீர் பெறுவதற்கான தண்ணீர்த் தாங்கிகள்.

யாழ்ப்பாணத்தில் இப்பொழுது கிடைக்கின்றது.

### நூபதி காட்சியறை

யாழ்.மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை. 0777427777

உற்பத்தியாளர்
பென்ட்லி புரொடக்ஸ் கொம்
மிரிகம
0332273235, 0777768172


## தேர் வெள்ளோட்டம்

நீர்வேலி,மே 23

நீர்வேலி வடக்கு அருள்மிகு இராஜராஜேஸ்வரி அம்மன் கோயில் என அழைக்கப்படும் பழைய அம்பாள் கோயிலுக்கென புதிதாகச் செய்யப்பட்ட சித்திரத் தேருக்கான வெள்ளோட்ட விழா நாளை திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

சித்திரத்தேரை ஆகம, சிற்ப சாத்திரங்களுக்கு அமைய உருவாக்கிய மயிலிட்டியைச் சேர்ந்த சிற்பக் கலாநிதி ஸ்தபதி தம்பிப்பிள்ளை சிறீதரன் இவ்விழாவில் கௌரவிக்கப்படவுள்ளார். (ஒ-110)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அம்பலவாணர் பாரததேவி

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



சிங்கம் லேன், உடுவிலைப் பிறப்பிடமாகவும், குப்பிழானை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அம்பலவாணர் பாரததேவி நேற்று (22.05.2010) சனிக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்பு அம்பலவாணரின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற திருமதி அருள்ராசலிங்கம் ரேவதிதேவி, மற்றும் ரூபலிங்கம் (டென்மார்க்), தணிகாசல தேவி (ஜேர்மனி), காலஞ்சென்ற இந்திராதேவி ஆகியோரது பாசமிகு தாயாரும், அருள்ராசலிங்கம் (தாதிய உத்தியோகத்தர் - தெல்லிப்பழை), சுகந்தி, சிவஞானம் ஆகியோரின் அன்பு மாமியாரும், அனுசன், அரவிந்தன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காடாகடம்பை மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குப்பிழான் தெற்கு, தகவல்:சி.அருள்ராசலிங்கம்
ஏழாலை. (98601) (மருமகன்).

### சங்கரப்பிள்ளை தேவராஜன்

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை தேவராஜன் நேற்று (22.05.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - நாகம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற சிவமணியின் அன்புக் கணவரும், சுஜாதா (விரிவுரையாளர், இராமநாதன் நுண்கலைப்பீடம், இசைத்துறை), விஜயதர்சினி (CAA கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்), தபேந்திரா (பொறியியலாளர், அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், நிரஞ்சன் (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், பிரதேச செயலகம், சங்கானை), பகீரதன் (ஆசிரியர், யா/கைதடி முத்துக்குமாரசாமி நலன்புரிப் பாட்சாலை), சாலினி (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனாரும், அருண், தருண், திஷாந் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.05.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் கோப்பாயிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோப்பாய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிராமனோடை,
(பிரதேச செயலகத்துக்கு அருகில்) தகவல்:
கோப்பாய் வடக்கு, கோப்பாய். (98596) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி வைத்திலிங்கம் அன்னப்பிள்ளை



புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வைத்திலிங்கம் அன்னப்பிள்ளை நேற்று முன்தினம் (21.05.2010) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - கற்பகம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவயோகம் மற்றும் இலக்குமணபிள்ளை, காலஞ்சென்றவர்களான நாகமுத்து, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், விமலா, ஞானகௌரி, தயாளன், குகதாசன், நிர்மலா, சிவனேசன், மஞ்சுளா ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராமச்சந்திரன், நடராசா, சிவலட்சுமி, றாகினி, சிவகுமார், குமுதா, சிவ்சோதி ஆகியோரின் அன்பு மாமியும், சுகன்யா, சுகர்னா, ஜனனி, சுபைதா, சோபிதா, சுகிர்தா, விதர்சனா, சிந்து, வைகை, சத்தியேந்திரா, யுகேந்திரா, சனேந்திரா, ராகவி, ராகுல், றஜீவன், பிரகவி, மிதிலா, சாகிதா, றீகன், கௌஷா, டினேஷ், லக்ஸ்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சகானா, அஸ்வின், அஜினா, சியான், அஸ்ணவி, வைஸ்ணவி, கவின் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குகன் (தாஸ் கிறீம் ஹவுஸ்),
இல 230, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (98570)

தகவல்:
மக்கள், மருமக்கள்,
மருமகன் : வே. நடராசா
(சேகர் மோட்டோர்ஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மங்களூரில் நேற்று இடம்பெற்ற விமான விபத்தின்போது வீழ்ந்து நொறுங்கிய விமானம் எரிவதையும் விபத்தில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் அழுதவாறு சம்பவ இடத்துக்கு விரைவதையும் படங்களில் காணலாம்.

# நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் முறை; இடதுசாரிக் கட்சிகள் முன்வைக்குமாம்

கொழும்பு,மே23

நிறைவேற்று ஜனாதிபதி முறைக்குப் பதிலாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் முறையை நடைமுறைப்படுத்த வசதியாக அரசமைப்பில் மாற்றம் கொண்டு வருவதற்கான யோசனை ஒன்றை இடதுசாரிக் கட்சிகள் முன்வைக்கவுள்ளன.

அரசில் அங்கம் வகிக்கும் லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, ஜனநாயக இடதுசாரி முன்னணி ஆகிய கட்சிகள் எதிர்வரும் 31ஆம் திகதி கூடி இந்த யோசனை குறித்து விரிவாக ஆராயவுள்ளன.

ஜனாதிபதியின் பதவிக்காலத்தை மூன்றாவது தடவைக்கும் நீடிப்பதனை இடதுசாரிக் கட்சிகள் எதிர்த்து வருகின்றமை என்பது குறிப்பிடத்தக்கது.

நிறைவேற்று அதிகாரம் உள்ள பிரதமர் முறை குறித்து ஆராயப்படும் என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இடதுசாரிக் கட்சிகள் இணைந்து அரசமைப்புக்கான புதிய யோசனைத் திட்டத்தை விரைவில் முன்வைக்கும் என்று கம்யூனிஸ்ட கட்சித் தலைவரும் அமைச்சருமான டி.ஈ.டபிள்யூ குணசேகர தெரிவித்தார். (அ-1)

## இன்றைய கிரிக்கெட் போட்டிகள்

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் ஈ.எஸ்.பி. பேரம்பலம் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தும் ஜொலிஸ்ரார் வெற்றிக்கிண்ணத்துக்கான 30பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரில்-இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு,

காலை 8.30மணி-ஜொலிஸ்ரார் வி.க எதிர் யாழ்.சென்றல் வி.க., மதியம் 1 மணிக்கு -பற்றிசியன்ஸ் வி.க. எதிர் ஜொலிஸ்ரார் வி.க. (ஒ-23)

## அகதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து அவர் மேலும் தெரிவித்த தாவது:-

முகாமிற்குச் செல்வதற்கு இராணுவ அதிகாரிகள் மறுப்புத் தெரிவித்ததுடன் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவின் கவனத்திற்கு கொண்டுவந்தோம். பத்து நிமிடத்தில் பதில் அளிப்பதாக தெரிவித்தார். பத்து நிமிட நேரத்தில் தொடர்பு கொண்டபோது அரைமணி நேரம் அவகாசத்தை அவர் கேட்டார். ஆனால் அரைமணி நேரத்தின் பின் அவருடன் தொடர்பு கொள்ள முடியவில்லை.

நேற்றிரவு வரை அரசுத்தரப்பிடம் இருந்து பதில் ஏதும் கிடைக்கவில்லை.

முகாமில் உள்ள மக்களை சந்தித்து அவர்களது பிரச்சினையை அறிய நீண்டகாலமாக முயற்சித்தோம்,அரசுடன் இந்த விடயத்தில் முட்டி மோதும் போக்கை நாம் கடைப்பிடிக்கவில்லை. மோதல் போக்கைத் தவிர்த்தோம்.

தேர்தல் முடிந்து மக்களின் பிரதிநிதிகளாக அங்கு செல்ல முடிவு செய்த எம்மை தடுத்திருந்தது, இலங்கை அரசு தமிழர்களை எவ்வாறு நடத்துகிறது என்பதை உலகநாடுகள் புரிந்துகொள்ளவேண்டும்.

அரசு பழைய நிலையில் இருந்து இறங்கி வந்துள்ளதாகக் கருதினோம். ஆனால் அது பழைய நிலையிலேயே இருப்பதை உணர முடிகிறது.

தமிழ் மக்கள் இந்த நாட்டில் 2ஆம் தரப் பிரஜைகளாகத் தொடர்ந்து நடத்தப்படுவதையே நேற்றைய சம்பவம் உணர்த்துகின்றது- என்றார் சம்பந்தன். (அ-1)

## தமிழகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக அவர் மேலும் விவரித்தவை வருமாறு, இலங்கையில் இடம்பெற்ற போர் காரணமாக தமிழகம் சென்று முகாங்களில் தங்கியுள்ளவர்களை அழைத்து வந்து அவர்களின் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துவதென எமது அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

அங்கு முகாங்களில் தங்கியுள்ள சுமார் ஒரு லட்சம்பேரை அழைத்துவந்து மீளக்குடியமர்த்துவது தொடர்பாக திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன். இந்தச் செயற்பாட்டுக்கு வெளிவிவகார அமைச்சும் உதவிகளை வழங்கும் என்றார் அமைச்சர்.

இதேவேளை மீள்குடியமர்த்தப்படுபவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்க சர்வதேச நிறுவனங்களுடன் ஆராய்ந்து வருவதாக அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் தெரிவித்துள்ளது.

அண்மைக்காலத்தில் 6,687பேர் விமானம் மூலம் அழைத்து வரப்பட்டு மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர் என்றும் அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது. (அ-1)

## மங்களூர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதில் விமானத்தில் பயணம் செய்த 6 விமான ஊழியர்கள், 19 குழந்தைகள் உட்பட 160 பேர் உடல் கருகிப் பலியாகினர். விபத்தின் போது ரயர் வெடித்ததால், விபத்து நடக்கப் போவதை உணர்ந்து விமானத்தில் இருந்து குதித்த 8 பேர் உயிர் தப்பினர்.

விமான விபத்து நடைபெற்ற இடத்தில் மீட்புப் பணிகளில்-இந்திய மீட்புப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர். நேற்றிரவு வரை 116 பேரின் உடல்களை அவர்கள் மீட்டிருந்தனர். பலியானவர்களில் பெரும்பாலானவர்கள் கேரளா, கர்நாடக மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

விமான விபத்துக்குறித்து இந்திய ஜனாதிபதி பிரதீபா பட்டீல், பிரதமர் மன்மோகன் சிங், தமிழ்நாடு, கேரளா, கர்நாடக முதலமைச்சர்கள் அனுதாபம் தெரிவித்துள்ளனர். உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணமாக இரண்டு லட்சம் ரூபாவை வழங்குமாறு மத்திய அரசு அறிவித்துள்ளது. (ஒ-6)

## அதிபர்கள் கூட்டம்

பருத்தித்துறை,மே23

வடமராட்சி கல்வி வலய அதிபர்களுக்கான கூட்டம் நாளை திங்கட்கிழமை புலோலி மெடிஸ்த மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

சகல அதிபர்களையும் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஒ-10)

## வற்றாப்பளை உற்சவம்; போக்குவரத்து அனுமதி

யாழ்ப்பாணம்,மே23

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் நாளை திங்கட்கிழமை நடைபெறவிருக்கும் வருடாந்த பொங்கல் விழாவில் யாத்திரிகர்கள் கலந்துகொள்ளச் செல்வதற்காக போக்குவரத்து அனுமதியை படைத்தரப்பு வழங்கியுள்ளது என்று அரச அதிபர் கே.கணேஸ் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அரச அதிபர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளமை வருமாறு, வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் விழாவுக்கு நாளை 24 ஆம் திகதி யாத்திரிகர்கள் செல்வதற்கான போக்குவரத்து அனுமதியை முல்லைத்தீவு, கிளிநொச்சி கட்டளைத் தளபதிகள் வழங்கியுள்ளார்கள்.

இதற்காக இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் யாழ்ப்பாணம், காரைநகர், பருத்தித்துறை பஸ்சாலைகளில் இருந்து இலங்கை போக்குவரத்துச் சேவை பஸ்கள் மூலம் பயணங்களை யாத்திரிகர்கள் மேற்கொள்ள முடியுமென இலங்கைப் போக்குவரத்துச் சேவையின் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்- என்றுள்ளது. (ஒ-1)

## போர்க்குற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பாக தமக்கு ஆலோசனை வழங்க நிபுணர் குழு ஒன்றை நியமிக்க ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ - மூன் முயற்சிகளை எடுத்துவரும் நிலையில், அவரை அமைச்சர் பீரிஸ் ஐ.நா தலைமையகத்தில் சந்திக்கின்றார்.

மனித உரிமைகள் தொடர்பாக அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் பீரிஸ் பான் கீ - மூனுக்கு விளக்கம் அளிக்கவிருக்கின்றார் என்று தெரிவிக்கப்பட்டது.

''சனல்4'' தொலைக்காட்சி மூலம் வெளிவந்துள்ள, தமிழ் இளைஞர்கள் மீதான சித்திரவதை மற்றும் கொலைகள் சம்பந்தப்பட்ட காட்சிகள் தொடர்பாக இலங்கை அரசின் நிலைப்பாடு குறித்தும் அமைச்சர் பீரிஸ், மூனிடம் எடுத்துரைப்பார்.

இந்த விஜயத்தின்போது அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்ரனையும் பீரிஸ் சந்திக்கவிருக்கின்றார் என வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-1)

## நூல் அறிமுக விழா

சாவகச்சேரி,மே23

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலய மண்டபத்தில் இன்று ஞாயிறு பிற்பகல் 3மணிக்கு ஆசிரியர் க.அருந்தவராசாவினால் எழுதப்பட்ட ''புலம் பெயரும் மண் வாசம்'' மற்றும் ''குடும்பத்துள் வாழ்வில்'' ஆகிய இரண்டு நூல்களின் நூல் அறிமுக விழா அதிபர் மு.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ரி.கலாமணி கலந்துகொள்வார்.

நூலின் ஆய்வுரைகளை ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசுவும், தென்மராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் கோ.கைலாசநாதனும் நிகழ்த்துவர். (ஒ-131)

## 'மனிக் பாம்'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விவரங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

மாவை சேனாதிராசா இது குறித்து கூறியவை வருமாறு -

மனிக் பாம் முகாமில் 80 ஆயிரம் பேர் தங்கியுள்ளனர். அவர்களைச் சந்தித்து அவர்களின் நிலைமைகளை அறிந்து கொள்வதற்காக கூட்டமைப்பின் 12 நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுக் காலை 9.30 மணியளவில் அங்கு சென்றிருந்தோம். எம்மவர்களைச் சந்திக்க ஆவலுடன் அங்கு சென்றிருந்த தம்மை முகாமுக்குள் செல்ல படைத்தரப்பினர் அனுமதிக்க மறுத்துவிட்டனர்.

வன்னியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டதாக அரசு அறிவித்த பிரதேசங்களுக்கும் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள வவுனியா 'மனிக் பாம்' முகாமுக்கும் விடுதலைப் புலி உறுப்பினர்கள் தங்கவைக்கப்பட்டுள்ள தடுப்பு முகாம்களுக்கும் செல்வதாக எமது கூட்ட மைப்பின் தலைவர் இரா சம்பந்தன் ஜனாதிபதிக்கு தொலைபேசியில் தெரிவித்திருந்தார். நாம் அங்கு செல்வதை ஜனாதிபதி வரவேற்றார்.

அதன் பிரகாரம் நேற்று முன்தினம் முல்லைத்தீவுப் பகுதிக்குச் சென்றோம். எமது நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் நேற்றுக் காலை வவுனியாவில் அகதிகள் தங்கவைக்கப்பட்டுள்ள 'மனிக்' முகாம் மற்றும் விடுதலைப் புலிகள் தடுத்துவைக்கப்பட்டுள்ள முகாம் ஆகியவற்றுக்குச் செல்ல முடிவு செய்திருந்தோம்.

'மனிக் பாம்' முகாமுக்குச் சென்ற போது, பாதுகாப்பு அமைச்சுச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவின் உத்தரவின் பிரகாரம் முகாமுக்குள் செல்ல அனுமதிக்க முடியாது என்று வன்னி இராணுவ அதிகாரி எங்களிடம் தெரிவித்தார்.

ஒரு மணிநேரம் படை அதிகாரிகளுடன் காரசாரமாக நாம் விவாதித்த போதும், படையினர் முகாமுக்குள் செல்ல அனுமதிக்கவில்லை.

அங்குள்ள மக்களைச் சந்தித்து அவர்களின் துயரங்கள், தேவைகள் போன்றவற்றை அறிந்துகொள்ள ஆவலுடன் சென் றிருந்த எமக்கு பெரும் ஏமாற்றத்தைத் தந்தது.

அதன் பின்னர் மன்னாருக்குச் சென்றோம். அகதிகளை மீள் குடியமர்த்தியுள்ளதாகத் தெரிவித்துவரும் தட்சனார்மருதமடு, மன்னார், விடத்தல்தீவு ஆகிய இடங்களுக்கும் சென்று மக்களைச் சந்தித் துக் கலந்துரையாடினோம். அவர்கள் தங்களுக்குள்ள கஷ்டங்களைத் தெரிவித்தனர்.

திருக்கேதீஸ்வரம் ஆலயத்துக்குச் சென்று வழிபட்டோம் - என்றார் அவர். (அ-ஒ-1)

மாபெரும் கண்காட்சியும், மலிவு விற்பனையும் (இன்றுமுதல்)
★ ஒன்று எடுத்தால் ஒன்று FREE [இலவசம்]
* பேஸ் வோஸ்
* டோனர்
* Milk & Honey சோப்
* பெயானஸ் சோப்
* வேவி சோப்
* Men சோப் (ஆண்களுக்குரியது)
* மேக்கப் பொருள்கள்
* உதட்டு உலர்தல் தடுக்கும் கிறீம்
* கழுத்து கறுப்பு கரும்புள்ளி அகற்றும் கிறீம்
* முகம் கருமை நீங்கி சிவப்பழகு பெற..
* உடல் எடை குறைக்கும் பால்மா
★ உடன் நாடவும் ★ 9 நாள்களில் மாற்றம்
நேரம் : காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை. மேலும் பேசியல், மேக்கப் கெயாஸ் டைல், ஐசிங், வுளவுஸ் கட்டிங், சாறி வேக், தலைமுடி அயன் பண்ணுதல், தலைமுடி சுருட்டுதல் புதிய பயிற்சிகள் ஆரம்பம். உடன் பதிவினை மேற்கொள்ளவும்.
அரவிந்தன் ஸ்ருடியோவிற்கு அருகில்,
461, நாவலர் றோட், அத்தியடிச் சந்தி, யாழ்ப்பாணம். (98578) அட்சயா

பொருளியல்
தனிப்பட்ட வகுப்பும், குழுவாகவும் கற்பிக்கப்படும்
T.P.- 0771386904 / 0775242716
S. சந்திரமதீசன் B.A., S. ஜனார்த்தனன்

வான் விற்பனைக்கு
பாடசாலைச்சேவை, விற்பனை முகவர்களின் விநியோகத்தேவை, பிரத்தியேக வாடகைச்சேவை என்பவற்றுக்குகந்த TOP UP Condition இல் உள்ள வான் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
021 5673818

தேவை
எமது கல்வி நிறுவனத்திற்கு அலுவலக உதவியாளர் (ஆண், பெண்) தேவை.
24.05.2010 திங்கள் காலை 9.00 மணிக்கு சமூகம் தரவும்
DIRECTOR
BITSMANS
கல்வி நிறுவனம் மானிப்பாய் (98585)

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
35 ஆவது வருட சேவை
O/L Day Class
இறுதிப்பிரிவு
(பிரிவு-6) 8.30-2.00
ஆரம்பம்: 24.05.2010
* இதுவே இறுதிப்பிரிவு ஆதலால் 75 மாணவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்.
* தூர இடத்து மாணவர்களுக்கு விடுதி வசதி.
* இம்மாதக் கட்டணம் அறவிடப்படமாட்டா.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.05.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org